



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:244 | 20-03-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

20.03.2026 பங்குனி 6
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.19

திதி:
இன்று அதிகாலை 4.59 வரை பிரதமை பின்பு துவிதியை.

நட்சத்திரம்:
இன்று காலை 5.11 வரை உத்திரட்டாதி பின்பு ரேவதி.

யோகம் :
இன்று அதிகாலை 2.11 வரை சுப்பிரம் பின்பு இரவு 11.42 வரை பிராம்யம் பின்பு ஐந்திரம்.

கரணம்
இன்று அதிகாலை 4.59 வரை பவம் பின்பு மாலை 4.42 வரை பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.18 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 5.11 வரை மகம் பின்பு பூரம்.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 1.30 – 2.30.

இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00.

இன்று சந்திர தரிசனம்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# இந்தியாவின் மின்சார துறையில் முதலீடு செய்ய சர்வதேச முதலீட்டாளர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு

**புதுடெல்லி, மார்ச் 20:**

டெல்லியில் நடைபெற்ற 2026 பாரத் மின்சார உச்சிமாநாட்டில், பிரதமர் மோடி எழுத்துப்பூர்வமாக அனுப்பிய உரையை மத்திய மின்சாரத்துறை செயலாளர் பங்கஜ் அகர்வால் வாசித்தார். அதில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது;-

“உலகின் அதிவேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட, இந்தியா தனது எரிசக்தி பயணத்தில் ஒரு திருப்புமுனையான தருணத்தில் நிற்கிறது. நாம் உள்கட்டமைப்பை வலுப்படுத்தி, அனைவருக்கும் நம்பகமான எரிசக்தி கிடைப்பதை உறுதிசெய்து வருகிறோம். இந்தியாவில் உற்பத்தி செய்யவும், இந்தியாவில் புதுமைகளை புகுத்தவும், இந்தியாவில் முதலீடு செய்யவும், இந்தியாவுடன் இணைந்து வளரவும் சர்வதேச சமூகத்தை நான் அழைக்கிறேன்.

இந்த உச்சிமாநாடு, இந்தியாவின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் அர்த்தமுள்ள உரையாடல்களையும் நீடித்த கூட்டாண்மைகளையும் ஊக்குவிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த உச்சிமாநாடு, மின்சாரம் மற்றும் ஆற்றல் அமைப்புகளை ஒரே தளத்தின் கீழ் கொண்டு வந்து கருத்து பரிமாற்றம், ஒத்துழைப்பு, ஆற்றல் வளர்ச்சி மற்றும் வாழ்க்கை மேம்பாட்டிற்கான பொதுவான பாதையை வகுப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

இது வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்து, நிலைத்தன்மையைக் கொண்டுவந்து, சர்வதேச இணைப்புக்கான நமது கூட்டு உறுதியை பிரதிபலிப்பதோடு, 2047-ம் ஆண்டிற்குள் வளர்ச்சிமிக்க பாரதம் என்ற இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையையும் முன்னெடுத்துச் செல்கிறது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றம் இந்த அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். அதில் 50 சதவீதத்திற்கும் அதிகமான திறன் ஏற்கனவே



எட்டப்பட்டுள்ளது. மேலும் 2030-ம் ஆண்டிற்குள் 500 ஜிகாவாட் திறனை அடைவதற்கான தெளிவான பாதை நம்மிடம் உள்ளது.

ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின்கட்டமைப்பு போன்ற முன்னெடுப்புகள், உலகளாவிய ஒத்துழைப்புக்கான நமது தொலைநோக்குப் பார்வையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. துணிச்சலான சீர்திருத்தங்களின் மூலம், மீள்திறன் கொண்ட விநியோகச் சங்கிலிகளைக் கட்டமைப்பதிலும், மின்கல உற்பத்தியை மேம்படுத்துவதிலும், பசுமை வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், முதலீடுகளை சாத்தியமாக்குவதிலும் இந்தியா ஒரு நம்பகமான எரிசக்தி கூட்டணியாக உருவெடுத்து வருகிறது.

‘சாந்தி சட்டம் 2025’ அணுசக்தித் துறையில் புதிய எல்லைகளைத் திறக்கும். அதே வேளையில், ‘பி.எம். சூர்யா கர் முப்ட் பிஜ்லி யோஜனா’ திட்டம் பரவலாக்கப்பட்ட மின் உற்பத்தி மற்றும் நிலையான நுகர்வை ஊக்குவிக்கிறது.”

இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# யார் என்ன அவதூறு பரப்பினாலும் நம்பாதீர்கள்

## த.வெ.க. தலைமையில் தான் ஆட்சி: விஜய் உறுதி

**சென்னை, மார்ச் 20:**

யார் என்ன அவதூறு பரப்பினாலும் நம்பாதீர்கள், த.வெ.க. தலைமையில் தான் ஆட்சி என்பதில் எப்போதும் உறுதியாக இருக்கிறோம் என்றும் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் விஜய் பேசினார்.

தமிழகத்தில் 2026 சட்டசபைத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில், காங்கிரஸ் கட்சி தவெக கூட்டணிக்கு வரும் என விஜய் தரப்பு பெரிதும் எதிர்பார்த்தது. ஆனால் அது நடக்கவில்லை. இதையடுத்து, தவெக பாஜக இடையே கூட்டணி அமையலாம் என்றும், அமித்ஷா இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்றும் தகவல்கள் வெளியாயின. இதற்கு விஜய் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

த.வெ.க சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நேற்று மாலை மாமல்லபுரத்தில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் நடந்தது. இதில் த.வெ.க. தலைவர்



விஜய் பங்கேற்று, நோன்பு கஞ்சி பருகினார்.

இந்த நிகழ்வுக்காக அவர் நேற்று ஒரு நாள் முழுவதும் நோன்பு கடைபிடித்தார். தொடர்ந்து அவர் தொழுகை நிகழ்விலும் பங்கேற்றார்.

த.வெ.க பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், தேர்தல் பிரிவு மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்பட ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

இதில் பங்கேற்று விஜய் பேசியதாவது:

நாம் அரசியலுக்கு வந்ததில் இருந்ததில் இருந்து சில வதந்திகள் சொல்லப்படுகிறது. அந்த டீம். இந்த டீம் என்று சொன்னார்கள். ஆனால் மக்களின் டீம் என எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. அதன்பிறகு வேறு என்ன அவதூறு பரப்பலாம் என நினைந்து செயல்பட்ட போதும் அது நடக்கவில்லை. இப்படியான நேரத்தில் தான் இந்த கூட்டணி, அந்த கூட்டணிக்கு போகிறார் என பொய்யான பிரச்சாரத்தை செய்து கொண்டிருந்தார்கள். அந்த செய்தியை யெல்லாம் கேட்டு நீங்கள் குழப்பம் அடைந்து இருப்பீர்கள்.எனவே நான் மீண்டும் தெளிவாக சொல்கிறேன், நான்.. நாங்கள்.. எப்போதும் மதசார்பற்ற கொள்கை என்பதிலோ, மதசார்பற்ற சமூக நீதி என்ற நிலைபாட்டிலோ சமரசம் வைத்துக்கொள்ள மாட்டோம். நம்முடைய தலைமையில்தான் ஆட்சி என்பதில் உறுதியாக இருக்கிறோம். நம்முடைய முதல் மாநாட்டில் யாருக்காகவும் எதற்காகவும் எந்தவிதமான சமரசமும் வைத்துக்கொள்ள போவதில்லை. யார் என்ன சொன்னாலும் நம்பாதீர்கள். எல்லாம் வல்ல இறைவனில் அருளால் நாம் நினைத்ததை நிச்சயம் அடைய முடியும். இஸ்லாமிய சகோதரர்களுக்கு எனது ரமலான் நல்வாழ்த்துக்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# டெல்லியில் அமித்ஷா உடன் எடப்பாடி பழனிசாமி சந்திப்பு



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்துறை மந்திரி அமித் ஷாவை சந்திப்பதற்காக நேற்று காலை டெல்லி புறப்பட்டுச் சென்றார். அ.தி.மு.க-பா.ஜ.க. இடையே தொகுதி பங்கீடு இறுதி செய்வதற்காக அவர் டெல்லி சென்றுள்ளார்.

# தமிழகத்தில் மார்ச் 24 வரை லேசான மழை பெய்ய வாய்ப்பு

**சென்னை, மார்ச் 20:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் தெற்கு கர்நாடகத்தின் உள்பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. உள் தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய கேரள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் நாளை (மார்ச் 20) இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

21-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் 22 முதல் 24-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை பள்ளிக்கரணை, ஈரோடு மாவட்டம் வரட்டுப்பள்ளத்தில் தலா 10 செ.மீ, சென்னை மேடவாக்கம், ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டையில் தலா 9 செ.மீ, சேலம் மாவட்டம் சங்கரி துர்க்கம், சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம், சேலம் எடப்பாடி, ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் தலா 8 செ.மீ, கடலூர் மாவட்டம் புவனகிரி, சேலம் மாவட்டம் மேட்டூரில் தலா 7 செ.மீ மழை பதிவாகியுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தபால் வாக்கு; புதிதாக 5 துறைகள் சேர்ப்பு தேர்தல் ஆணையம் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 20:**

தேர்தல் சமயத்தில் அத்தியாவசியப் பணிகளில் இருப்பவர்களுக்கு தபால் வாக்கு செலுத்தும் உரிமை வழங்கப்படுகிறது. இந்த நிலையில், தபால் வாக்கு செலுத்த மேலும் 5 அரசு துறைகளை சேர்ந்த ஊழியர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதன்படி அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள், மின்சார வாரியம், போக்குவரத்து காவலர்கள், சிறைத்துறை மற்றும் தீயணைப்புத்துறையினர் ஆகியோர் தபால் வாக்கு செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

“நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல்களில் முதியோர், மாற்றுத்திறனாளிகள் (PwD), சேவை வாக்காளர்கள் மற்றும் தேர்தல் பணியில் உள்ள வாக்காளர்கள் தபால் வாக்கு மூலம் வாக்களிக்க இந்திய தேர்தல் ஆணையம் (ECI) வசதி செய்கிறது.

1. அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள சட்டப்பேரவைகளுக்கான பொதுத்தேர்தல் மற்றும் 6 மாநிலங்களில் இடைத்தேர்தல்களுக்கான அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) மார்ச் 15, 2026 அன்று அறிவித்தது. அட்டவணையின்படி மார்ச் 16, 2026 அன்று அசாம், கேரளா மற்றும் புதுச்சேரிக்கு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951-ன் பிரிவு 60(c)-ன் படி, 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் மாற்றுத்திறனாளிகள் (PwDs) என அடையாளப்படுத்தப்பட்டவர்கள் தபால் வாக்கு மூலம் தங்கள் வாக்கைச் செலுத்தலாம் என்று ஆணையம் அறிவித்துள்ளது.



3. இத்தகைய வாக்காளர்கள் படிவம் 12D (Form 12 D)-ஐப் பயன்படுத்தி, தேர்தல் அறிவிக்கை வெளியான 5 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட BLO (வாக்குச்சாவடி நிலை அலுவலர்) மூலம் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் (RO) சமர்ப்பிக்க வேண்டும். வாக்குச் சேகரிக்கும் குழுக்கள் வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குகளைச் சேகரிப்பார்கள். இதற்கான கால அட்டவணை தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு வேட்பாளர்களுக்கும் பகிரப்படும்.

4. தேர்தல் தேதியன்று அத்தியாவசியப் பணிகளில் (Essential services) இருக்கும் வாக்காளர்கள், தங்கள் துறையின் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) மூலம் தபால் வாக்கு வசதிக்கு விண்ணப்பிக்கலாம். தீயணைப்புத் துறை, சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, ஆம்புலன்ஸ் சேவைகள், விமான போக்குவரத்து, அரசு சாலைப் போக்குவரத்துக் கழகங்கள் போன்றவை இந்த வசதியின் கீழ் வருகின்றன.

5. தேர்தல் நாள் செய்திக் சேகரிப்பிற்காக தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களும் அத்தியாவசியப் பணிகளில் உள்ள ’வராத வாக்காளர்கள்’ (Absentee voters) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர், அவர்களும் தபால் வாக்கு வசதிக்குத் தகுதியுடையவர்கள்.

6. தேர்தல் பணியில் இருக்கும் ஒரு வாக்காளர் தனது தபால் வாக்கைப் பெற்று, அதில் தனது வாக்கை பதிவு செய்து, வசதி மையத்தில் (Facilitation center) சமர்ப்பிக்க வேண்டும். வசதி மையத்தில் வாக்காளர் முழுமையான ரகசியத்துடன் வாக்களிப்பதை உறுதி செய்ய இந்திய தேர்தல் ஆணையம் (ECI) அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

7. சேவை வாக்காளர்களுக்கு (Service voters) தபால் வாக்குகள் மின்னணு முறையில் அனுப்பப்படும் (ETPBS - Electronically Transmitted Postal Ballot System). வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டவுடன் இவை அனுப்பப்படும். இதற்கான தபால் செலவை சேவை வாக்காளர்கள் ஏற்க வேண்டியதில்லை.

8. பதிவு செய்யப்பட்ட தபால் வாக்குகள் அனைத்தும் வாக்கு எண்ணும் நாளான மே 4, 2026 அன்று காலை 8:00 மணிக்குள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களை (ROs) சென்றடைய வேண்டும்.

9. தேர்தல் நடத்தும் அலுவலர் (RO)/ மாவட்ட தேர்தல் அலுவலர் (DEO) மேற்கண்ட விதிகள் குறித்து அரசியல் கட்சிகள்/போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விளக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






## திருக்குறள் குறள்-564

**இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல்
வேந்தன் உறைகடுகி ஒல்லைக் கெடும்**



நம் அரசன் கடுமையானவன் என்று குடிகளால் கூறப்படும் கொடுஞ்சொல்லை உடைய அரசன், தன் ஆயுள் குறைந்து விரைவில் கெடுவான்.

## சிந்திக்க ஒரு நொடி



மனிதநேயம் என்பது
வானத்தில் இருந்து
குதிப்பதல்ல
சக மனிதனை
மனிதனாக மதிக்கும்
அந்த நேரத்தில்
உதிப்பது

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## தேர்தல் விழிப்புணர்வு பிரச்சார பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தல்




**திருவண்ணாமலை, மார்ச் 20:**
திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக முகப்பில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு மகளிர் திட்டம் சார்பில் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதில் அவசியம் குறித்து வலியுறுத்தும் வகையில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பிரச்சார பேரணியை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப.அவர்கள் இருசக்கர வாகன விழிப்புணர்வு பிரச்சார பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மாற்றுக் கட்சியிலிருந்து விலகி 50-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதிமுகவில் இணைந்தனர்



**திருவண்ணாமலை, மார்ச் 20:**
திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி பூண்டி ஊராட்சி பிராயம்பட்டு கிராமத்திலிருந்து வழக்கறிஞர் பிரதாப் முன்னிலையில் புதியதாக இளைஞர்கள் 50 -க்கும் மேற்பட்டவர்கள் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி திருவண்ணாமலை தெற்கு போளூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு.அக்ரி. எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் அதிமுகவில் 50-க்கும் மேற்பட்ட மாற்று கட்சியில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்தனர். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 2026 பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம்



**திருவண்ணாமலை, மார்ச் 20:**
திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தலைமையில், சட்டமன்றத் தேர்தல் நடத்தும் அலுவலர், மண்டல அலுவலர்கள் இதர தொடர்பு அலுவலர்களுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# உலக சிட்டுக்குருவிகள் தினம் - 2026




உலக சிட்டுக்குருவிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20-ம் தேதி கொண்டாடப்படுகிறது. சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதை கவனத்தில் கொள்ள, சிட்டுக்குருவிகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, சிட்டுக்குருவிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்க, சிட்டுக்குருவிகளின் முக்கியத்துவத்தையும் அவற்றின் பாதுகாப்பின் அவசியத்தையும் பிரதிபலிக்க, மக்களுக்கும் சிட்டுக்குருவிகளுக்கும் இடையிலான உறவைக் கொண்டாட உலக சிட்டுக்குருவிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20-ம் தேதி கொண்டாடப்படுகிறது. நமது இயற்கை மற்றும் கலாச்சார நிலப்பரப்புகளில் இந்தப் பறவைகளின் முக்கியத்துவத்தையும் இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

அதுமட்டுமின்றி நகர்ப்புற சூழல்களில் சிட்டுக்குருவிகள் மற்றும் பிற பொதுவான பறவைகளின் பாதுகாப்பை ஊக்குவிப்பதை உலக சிட்டுக்குருவி தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

அழிந்து வரும் சிட்டுக்குருவிகளின் இனங்களை காக்க சிட்டுக்குருவிகளுக்கான கூடுகள் வைப்பது, அவற்றின் வாழ்விடங்களை பாதுகாப்பது, சிட்டுக்குருவிகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே பரப்புவது போன்ற செயல்களின் மூலம் கொண்டாடலாம்.

**தொகுப்பு: பா. சீனிவாசன், வந்தவாசி.**

# தோட்டக்காட்டுக் கருப்பண்ணசாமி கோவிலில் அமாவாசை பூஜை



**ஈரோடு, மார்ச் 20:**
ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துறைக் கிராமம், செங்கரைப்பாளையம் தோட்டக்காட்டில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகருப்பண்ணசாமி, கன்னிமார்சாமிகள் கோவிலில் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 4-ம்தேதி 18.03.2026 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு தைமாத அமாவாசை சிறப்பு பூஜை விமரிசையாக நடைபெற்றது.

"கோவில் சிறிது கொட்டு முழக்கு பெரிது" என்ற சொலவடைக்கேற்ப சிறிய கோவிலாக இருந்தாலும் சக்தி மிக்க தெய்வம், வேண்டிய வேண்டுதல்கள் நிறைவேற்றி தரும் அன்புள்ளம் கொண்ட கருப்பண்ணசாமி கன்னிமார்சாமிகள். ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தில் இந்த கோவில் வழிபாட்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கூடி பூஜை செய்து வழிபட்டு வருகின்றனர்.

பூஜை முடிந்ததும், தோட்டக்காட்டு வலுவு தாய்மார்கள் கொண்டு வந்த சர்க்கரைப்பொங்கல், கல்கண்டுசாதம், பஞ்சாமிர்தம், எலுமிச்சம்பழசாதம், புளிசாதம், தக்காளிசாதம், சுண்டல், சேமியா என பலதரப்பட்ட ஐட்டங்கள் அனைவருக்கும் உணவாகப் பரிமாறப்பட்டது. உடலுக்கும் மனதிற்கும் ஏற்பட்ட திருப்தியுடன் அமாவாசை பூஜை இனிதே நிறைவுற்றது. கருப்பண்ணசாமியின் அருள்பெற்று வளமோடு வாழ்வோம் வாழ்க வளமுடன் நன்றி! வணக்கம்!

## இராமசுவாமி பிரம்மோற்சவம்



புல்லபுதங்குடி ஸ்ரீ வல்வில் இராமசுவாமி பிரம்மோற்சவம் நாள் 1 த்வஜாரோஹணம்

## 'நீரின்றி அமையாது உலகு' உலக நீர் தின கருத்தரங்கம்..!



**வந்தவாசி, மார்ச் 20:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் 'நீரின்றி அமையாது உலகு' என்ற தலைப்பில் உலக நீர் தின சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் தலைமை தாங்கினார்.

ஜவகர் சிறுவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் கலைச்சுடர்மணி பெ.பார்த்திபன் வரவேற்றார். சுவாமி விவேகானந்தா தொண்டு மைய நிறுவனர் டாக்டர் ம.சுரேஷ்பாபு, பட்டதாரி ஆசிரியர் ம.ரகுபாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் அ.லோகநாதன் பங்கேற்று, 'நீரின்றி அமையாது உலகு' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

மேலும் உலகின் அனைத்து தேவைகளுக்கும் நீர் அவசியம் என்பதைப் பற்றியும், நீர் இல்லாமல் இவ்வுலகம் இயங்காது என்பதை பற்றியும் வலியுறுத்தினார்.

மேலும் உலக நீர் தின ஓவியப் போட்டியில் பங்கேற்று சிறப்பிடம் பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஓய்வுபெற்ற மாவட்ட கல்வி அலுவலக மேலாளர் ஜெயக்கண்ணு வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் கல்வி மைய ஆசிரியர் மகாவீர் நன்றி கூறினார்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## ஸ்ரீநிவாஸ பெருமாள் நித்ய புறப்பாடு திவ்ய சேவை.



மதுரை முனிச்சாலை ஸ்ரீநிவாஸ பெருமாள் நித்ய புறப்பாடு திவ்ய சேவை.

# காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!

**வேலூர்,மார்ச் 20:**
வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீ ராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

வியாழக்கிழமையை முன்னிட்டும், தெலுங்கு வருடப்பிறப்பான யுகாதி பண்டிகையை முன்னிட்டும் அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது.

இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.



பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

# தவறவிட்ட பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த த.வெ.க., நிர்வாகியின் நேர்மையை இன்ஸ்பெக்டர் மணிகண்டன், மாவட்ட செயலாளர் உதயகுமார் பாராட்டு!

**செய்யாறு, மார்ச் 20 :**
செய்யாறு அருகே வங்கியின் நுழைவுவாயிலில் தவற விட்ட பணத்தை கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்த த.வெ.க., பொறுப்பாளருக்கு, போலீஸ் இன்ஸ்பெக்டர்-மாவட்ட செயலாளர் உதயகுமார் ஆகியோர் பாராட்டு தெரிவித்தனர்.

செய்யாறு அடுத்த செய்யாமூர் கிராமத்தைச் சேர்ந்தவர் பத்மநாபன். இவர், செய்யாறு சட்டசபை தொகுதியில் த.வெ.க.,வில் இளைஞரணி இணை அமைப்பளராக இருந்து வருகிறார்.



இந்நிலையில் செய்யாறு - வந்தவாசியில் அத்திக்குளம் கிராம சாலை சந்திப்பில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட ஒரு வங்கிக்கு பத்மநாபன் சென்றார்.

அப்பொழுது அங்கு வாகனங்கள் நிறுத்தும் இடத்தின் கீழே ஒரு கைப்பை கிடந்ததை பத்மநாபன் எடுத்து பார்த்தார். அதில், ரூ.7,500 இருந்தது தெரிய வந்தது. வங்கியில் இருந்த வாடிக்கையாளர்களிடம் விசாரித்துப் பார்த்தார்.

கைப்பை குறித்து யாரும் தனது என்று சொல்லி சொந்தம் கொண்டாடி முன்வரவில்லை. உடனடியாக பத்மநாபன் அருகில் இருந்த அனக்காவூர் காவல் நிலையத்திற்கு சென்று இன்ஸ்பெக்டர் மணிகண்டனிடம் பணப்பையை ஒப்படைத்தார்.

சிறிது நேரத்தில், பணத்தை தவறவிட்ட முதியவர் ஒருவர் மேற்கண்ட காவல் நிலையம் வந்தார். பணப்பையை தவறவிட்டதற்கான விவரத்தையும் அந்த முதியவர், காவல் ஆய்வாளரிடம் கூறினார். இதையடுத்து இன்ஸ்பெக்டர் மணிகண்டன், த.வெ.க., பொறுப்பாளர் பத்மநாபன், த.வெ.க.,வின் கிழக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார் ஆகியோர் முதியவரிடம் பணப்பையை ஒப்படைத்தனர். இன்ஸ்பெக்டர் மணிகண்டன், த.வெ.க.,வின் திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட செயலாளர் உதயகுமார் மற்றும் சக போலீசார் பத்மநாபனின் நேர்மையை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## இவர்கள் கூறுவதென்ன?

### 5 தலைநகரங்கள், அனைவருக்கும் அரசு வேலை: நாம் தமிழர் தேர்தல் வாக்குறுதி

நாம் தமிழர் கட்சியின் செயல்பாட்டு வரைவு அறிக்கைகளை கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டார்.

சென்னை கிண்டியில் தனியார் விடுதியில் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியீடு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. தேர்தல் அறிக்கைகளின்படி, நாம் தமிழர் கட்சி ஆட்சி அமைந்தால், தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சி நடத்தப்படும். மக்களின் கருத்துக்கு ஒரு அரசு இயங்க முடியாது; மக்களின் நலனுக்காக மட்டுமே இயங்க முடியும் என்பதே கொள்கை.

தமிழகத்தில் நாம் தமிழர் கட்சி ஆட்சி அமைந்தால், 5 தலைநகரங்கள் உருவாக்கப்படும். மதுரையை மொழி, கலை மற்றும் பண்பாட்டுத் தலைநகராகவும், சென்னையை தொழில்நுட்பத் தலைநகராகவும், கோவையை தொழில் தலைநகராகவும், கன்னியாகுமரியை தமிழர் மெய்யியல் தலைநகராகவும், திருச்சியில் நிர்வாகத் துறை தலைநகராகவும் மாற்றப்படும். மேலும், தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவையை திருச்சிக்கு மாற்றியமைக்கப்படும். அனைவருக்கும் அரசு வேலை. 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பயிற்சி முறைக் கல்வி பயிற்றுவிக்கப்படும். பல கோடி பனைத் திட்டம் செயல்படுத்தப்படும். குடிநீர் விற்பனைக்குத் தடை விதிக்கப்படும். கடலில் வீணாக 2,300 டிஎம்சி மழைநீர் கலப்பதைத் தடுக்க திட்டங்கள் வகுக்கப்படும். இனி படிக்காதவர் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். மாநில அரசுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் சட்ட மாற்றங்களுக்காக பாடுபடுவோம். மாநிலத்தில் வசூலிக்கப்படும் வரிகளில் மாநிலத்துக்கு 75 சதவிகிதமும், மத்திய அரசுக்கு 25 சதவிகிதமும் வழங்க வலியுறுத்தப்படும் என மேலும் பல்வேறு வாக்குறுதிகள் அடங்கியிருந்தன.

### தொடரும் இழுபறி! பியூஷ் கோயல் வருகை ரத்து! இபிஎஸ் தில்லி பயணம்!


தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தொகுதிப் பங்கீடு இன்னும் இறுதி செய்யப்படாமல் இருக்கும் நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தில்லி பயணம் மேற்கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

திமுக தனது கூட்டணிக் கட்சிகளுடன் வேகமாக தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்து வரும் சூழலில், அதிமுக தலைமையிலான கூட்டணியில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகின்றது.

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றிருக்கும் நிலையில், இன்னும் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்படாமல் இருக்கின்றன. பாஜகவுக்கு 29 தொகுதிகள் வரை ஒதுக்க அதிமுக முன்வந்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும், அதிமுக, பாஜக இரு கட்சிகளும் குறிப்பிட்ட சில தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவிப்பதால் இழுபறி நீடிப்பதாக கூறப்படுகிறது. பாஜகவின் தமிழ்நாடு தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் நேற்று சென்னைக்கு பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார். இந்த பயணத்தின் போது தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், பியூஷ் கோயலின் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிசாமி திடீர் பயணமாக டில்லி புறப்பட்டுச் சென்றுள்ளார். மாலை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நேரில் சந்தித்து இபிஎஸ் முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளார். அதன்பிறகு இன்று தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### திமுகவில் இணைந்தார் ரஞ்சனா நாச்சியார்!



பாஜகவின் கலை, கலாசார பிரிவின் மாநிலச் செயலராக இருந்த ரஞ்சனா, மும்மொழிக் கொள்கை திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து அக்கட்சியில் இருந்து விலகி, தமிழக வெற்றிக் கழகத்தின் இணைந்தார். கடந்த சில நாள்களாக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் மற்றும் நிர்வாகிகள் மீது விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்த ரஞ்சனா, அக்கட்சியில் இருந்து விலகினார். இந்த நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினை இன்று நேரில் சந்தித்த ரஞ்சன், திமுகவில் இணைந்துகொண்டார். இந்த நிகழ்வின் போது, அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த ரஞ்சனா, “திராவிட இயக்கத்தில் என்னை இணைத்துக்கொள்வதை பெருமையாக கருதுகிறேன். பெண்கள் பாதுகாப்பை திமுகவை தவிர வேறு எந்தக் கட்சியாலும் கொடுக்க முடியாது” எனத் தெரிவித்தார்.

## “தவெகவுடன் பேசவில்லை; ஆதவ் அர்ஜுனா யாரென்றே தெரியாது” - நயினார் நாகேந்திரன்



“விஜய் கட்சியிலிருந்து எங்களுடன் யாரும் கூட்டணிக்காகப் பேசவில்லை; நாங்களும் அவர்களிடம் பேசவில்லை. ஆதவ் அர்ஜுனா யாரென்றே தெரியாது” என மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் ஓரிரு நாட்களில் தமிழகம் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அவர் வரும்போது கூட்டணிப் பேச்சுவார்த்தை நடைபெறும். மற்றபடி, தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை குறித்து பின்னர் அறிவிப்போம். தேர்தலுக்கு இன்னும் நாட்கள் உள்ளன. வேட்பு மனு தாக்கல் செய்யவே 10 நாட்கள் அவகாசம் உள்ளது.

அமலாக்கத் துறை உள்ளிட்ட அமைப்புகளை வைத்து யாரையும் மிரட்ட வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. அமலாக்கத் துறை, வருமான வரித் துறை ஆகியவை சுதந்திரமான அமைப்புகள். பிரச்சினையில் சிக்கியவர்கள் மீதுதான் இந்த அமைப்புகள் விசாரணை நடத்தும். புதிதாக வழக்குப் பதிவு செய்தால் அமலாக்க துறையை வைத்து நாங்கள் மிரட்டுவதாகச் சொல்லலாம், ஆனால், கடந்த தேர்தலுக்கு முன்னரே தற்போது விசாரணை நடக்கும் அனைவர் மீதும் அமலாக்கத் துறை வழக்கு பதிவாகியுள்ளது. விஜய் கட்சி ஆரம்பிப்பதற்கு முன்னால் அவர் மீது அமலாக்கத் துறை, வருமான வரித் துறை வழக்குகள் உள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பே திமுகவினர் சிலர் மீது வழக்கு இருக்கும் சூழலில், அதை வைத்து மிரட்டுவதாக இப்போது சொன்னால் சரியானதாக இருக்குமா? நீங்கள் சொல்லும் யாருடனும் நாங்கள் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்பதை பாஜக மாநிலத் தலைவர் என்கிற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். விஜய் கட்சியில் இருந்தும் எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை அப்படி இல்லாத பட்சத்தில் ‘பிம்பம், கம்பம்’ என்பதெல்லாம் தேவையில்லாதது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

தொடர்ந்து, “80 தொகுதிகள், துணை முதல்வர்” போன்ற ஆஃபர் கொடுப்பதாக ஆதவ் சொல்கிறாரே எனக் கேட்டதற்கு, “ஆதவ் அர்ஜுனா என்பவர் யார் என்றே எனக்குத் தெரியாது என்றார்.

‘ஜனநாயகன்’ படத்திற்கு நெருக்கடி கொடுப்பது பாஜக தான் என கேள்வி எழுந்து வருகிறதே! என்ற கேள்விக்கு, “மத்திய அரசின் அமைப்புகளை நாங்கள் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அவை அனைத்தும் சுதந்திரமான அமைப்பு. அதில் சம்பந்தப்பட்டவர்களிடம் மட்டுமே விசாரணை நடத்தப்படும் அதில் சம்பந்தமில்லாதவர்கள் மீது எப்படி விசாரணை நடத்த முடியும்.” என்றார்.

பிரதமர் வருகிறார்: மேலும் அவர் பேசுகையில், “தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது பிரதமர் மோடி கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூருக்கு வர உள்ளார் அவர் வரும் தேதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாஜகவின் தேசிய தலைவர் நிதின் நபீன் என அகில இந்திய தலைவர்கள் பலரும் ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் போன்றோரும் தேர்தல் பிரச்சாரத்துக்காக தமிழகம் வரவுள்ளனர். திமுக கூட்டணிக் கட்சிகளின் சீட் குறைக்கப்பட்டுள்ளதாக அனைவரும் சொல்கிறார்கள். திமுக கூட்டணி கட்சிகளுக்கான சீட்டை மக்களும் குறைப்பார்கள்.

பாரதிய ஜனதா கட்சி சாதியைச் சார்ந்தோ; மதத்தைச் சார்ந்தோ உள்ள கட்சி கிடையாது. மதம் சார்ந்த கட்சி என்றால் அது திமுக தான். அதனை மறுப்பு இல்லாமல் பகிரங்கமாக என்னால் சொல்ல முடியும். தொடர்ந்து அவர், “இந்த நல்ல நாளில் அனைவருக்கும் யுகாதி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்” என்று தெலுங்கில் வாழ்த்து கூறினார்.

## தொகுதிப் பங்கீடு: திமுக - மநீம இடையே 2-ம் கட்ட பேச்சு!



திமுக - மக்கள் நீதி மய்யம் கட்சி இடையே தொகுதிப் பங்கீடு தொடர்பாக 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தை இன்று(வியாழக்கிழமை) நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கூட்டணி கட்சிகளுடனான தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்யும் நடவடிக்கையில் திமுக தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அந்த வகையில் இதுவரை காங்கிரஸ் கட்சிக்கு 28 இடங்களும் மதிமுகவுக்கு 4 இடங்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 இடங்களும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மனித நேய மக்கள் கட்சிக்கு தலா இரு இடங்களும் கூட்டணியில் ஒதுக்கப்பட்டுள்ளன.

விசிக, தேமுதிக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மக்கள் நீதி மய்யம் ஆகிய கட்சிகளுடன் திமுக பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் இன்று மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகளுடன் திமுக குழு ஆலோசனை மேற்கொண்டு வருகிறது. மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் ஆனால் கூடுதல் தொகுதிகளை ஒதுக்க மநீம கேட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓரிரு நாள்களில் திமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு நிறைவடையும் என்று கூறப்படுகிறது.

## மதுரை மத்திய தொகுதி: ஹாட்ரிக் அடிப்பாரா பழனிவேல் தியாகராஜன்?

மதுரை மத்திய சட்டப்பேரவைத் தொகுதியில் அமைச்சர் பழனிவேல் தியாகாராஜன் ஹார்ட்ரிக் வெற்றியை எதிர்நோக்கியிருக்கும் நிலையில், இழந்த செல்வாக்கை மீட்க அதிமுக முயற்சி செய்து வருகின்றது.

மதுரை நகரின் இதயப் பகுதிகளைக் கொண்டது மதுரை மத்தியத் தொகுதி. உலகப் புகழ் பெற்ற மீனாட்சியம்மன் கோயில், ஆதி சொக்கநாதர் கோயில், பெரியார் பேருந்து நிலையம், ரயில் நிலையம், மதுரை மாவட்ட மத்திய நூலகம் போன்றவை முக்கியத்துவம் வாய்ந்தவை. மூத்த தலைவர்கள் பழ.நெடுமாறன், பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் ஆகியோர் இத்தொகுதியில் இருந்து பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தொகுதி மக்களுக்கு செயல்திறன் அறிக்கையை சமர்ப்பித்த ஒரே சட்டப்பேரவை உறுப்பினராக பழனிவேல் தியாகராஜன் இருக்கிறார். இவரது இந்த முயற்சி தொகுதி மக்களிடையே மிகப்பெரிய வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் அமைந்தது.

இருப்பினும், சமீபத்தில் மதுரை மாநகராட்சியில் நடந்த வரி மோசடி விவகாரத்தில் பழனிவேல் தியாகராஜனின் முன்னாள் தனி உதவியாளர் கைது செய்யப்பட்டார். இந்த விவகாரத்தில் குற்றம்சாட்டப்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று அவர் அறிவித்தாலும், மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

திமுக சார்பில் மதுரை மத்திய தொகுதியில் மீண்டும் போட்டியிட பழனிவேல் தியாகராஜனுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா என்று எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த முறை அதிமுக நேரடியாக மதுரை மத்திய தொகுதியில் களமிறங்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த பிப்ரவரி மாதம் திமுகவில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்த மதுரை முன்னாள் துணை மேயர் பி.எம். மன்னனை வேட்பாளராக இருந்த கட்சித் தலைமை திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், கடந்த 2016 தேர்தலில் 5,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்த அதிமுக வேட்பாளர் ஜெயபாலை மீண்டும் களமிறக்கவும் திட்டம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தொகுதிகளை கைப்பற்றிய ஆதவ் அர்ஜுனா: புலம்பும் புஸ்ஸி ஆனந்த் ஆதரவாளர்கள்





தனித்தே போட்டி என்ற நிலைப்பாட்டை எட்டி இருக்கும் தவெக-வில் உட்கட்சி மோதல் உச்ச கட்டத்தை எட்டியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக, சென்னையில் முக்கியமான சில தொகுதிகளை ஆதவ் அர்ஜுனா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பது, தொடக்கத்தில் இருந்து அங்கு தளம் அமைத்து வேலை செய்து வந்த பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்தின் ஆதரவாளர்களை நிலைகுலையச் செய்துள்ளது.

இதுகுறித்து தவெக வட்டாரத்திலிருந்து நம்மிடம் பேசியவர்கள், “விஜய் மக்கள் இயக்கம் தொடங்கப்பட்ட காலம் முதல் விஜய்யின் நிழலாக இருப்பவர் ஆனந்த். தவெக என்ற அரசியல் கட்சியின் அஸ்திவாரத்தை அமைத்ததில் இவருக்கு முக்கியப் பங்குண்டு. ஆனால், ஆதவ் அர்ஜுனா, ஜான் ஆரோக்கியசாமி வருகைக்குப் பிறகு, கட்சியின் அதிகார மையங்கள் மாறத் தொடங்கின. ஆனந்தின் செயல்பாடுகள் குறித்தும், அவர் ஆதாயம் பெற்றுக் கொண்டு கட்சியில் பொறுப்பாளர்களை நியமிப்பதாகவும் விஜய் வரைக்கும் புகார்களைக் கொண்டு போனார்கள். இதனையடுத்தே கட்சிக்குள் கோஷ்டி அரசியல் தலைதூக்க ஆரம்பித்தது. சென்னையின் சில தொகுதிகளைக் குறிவைத்து ஆனந்த் ஆதரவாளர்கள் ஆரம்பத்திலிருந்தே பணியாற்றி வந்தனர். அந்த தொகுதிகளை எல்லாம் இப்போது ஆதவ் கைப்பற்றியிருப்பதாக சொல்கிறார்கள். தவெக மத்திய சென்னை மாவட்டச் செயலாளராக இருப்பவர் பூக்கடை குமார். இவர் விஜய் கட்சி தொடங்கும் முன்பே வில்லிவாக்கம் பகுதியில் மக்கள் சேவையில் ஈடுபட்டு வந்தார். அதனால் வில்லிவாக்கத்தில் போட்டியிட தனக்கு வாய்ப்புக் கிடைக்கும் என அவர் பெரிதும் நம்பியிருந்தார். ஆனால், வில்லிவாக்கத்தில் தவெக-வுக்கு நல்ல செல்வாக்கு இருப்பதை சர்வே மூலம் தெரிந்து கொண்ட ஆதவ், அந்தத் தொகுதியை தனக்காக ஒதுக்கவைத்துவிட்டார். இதனால் மன உளைச்சலுக்கு ஆளான பூக்கடை குமார் இதுகுறித்து ஆனந்திடம் வருத்தப்பட்டுப் பேசியிருக்கிறார்.

அவரை சமாதானப்படுத்திய ஆனந்த், ‘என்னையே பாஜக-வுடன் ரகசிய உறவு வைத்திருப்பதாவும், அதனால்தான் அவர்களுக்கு செல்வாக்கு உள்ள தி.நகரைத் தேர்வு செய்ததாகவும் கதை கட்டிவிட்டுவிட்டார்கள் என தெரிவித்தனர்.

## ஆந்திர மாநில காரில் 12 கிலோ வெள்ளி பொருட்கள் சிக்கின: சென்னையில் ரூ.1.52 கோடி பறிமுதல்



உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.1.52கோடி ரொக்கப் பணத்தை சென்னை மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நேற்று பறிமுதல் செய்தனர்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி சென்னையில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட சேப்பாக்கத்தில் உள்ள சுவாமி சிவானந்தா சாலையில் நேற்று காலை தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஆந்திர பதிவெண் கொண்ட கார் ஒன்றை மறித்து சோதனையிட்டனர். அதில் 12 கிலோ எடையுள்ள வெள்ளி குத்துவிளக்கு, தட்டு உள்ளிட்ட பொருட்கள் இருந்தது தெரியவந்தது.

காரில் வந்தவர் சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்காக வெள்ளிப் பொருட்களை கொண்டு சென்றதும், நிகழ்ச்சி முடிந்து வெள்ளிப் பொருட்களுடன் ஆந்திரா திரும்புவதும் தெரியவந்தது. உரிய ஆவணங்கள் இல்லாததால் அவை பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை எல்லீஸ் சாலை - வாலாஜா சந்திப்பு அருகே நேற்று மாலை துறைமுகம் தொகுதி தேர்தல் பறக்கும் படை அதிகாரி ராஜேந்திரன் தலைமையிலான குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, இருசக்கர வாகனத்தில் வந்த நபரை பிடித்து சோதனை செய்தபோது கட்டுக்கட்டாக ரூ.35 லட்சம் பணம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அவர் சென்னை ஏழு கிணறு பர்தயார் தெருவை சேர்ந்த அனில்குமார் சிங் (47) என்பதும், ஜி.பி சாலையில் இருந்து பணத்தை வாங்கிக் கொண்டு சவுக்கார்பேட்டையில் உள்ள ஒருவரிடம் கொடுக்கச் சென்றதாக கூறினார்.

பணம் அசோக் நகரை சேர்ந்த பைனான்சியர் கமல்(55) என்பவருக்கு சொந்தமானது என்றும் தெரியவந்தது. ஆனால், உரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.35 லட்சத்தை கைப்பற்றி வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

தம்பதியிடம் ரூ.65,000 பறிமுதல் நெய்வேலியைச் சேர்ந்த கணேசன் என்பவர் தனது மனைவியுடன் நேற்று காரில் சிந்தாதிரிப்பேட்டை காசினோ திரையரங்கம் அருகே வந்துள்ளார்.

தேர்தல் பறக்கும் படையினர் அந்த காரை நிறுத்தி சோதனை செய்தனர். தம்பதியரிடம் இருந்த ரூ.65 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். அது வாடகை வீட்டுக்கான முன்பணம் என்று கூறப்பட்டது. ஆனால், உரிய ஆவணம் இல்லாததால் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

## பண்ணாரி மாரியம்மன் சப்பரம் வீதி உலா..

**சத்தியமங்கலம், மார்ச் 20:**

சத்தியமங்கலம் அருகே பிரசித்தி பெற்ற பண்ணாரி மாரியம்மன் கோவிலில் குண்டம் திருவிழா நடைபெற்று வருகிறது. வரும் 31ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு பக்தர்கள் குண்டத்தில் இறங்கி தீ மிதிக்கும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். குண்டம் விழாவிற்கான பூச்சாட்டுதலைத் அம்மன் சப்பர ஊர்வலம் நடைபெறுகிறது. பண்ணாரி மாரியம்மன் மற்றும் சருகு மாரியம்மன் ஆகிய உற்சவ அம்மன்கள், அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் எழுந்தருளி கிராமங்கள் தோறும் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். இந்த ஊர்வலம் 17-ம் தேதி இரவு 12 மணிக்கு சிக்கரசம்பாளையம் மாரியம்மன் கோவிலை அடைந்ததும் சப்பரம் இறக்கி வைக்கப்பட்டது. நேற்று (18.3.2026) காலை 7 மணிக்கு அம்மன் சப்பர ஊர்வலம் மாரியம்மன் கோவிலில் இருந்து புறப்பட்டு சிக்கரசம்பாளையம் கிராமம் முழுவதும் நடைபெற்றது. அதன் பிறகு இக்கரை நெகமம் புதூர் வந்து அங்குள்ள அம்மன் கோவிலில் சப்பரம் இறக்கி வைக்கப்பட்டது.

நேற்று (19.3.2026) காலையில் இக்கரை நெகமம் புதூரில் வீதி உலா முடித்துவிட்டு, அந்தப் பகுதியில் உள்ள பட்டத்தரசி அம்மன் கோவிலை சப்பரம் வந்தடைந்தது. அப்போது அங்குள்ள பக்தர்கள் தாரை தப்பட்டை முழங்க அம்மனை வரவேற்றார்கள். அதன் பிறகு பெண்கள், தட்டில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு மற்றும் பழங்கள் வைத்து கற்பூரம் ஏற்றி அம்மனை வணங்கினார்கள். பூஜைகள் முடிந்தபின் சப்பரம் புறப்பட தயாரானபோது, அந்த பகுதியில் உள்ள ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சப்பரம் முன்பு தரையில் படுத்து தங்கள் நேர்த்திக்கடன் செலுத்தினார்கள். சப்பரத்தை சுமந்து வந்த பக்தர்கள், பூசாரி ஆகியோர் தரையில் படுத்திருந்த பக்தர்களை தாண்டி சென்றார்கள். சப்பரம் கடந்து சென்றதும், அந்த பகுதியில் உள்ளவர்கள் தேங்காய்களை தரையில் அடித்து உடைத்து வழிபட்டனர். இக்கரை நெகமம்புதூரில் அம்மன் வீதி உலா முடித்து வெள்ளியம்பாளையம் வந்தது.

## பரமத்தியில் அமாவாசை வழிபாடு

பரமத்தியில் உள்ள அங்காளம்மன், பரமத்திவேலூரில் உள்ள மகா மாரியம்மன், பேட்டையில் உள்ள புதுமாரியம்மன், பகவதி அம்மன், கரூர் மெயின் ரோட்டில் உள்ள செல்லாண்டியம்மன், நன்செய் இடையாறு மகா மாரியம்மன் காவிரி ஆற்றங்கரை அருகே உள்ள மூங்கில் வனத்து சங்கிலி கருப்பணசாமி கோவில், ராஜா சுவாமி, பாண்டமங்கலம் மாரியம்மன், பகவதி அம்மன், கொந்தளம் மாரியம்மன், சேளூர் மாரியம்மன், அய்யம்பாளையம் மாரியம்மன், பகவதி அம்மன், ஆனங்கூர் மாரியம்மன், வடகரையாத்தூர் மாரியம்மன் மற்றும் பொத்தனூர் மேற்கு வண்ணாந்துறையில் எழுந்தருளியுள்ள ஏரி கருப்பண்ணசாமி, பொத்தனூரில் உள்ள பச்சமலை முருகன், கபிலர் மலை பாலதண்டாயுதபாணி சுவாமி கோவில், பிலிக்கல்பாளையம் கரட்டூர் விஜயகிரி வடபழனி ஆண்டவர், மற்றும் வேலூர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

## திருப்பதி பிரம்மோற்சவ விழா.. சிம்ம வாகனத்தில் அருள்பாலித்த கோதண்டராமர்

**திருப்பதி, மார்ச் 20:**





திருப்பதி கோதண்டராம சுவாமி கோவிலில் வருடாந்திர பிரம்மோற்சவ விழா நடைபெற்று வருகிறது. தினமும் காலை மற்றும் மாலையில் வாகன சேவைகள் மற்றும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. விழாவின் இரண்டாம் நாளான நேற்று காலையில் சின்ன சேஷ வாகன சேவையும், இரவில் ஹம்ச வாகன சேவையும் நடைபெற்றது.

இந்நிலையில் விழாவின் மூன்றாம் நாளான இன்று காலை 8 மணிக்கு சிம்ம வாகன சேவை நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட சிம்ம வாகனத்தில் கோதண்டராம சுவாமி எழுந்தருளி, மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். வாகன சேவையின்போது கோலாட்டம், பரத நாட்டியம் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. சிலர் கடவுள்கள் போன்று வேடமணிந்து ஊர்வலமாக வந்தனர்.

வாகன சேவையைத் தொடர்ந்து காலை 10:30 மணி முதல் 11:30 மணி வரை 'ஸ்நாபன திருமஞ்சனம்' நடைபெற்றது. சீதா மற்றும் லட்சுமணருடன் எழுந்தருளியுள்ள கோதண்டராமரின் உற்சவத் திருமேனிகளுக்கு, பால், தயிர், தேன், இளநீர், மஞ்சள் மற்றும் சந்தனம் ஆகியவற்றைக் கொண்டு திருமஞ்சனம் (அபிஷேகம்) செய்யப்பட்டது.

மாலை 7:00 மணி முதல் இரவு 8:30 மணி வரை, முத்துப்பந்தல் வாகனத்தில் சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

இன்றைய வாகன சேவை நிகழ்வில் கோவில் துணை நிர்வாக அதிகாரி நாக ரத்னா, கோவில் ஆய்வாளர்கள் சுரேஷ் பாபு, ஹரி கிருஷ்ணா மற்றும் அர்ச்சகர்கள், திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

## கன்னியாகுமரி வெங்கடாஜலபதி கோவிலில் தெலுங்கு வருடப்பிறப்பு விழா

**கன்னியாகுமரி, மார்ச் 20:**



கன்னியாகுமரி விவேகானந்தபுரம் கடற்கரையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் வெங்கடாஜலபதி கோவில் அமைந்து உள்ளது. இந்த கோவிலில் தெலுங்கு வருடப் பிறப்பு விழா கொண்டாடப்பட்டது

இதையொட்டி அதிகாலையில் சுப்ரபாத சேவையும் அதைத் தொடர்ந்து வெங்கடாஜலபதிக்கு பூலங்கி சேவை, விசேஷ பூஜைகள், அலங்கார தீபாராதனை நடைபெற்றது.

பின்னர் அர்ச்சகர்கள் பஞ்சாங்கம் வாசித்தனர்.

அதன் பின்னர் சுவாமிக்கு படைப்பதற்கான பூஜை பொருட்களை கோவில் அர்ச்சகர்கள் மற்றும் நிர்வாகிகள் தலையில் சுமந்துகொண்டு மேளதாளம் முழங்க கோவிலின் வெளி பிரகாரத்தை சுற்றி ஊர்வலமாக வந்தனர்.


அந்த பூஜை பொருட்களை வெங்கடாஜலபதி முன்பு படைத்து சிறப்பு வழிபாடு நடந்தது.

கோவிலில் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி, கருட பகவான், பத்மாவதி தாயார் மற்றும் ஆண்டாளுக்கு சிறப்பு வழிபாடுகள் மற்றும் விசேஷ பூஜைகள் நடந்தன. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

மாலை 5 மணிக்கு தோமாலை சேவையும், இரவு 8 மணிக்கு ஏகாந்த சேவையும் அதைத் தொடர்ந்து பெருமாள் பள்ளியறை எழுந்து எழுந்தருளும் நிகழ்ச்சியும் நடக்கிறது.

## மீனாட்சி அம்மன் கோவிலில் கோடை வசந்த உற்சவம்.. 23-ந் தேதி தொடங்குகிறது

**மதுரை, மார்ச் 20:**



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் 12 மாதங்களும் திருவிழா நடைபெறும். அந்த வரிசையில் பங்குனி மாதத்திற்கான கோடை வசந்த உற்சவம் வரும் 23-ந் தேதி தொடங்கி 31-ந் தேதி வரை நடக்கிறது.

விழா நாட்களில் தினமும் மாலையில் சுந்தரேசுவரர், மீனாட்சி அம்மன் சித்திரை வீதியில் வலம் வந்து தெற்கு சித்திரை வீதியில் உள்ள வெள்ளியம்பல பள்ளியில் ஊஞ்சல் அலங்காரத்தில் காட்சி அளிப்பர். அங்கு சுவாமிக்கும், அம்மனுக்கும் சிறப்பு பூஜையுடன், தீபாராதனை நடைபெறும்.

மேலும் பங்குனி உத்திரத்தன்று (ஏப்ரல் 1) சுவாமி புறப்பாடு நடக்கிறது. அன்றைய தினம் காலை 10 மணிக்கு மேல் மீனாட்சி, சுந்தரேசுவரர் பஞ்ச மூர்த்திகளுடன் கோவிலில் இருந்து புறப்பட்டு செல்லூர் வைகை வட கரையில் அமைந்துள்ள திருவாப்புடையார் கோவிலில் எழுந்தருள்வார்கள்.

அங்கு சுவாமிக்கு சிறப்பு அபிஷேக, அலங்காரத்துடன் தீபாராதனை நடக்கிறது.

மாலை சுந்தரேசுவரர் வெள்ளி ரிஷப வாகனத்திலும், மீனாட்சி அம்மன் மரவர்ண சப்பரத்திலும் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளிப்பர். அங்கிருந்து கோவிலுக்கு வந்த பின்னர் சுவாமி சன்னதி மண்டபத்தில் பாத பிட்சாடனம் நடந்து சிறப்பு தீபாராதனை காண்பிக்கப்படும். திருவிழா நடைபெறும் நாட்களான 23-ந் தேதியில் இருந்து ஏப்ரல் 1-ந் தேதி வரை கோவில் மற்றும் உபயதாரர்கள் சார்பில் உற்சவர் மீனாட்சி, சுந்தரேசுவரர் சுவாமி தங்கரத உலா, உபய திருக்கல்யாணம் ஆகியவை எதுவும் நடத்தப்பட மாட்டாது என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



### நலம் தரும் மருத்துவம்

## உடலை குளிர்விக்கும் முலாம்பழம்!



கோடைகாலம் ஆரம்பித்துவிட்டாலே தாகம், வியர்வை, வியர்குரு, மயக்கம் என நம் உடலை பாதிக்க ஆரம்பித்துவிடும். தாகம், வெப்பம், உடல் எரிச்சல் போன்றவற்றை இயற்கையான முறையில் எளிதில் சமாளிக்கலாம். அவ்வகையில் முலாம்பழம் ஒரு சிறந்த பழமாகும். இப்பழம் நாவறட்சியை நீக்கி, நமது உடலை குளிர்விப்பதில் பெரும்பங்காற்றுகிறது.

முலாம்பழத்தில் புரதச்சத்து, நீர்ச்சத்து, உலோகசத்து மற்றும் கொழுப்பு, நார்ச்சத்து, மாவுச்சத்து, சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்பு, தயாமின், ரிபோபிளேவின், நியாசின், மெக்னீசியம், சோடியம் போன்றவை அடங்கியுள்ளன.

உடலை குளிர்ச்சியூட்டும் முலாம்பழம் பல்வேறு நோய்களை தீர்க்கிறது. தோலை பளபளப்பாக்கும். முகத்திற்கு அழகைத்தரும். புத்துணர்ச்சியை தந்து உடலின் சத்துக் குறைபாட்டை நீக்கிவிடும். முலாம்பழத்தை உண்டு வர மலச்சிக்கல் நீங்கும். சிறுநீரகக் கோளாறுகள், நீர்க்கடுப்பு இவற்றை குணப்படுத்தும். சிறுநீரகக் கற்களை கரைக்கும். சாப்பாட்டிற்கு பின் சாப்பிட செரிமானம் நன்கு செயல்படும்.

பழச்சதையை சீரகம், இஞ்சிச்சாறு, உப்பு சேர்த்து பிசைந்து சாப்பிட வயிற்றுக் கோளாறுகள், குடல் நோய்கள் குணமாகும். பழச்சாறு தாகத்தை தீர்த்து, தொண்டை வலியை குணப்படுத்தும். இருமல், ஆஸ்துமாவை விரட்டும் பழ சர்பத்தோடு இனிப்பு சேர்த்து, அருந்தி வர, சொறி, சிரங்கு மாறும். பழச்சாறு அல்லது பழத்தை அரைத்து தடவி வர தோல்நோய் குணமாகும். கோடைகால வெம்மை, தலைசூடு மாற முலாம்பழத்தை சாப்பிட்டு வரலாம்.விதைகளை பொடித்து உண்ண வயிற்றுப் புழுக்கள் அழியும். விதைகளை அரைத்து முகத்திலுள்ள கரும்புள்ளிகள் மேல் பூசி வர கரும்புள்ளிகள் மாறும். முலாம்பழம் கல்லீரல் வீக்கத்தைக் குறைக்கும். கீல் வாதத்தைக் குணப்படுத்தும். முலாம்பழம் சர்பத் சாப்பிட கண் எரிச்சல், கண் சூடு மாறி கண் குளிர்ச்சி பெறும். வெப்பத்தால் ஏற்படும் சிறுநீர் எரிச்சலை முலாம்பழம் குணப்படுத்தும்.இவ்வாறு பலவகைகளால் பயனளிக்கும் முலாம்பழத்தை சேர்த்துக் கொள்ள கோடையில் ஆரோக்கியம் காக்கலாம்.

# உருளைக்கிழங்கு இருந்தால் ஒரு மாதம் முழுவதும் வீட்டை ஒளிர வைக்கலாம்!

மின்சாரம் இல்லாத நேரங்களில் இருட்டில் தவிப்பது நமக்குப் பழகிப்போன ஒன்றுதான். ஆனால் நமது சமையலறையில் இருக்கும் ஒரு சாதாரண காய்கறியை வைத்து அந்த இருட்டை நிரந்தரமாக விரட்ட முடியும் என்பது பலருக்கும் தெரியாத ஒரு விஷயம்.

இஸ்ரேலில் உள்ள ஹீப்ரு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் உருளைக்கிழங்கை வைத்து ஒரு மாபெரும் அறிவியல் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியுள்ளனர். அதை சாதாரணமாக சமைப்பதற்கு பதிலாக ஒரு சிறிய ட்ரிக் செய்தால், அது ஒரு அட்டகாசமான பேட்டரியாக மாறி வீட்டை ஒளிரச் செய்யும்.


### எட்டு நிமிடம் போதும்!

பச்சையான உருளைக்கிழங்கை அப்படியே பயன்படுத்தினால் அதிலிருந்து பெரிய அளவில் ஆற்றல் கிடைக்காது. ஆனால், அதை சரியாக எட்டு நிமிடங்கள் சுடுநீரில் போட்டு வேகவைக்கும்போது ஒரு அற்புதமான ரசாயன மாற்றம் நடக்கிறது. அதன் உள்ளே இருக்கும் செல்களின் சுவர்கள் மென்மையாகி உடைந்து விடுகின்றன.

இதனால் மின்சாரம் எந்த ஒரு தடங்கலும் இல்லாமல் மிக வேகமாக பாயத் தொடங்குகிறது. சாதாரணமாக கிடைக்கும் மின்சாரத்தை விட, இப்படி வேகவைப்பதன் மூலம் சுமார் பத்து மடங்கு அதிகமான கரண்ட் நமக்கு கிடைக்கிறது. இது சுற்றுச்சூழலுக்கு எந்த கெடுதலும் செய்யாத ஒரு சிறப்பான இயற்கை பேட்டரி ஆகும்.

### கரண்ட் எப்படி உருவாகிறது?


உருளைக்கிழங்கிற்குள் இயற்கையாகவே மின்சாரம் ஒளிந்திருக்கவில்லை. அதுஒரு வகையான பாலமாக மட்டுமே செயல்படுகிறது. துத்தநாகம் பூசப்பட்ட ஒரு ஆணியையும், ஒரு செப்பு நாணயத்தையும் அந்த காய்கறிக்குள் சொருகி வைக்கும்போது உள்ளே ஒரு வேதியியல் மாற்றம் நிகழ்கிறது. உள்ளே இருக்கும் பாஸ்போரிக் அமிலத்துடன் துத்தநாகம் வினைபுரிந்து எலக்ட்ரான்களை வெளியிடுகிறது. இந்த எலக்ட்ரான்கள் செப்பு நாணயத்தை நோக்கி வயர் வழியாக ஓடும்போது நமக்கு தேவையான மின்சாரம் உற்பத்தியாகி ஒரு LED பல்பு பிரகாசமாக எரிகிறது.



### ஒரு மாதம் தாங்குமா?

இதை வைத்து ஒரு மாதம் முழுவதும் பல்பு எரியுமா என்ற சந்தேகம் பலருக்கும் வரலாம். இதற்கான பதில் ரொம்பவே பாசிட்டிவ்வானதுதான். ஒரு முழு காய்கறியில் இருந்து மிகக் குறைந்த அளவிலான வோல்டேஜ் மட்டுமே கிடைக்கும். அதனால், வேகவைத்த காய்கறியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி, அவற்றை ஒன்றோடு ஒன்று தொடர்ச்சியாக இணைக்க வேண்டும். இப்படி ஒரு சிறிய சர்க்யூட் அமைத்துவிட்டால், காய்கறி முழுவதுமாக அழுகிப் போகும் வரை தொடர்ந்து முப்பது நாட்களுக்கு மேல் ஒரு சிறிய பல்பை நம்மால் எரிய வைக்க முடியும். காய்ந்து போன உருளைக்கிழங்குகள் கூட கரண்டை கடத்தும் வேலையை கச்சிதமாக செய்கின்றன.

உலகம் முழுவதும் 120 கோடி மக்கள் இன்னமும் சரியான மின்சார வசதி இல்லாமல் ரொம்பவே சிரமப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கான ஒரு நிரந்தர தீர்வாக இது மாறப்போகிறது. கடைகளில் விற்கும் வழக்கமான பேட்டரிகளை வாங்குவதைவிட இது ஐம்பது மடங்கு குறைவான செலவை மட்டுமே எடுக்கும்.



அதேபோல கிராமங்களில் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் விளக்குகளை விட இது ஆறு மடங்கு மலிவானது.

மண்ணெண்ணெய் விளக்கில் இருந்து வரும் புகையோ அல்லது தீவிபத்து ஏற்படும் அபாயமோ இதில் கொஞ்சமும் கிடையாது. இது இரவில் படிப்பதற்கும் ரொம்பவே பாதுகாப்பான ஒரு வெளிச்சத்தை கொடுக்கிறது.

நமது வீட்டில் சாதாரணமாக இருக்கும் ஒரு காய்கறியில் இவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என்பது நிஜமாகவே ஒரு மாபெரும் ஆச்சரியம்தான்.

பெரிய கண்டுபிடிப்புகள் எல்லாமே சில நேரங்களில் இதுபோன்ற மிக எளிமையான விஷயங்களில் இருந்துதான் தொடங்குகின்றன.

# இட்லிகடை

பாட்டி இட்லிக்கடைன்னா சுத்துப்பட்டு கிராமங்களில் எல்லாம் பேமஸ் தும்பைப்பூ கலரில் இலவம்பஞ்சுமாதரி ஸ்டார் ஓட்டலில்கூட இந்தமாதரி இட்லி கிடைக்காதுன்னு ஊரே பேசும் இத்தனைக்கும் இரண்டுவகை சட்னியோடு ஒரு சாம்பாரும் உளுந்தில் செய்த இட்லி பொடியும் சேர்த்தே ஒரு இட்லி இரண்டு ரூபாய்தான் அதனால் கூட்டம் அலைமோதும் காலையில் அஞ்சுமணிக்கு அடுப்பு பத்தவைத்து பத்துமணிக்கே கடையை சாத்திவிடும் பாட்டி,,, பாவம் பாட்டி உதவிக்கூட யாரையும் வைத்துக்கொள்ளவில்லை அதையும் பாட்டி விரும்பவில்லை எல்லாமே தன் கைப் பக்குவத்தில் இருக்கவேண்டும் என்ற பிடிவாதம்,

நேத்து காலையில பாட்டி கடை திறக்கும் முன்பே பக்கத்து கிராமத்திலிருந்து நாட்டாமை வந்தார் " என்ன பாட்டியம்மா சௌக்கியமா "

ம்,,,இருக்கேப்பா என்ன இவ்வளு வெள்ளனம்மா வந்திருக்கே தம்பி"

" அது ஒன்னுமில்ல பாட்டி நம்ம நாகூரான் இல்ல அவன் பொண்டாட்டி இறந்துப்போச்சு அதான் ஒரு நூறு இட்லி வேணும் வாங்கிட்டு போகலாமுன்னு வந்தேன்"

" அடடா அந்த லட்சுமியா அவ நல்ல பொண்ணாச்சே ஏன் என்ன பன்னிச்சி இரண்டு புள்ளங்கள அனாதையா விட்டுட்டு போய்டாளே சண்டாலி"

என்ன பாட்டி செய்றது இரண்டு வாரமா ஒரே காய்ச்சல் சளி இருமல் அவனும் ஆஸ்பத்திரிக்கெல்லாம் கூட்டிட்டு அலைந்தான் கடைசில இப்படி ஆச்சு நம்ம கையில் என்ன இருக்கு பாட்டி நீங்க ஆக வேண்டியதை பாருங்க இந்த பாத்திரத்துல ஒரு நூறு இட்லியை பார்சல் பன்னுங்க எனக்கு நிறைய ஜோலி இருக்கு"

" இட்லி இல்லப்பா நானே நூறு நூத்தம்பத்து இட்லிதான் போடுவேன் உன்னக்கட்ட கொடுத்துட்டு வியாபாரத்துக்கு என்ன செய்வது தம்பி"

,"அடா இதுவும் வியாபாரம்தானே பாட்டி பணம் உடனே தரேன் கடன் வாங்குவேன்னு பயப்படதே"

"அதுக்கு இல்லப்பா உன்னக்கட்ட மொத்தமா கொடுத்திட்ட தெனமும் வந்து வாங்குறவங்க வந்து ஏமாந்து போய்டுவாங்க,,, இந்த ஊரில வேற கடையும் இல்ல உனக்கே தெரியம்ல எனக்கு தெனைக்கும் வர்றவங்கதான் முக்கியம் நீ வண்டியை எடுத்துக்கிட்டு டவுனுல போய் வாங்கிட்டு வந்திடப்பா கோச்சிக்காதப்பா "

நாட்டாமை பாட்டியை முறைத்துப்பார்தார் பாட்டிச்சொன்னது " என்னைப்பார்த்து என்ன செய்யப்போறப்பா நான் சொல்றது தவறா நீயும் நாட்டாமைதானே யோசித்துபாரு"

நாட்டாமை டவுனுக்கு விரைந்தார் இட்லி வாங்க,,, பாட்டியின் நேர்மையை உணர்ந்தவராக,,, !




-நாகை ஆசைத்தம்பி
கோவை

# தடம் பதி...



மைதானத்தின் சிவந்த ஓடுதளம் கதிரவனுக்கு ஒரு போர்க்களமாய்த் தெரிந்தது. மூன்றாண்டுகளுக்கு முன்னால் இதே தடத்தில் அவன் ஒரு சிறுத்தையைப் போலச் சீறிப் பாய்ந்தவன். அன்று அவனது கால்கள் காற்றின் வேகத்தோடு போட்டி போட்டன. இன்று? இடது முழங்காலுக்குக் கீழே உடைந்து போன கால் எலும்பு ஒரு உலோகப் பிளேட்டால் ஒட்ட வைக்கப் பட்டிருந்தது.

கிட்டத்தட்ட ஆறு மாதம் சிகிச்சையில் இருந்து விட்டு வந்தவன், அடுத்த ஆறு மாதங்கள் வீட்டோடு முடங்கியே கிடந்தான். அந்த முடக்கம் ஏற்படுத்திய கடும் மன உளைச்சல் அவனை மீண்டும் போட்டியில் கலந்து கொள்ள வைத்தது.

பயிற்சியாளர் தடுத்தும் மீறிக் கலந்து கொண்டான்.

பந்தயத்திற்கான ஆரம்பச் சத்தம் கேட்டது. துப்பாக்கி வெடித்த கணம், மற்ற வீரர்கள் காற்றைக் கிழித்துக் கொண்டு முன்னேறினர்.
கதிரவன் நிதானமாய் ஓடத் தொடங்கினான். அவனது இடது கால் தரையில் படும் போதெல்லாம் உள்ளே அந்த உலோகப் பிளேட் எலும்புடன் உரசும் சத்தம் அவனுக்கே கேட்டது.

முதல் ஐம்பது மீட்டரிலேயே மற்றவர்கள் அவனை வெகுதூரம் கடந்துவிட்டனர். அரங்கத்தில் நிறுத்தவில்லை.

பார்வையில் 'பரிதாபம்' அப்பிக் கிடந்தது. "பாவம்... பரிதாபம்... எதுக்கு இந்த வீண் பிடிவாதம்?". யாரோ முணுமுணுக்க, கதிரவனின் நுரையீரல் காற்றிற்காகப் போராடியது. வியர்வை துளிகள் அவன் கண்களை மறைத்தன. வலி... நரக வேதனை அவன் உடலை ஆக்கிரமித்தது. ஆனால், அவன் ஓட்டத்தை நிறுத்தவில்லை.
'நீ எந்திரிக்கவே முடியாது... நீ ஊனமுற்றவன்... உன்னால் இனி ஓடவே முடியாது..." பல குரல்கள் அவன் காதுக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தன.
"இல்லை! இதோ, நான் ஓடிக் கொண்டிருக்கிறேன்!" -தன் மனதுக்குள் கத்தினான் கதிரவன்.

பந்தயம் முடிந்தது. முதல் வீரர் இலக்கைத் தொட்டு வெகுநேரம் ஆகிவிட்டது.

கதிரவன் தனி ஆளாக ஓடிக்கொண்டிருந்தான். அவன் கால்கள் தள்ளாடின, மூச்சு திணறியது. ஆனாலும், பின்வாங்கவில்லை.

இறுதியாக, அவன் எல்லைக் கோட்டைத் தொட்ட போது, பலர் சிரித்தனர்.

அவன் தரவரிசையில் கடைசி. பயிற்சியாளர் ஓடிவந்து அவனைத் தழுவிக்கொண்டார். "வருத்தப்படாதே கதிர்...," என்றார் நெகிழ்ச்சியுடன்.

நிமிர்ந்து பார்த்த கதிரவன், ஒரு தீர்க்கமான புன்னகையைப் பூத்தான். "வருத்தமா? ஏன் சார்? நான் வெற்றி பெற்றுவிட்டேனே!" என்றான்.
பயிற்சியாளர் குழப்பத்துடன் பார்த்தார். கதிரவன் தன் ஊனமுற்ற காலைத் தட்டிச் சொன்னான்: "சார், இன்று நான் மற்றவர்களோடு போட்டி போடவில்லை.... 'உன்னால் முடியாது' என்று என்னை முடக்கிய என்னோடுதான் போட்டி போட்டேன்... அதில் நான் வென்றுவிட்டேன். நேற்றைய என் பலவீனத்தை இன்று நான் கடந்து நிற்பதுதான் உண்மையான வெற்றி!"

அரங்கமே எழுந்து நின்று கைதட்டியது. அது வீழ்ந்த இடத்திலிருந்து விஸ்வரூபம் எடுத்த ஒரு மானுடத்தின் மீதான பேரபிமானம்.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# மாயக்கண்ணன் லீலை (பாகம் -3)



- எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

## "மருத மரங்கள்"

கோகுலத்தில் யசோதை ஓர் நாள் தன் வீட்டில் தயிர் கடைந்து கொண்டிருந்தாள். குழந்தை கிருஷ்ணன் பசியால் அழுது கொண்டே பால் குடிப்பதற்காக யசோதையிடம் வந்தான். யசோதை அழுத குழந்தையை மடியில் வைத்து சமாதானப் படுத்திக் கொண்டிருக்கும் பொழுது, அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த பால், பொங்கி வழிந்தது. அதை பார்த்தவுடன் குழந்தையை கீழே இறக்கிவிட்டு அடுப்பில் இருந்த பால் பாத்திரத்தை எடுப்பதற்காக விரைந்து சென்றாள். உடனே கிருஷ்ணன் தயிர் கடையும் சட்டியை உடைத்து விட்டான். உள்ளே சென்று மறைந்து கொண்டு வெண்ணையை எடுத்து தின்றான். யசோதை திரும்பி வந்து பார்க்கும்போது தயிர் பானை உடைந்து இருந்ததை கண்டாள். இது கிருஷ்ணனின் வேலை தான்! என்று புரிந்து கொண்டாள். உருட்டப்பட்ட உரலின் மேல் உட்கார்ந்து கொண்டு ,உறியில் இருந்த வெண்ணையை எடுத்து குரங்கிற்கு கொடுத்தான் கிருஷ்ணன். வெண்ணையை திருடித் தின்ற கிருஷ்ணனின் பின்புறமாக யசோதை வந்து நின்றாள். யசோதை கண்ணனை மிரட்டியவுடன் ,அவன் பயத்தால் அழுவது போல் நடித்தான். யசோதை குழந்தை பயந்துவிட்டான் என்று நினைத்து தடியை கீழே போட்டுவிட்டாள். பின்பு ஒரு கயிறை எடுத்து உரலில் கட்டினாள். குழந்தையையும், கயிறால் கட்டி உரலில் இணைத்து விடலாம், என்று நினைத்தாள். ஒரு சிறிய கயிறை எடுத்து கிருஷ்ணனின் இடுப்பில் கட்டினாள். அது ரெண்டு அங்குலம் குறைவாக இருந்தது. அதை போட்டு விட்டு, அதைவிட நீளமான வேறொரு கயிறை எடுத்து இடுப்பில் கட்டினாள். அதுவும் இரண்டு அங்குலம் குறைந்தது .மீண்டும், மீண்டும் எவ்வளவு நீளமான கயிறை எடுத்து கிருஷ்ணனின் இடுப்பில் கட்ட நினைத்தாலும், அது ரெண்டு அங்குலம் குறைவாகவே இருந்தது .யசோதை சோர்ந்து போனாள். கண்ணா!! என்னால் உன்னை கட்ட முடியவில்லை ;ஏண்டா இப்படி செய்கிறாய்? என்று அன்புடன் கேட்டாள். தாயின் அன்புக்கு கட்டுப்பட்ட கிருஷ்ணன், தன்னை கட்டுவதற்கு உட்பட்டான். பிறகு யசோதை தன் வீட்டு வேலை செய்ய சென்று விட்டாள். எல்லோருக்கும் முக்தி அளிக்கும் பகவானின் அனுகிரத்தை யசோதை பெற்றாள். சிவன், பிரம்மா, லக்ஷ்மி தேவி யாருக்கும் கிடைக்காத அனுக்கிரகம் தாயான யசோதைக்கு கிடைத்தது.





'குபேரர்களின் மகன்களாய் இருந்து நாரத முனியின் சாபம் பெற்று 'இப்பொழுது மருத மரங்களாய் நிற்பதை கண்ணன் பார்த்தான். அந்த மருத மரங்களை நோக்கி உரலை இழுத்துக் கொண்டு குழந்தை கிருஷ்ணன் சென்றான் .இரண்டு மரங்களுக்கும் இடையில் கிருஷ்ணன் நுழைந்தான் .அப்படி செல்லும்போது, உரல் குறுக்காக இரண்டு மரங்களின் நடுவில் மாட்டிக்கொண்டது. இடுப்புக் கயிற்றுடன் கட்டப்பட்ட உரலை, கிருஷ்ணன் வேகமாக இழுக்கவே, பலத்தால் வேரோடு இரண்டு மரங்களும் பயங்கர சத்தத்துடன் கீழே விழுந்து சாய்ந்தது .இரு மரங்களில் இருந்தும் அக்னி தேவனைப் போல் ஒளி, பாவம் நீங்கி இரண்டு புருஷர்கள் எழுந்து நின்று கைகூப்பி கிருஷ்ணனை வணங்கினார்கள். நாரத முனிவரின் சொல்லின் படி தங்களுடைய தரிசனம் கிடைக்கப் பெற்றோம். எங்களுடைய அகம்பாவத்தினால் நாரதரின் சாபத்திற்கு ஆளானோம். இப்பொழுது 'தங்களால் எங்களுக்கு விமோசனம் கிடைத்தது ' என்று கிருஷ்ணனை வலம் வந்து வணங்கி மேலே சென்று விட்டார்கள். மரங்கள் விழுந்த பெரும் சத்தம் கேட்டு நந்தகோபன் மற்றும் இடையர்கள் இடி விழுந்ததோ? என பயந்து கொண்டு வந்து பார்த்தார்கள். ஆனால் இரண்டு மரங்கள் கீழே விழுந்து கிடந்தன .இது எப்படி நடந்தது ?என்று அங்கிருந்த சிறுவர்களை கேட்டார்கள் .அதற்கு அந்த சிறுவர்கள் கிருஷ்ணன் தான் உரலோடு அந்த மரத்தின் இடையில் புகுந்ததாகவும், உரல் மோதி மரங்கள் விழுந்ததாகவும் கூறினார்கள். மரத்திலிருந்து இரண்டு பேர் மேலே சென்றதாகவும் கூறினார்கள். ஆனால் அதை பெரியவர்கள் யாரும் நம்பவில்லை. நந்தகோபன், கிருஷ்ணனை கட்டியிருந்த கயிறை அவிழ்த்து விட்டான். கிருஷ்ணனை தூக்கிக்கொண்டு வீட்டினுள் சென்றார். இதுவும் கிருஷ்ணனின் லீலைகளில் ஒன்று என்று புரிந்தது.

தொடரும்..

# சதுர்த்தி நாளின் சிறப்புகள்



சதுர்த்தி திதி என்பது விநாயகப் பெருமானுக்குரிய மிகவும் புனிதமான நாளாகும், இது தடைகளை நீக்கி, துன்பங்களை அகற்றி, வாழ்க்கையில் செல்வத்தையும், செழிப்பையும், ஞானத்தையும் அருளும் சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு மாதமும் வரும் சங்கடஹர சதுர்த்தி (தேய்பிறை) கஷ்டங்களை போக்கவும், வளர்பிறை சதுர்த்தி வளம் சேர்க்கவும் வழிபடப்படுகிறது.

**சதுர்த்தி நாளின் முக்கிய சிறப்புகள்:**
தடைகள் நீங்கும்: விநாயகரை வழிபடுவதன் மூலம் வாழ்க்கையில் வரும் தடைகள், குழப்பங்கள் மற்றும் கிரக தோஷங்கள் நீங்கி, நன்மைகள் பெருகும்.

**வளர்பிறை சதுர்த்தி:** ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு அடுத்த நான்காவது நாளில் வரும் இந்த திதியில், வாழ்க்கையில் வளம், நலம், மற்றும் உயர்வுகள் உண்டாக வழிபடப்படுகிறது.
சங்கடஹர சதுர்த்தி: தேய்பிறையில் வரும் இது, அனைத்து கஷ்டங்களையும், சங்கடங்களையும் (சங்கஷ்டி) போக்கும் சிறப்பான நாளாகக் கருதப்படுகிறது.

**அருகம்புல் வழிபாடு:** சதுர்த்தி நாளில் விநாயகருக்கு அருகம்புல் மாலை சாற்றி வழிபடுவது மிகவும் விசேஷமானது.
விநாயகர் சதுர்த்தி (ஆவணி): விநாயகப் பெருமான் அவதரித்த தினமாகக் கருதப்படும் ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி மிகவும் பிரம்மாண்டமாகக் கொண்டாடப்படுகிறது.

**தவறான சந்திர தரிசனம்:** சதுர்த்தி அன்று சந்திரனை பார்ப்பது (களங்க சதுர்த்தி) தோஷம் தரும், இதனால் விநாயகரை வழிபட்டு அதை தவிர்க்கலாம். இந்த நாட்களில் விரதம் இருந்து, அருகம்புல் கொண்டு விநாயகரை வேண்டி, கஷ்டங்களில் இருந்து விடுபடலாம்.





ப.கோபிபச்சமுத்து
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் கொகினேனி ரங்க நாயகுலு வரலாறு



கொகினேனி ரங்க நாயகுலு (என். ஜி. ரங்கா நவம்பர் 7, 1909—சூன் 9, 1995) என்பவர் இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார். இந்திய விவசாயிகள் இயக்கத்திலும் முக்கியப் பங்காற்றினார். அறுபதாண்டுகளாகத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பணி ஆற்றிய காரணத்தால் கின்னஸ் புத்தகத்தில் இவர் பெயர் இடம் பெற்றுள்ளது.

**இளமைக் காலம்**
ஆந்திரப் பிரதேசம் குண்டூர் மாவட்டத்தில் உள்ள நிடுபிரலு என்னும் சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். தொடக்கக் கல்வியைத் தம் சொந்த ஊரிலும் பின்னர் குண்டூரில் ஆந்திர கிறித்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பையும் கற்று முடித்தார். பிறகு இங்கிலாந்துக்குச் சென்று ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் ஆய்வுப்பட்டம் பெற்றார். இந்தியா திரும்பியதும் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் துறைப் பேராசிரியராகப் பணி ஆற்றினார். 1930 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி சென்னைக்கு வந்தபோது என்.ஜி. ரங்கா அவரைச் சந்தித்தார். அச்சந்திப்பின் விளைவாக இந்திய விடுதலை உணர்ச்சிப் பெற்றார். சட்டமறுப்பு இயக்கம் போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டார்.

உழவர்கள் போராட்டம் 1933 ஆம் ஆண்டில் ஆந்திராவில் உழவர்கள் போராட்டத்தைத் தலைமைத் தாங்கி நடத்தினார். இந்திய விடுதலைப் போராட்டத்துடன் விவசாயிகள் உரிமைகளுக்காகவும் அனைத்திந்திய அளவில் போராடினார். பன்னாட்டுத் தொழிலாளர் கழகம், உணவு மற்றும் வேளாண்மைக் கழகம் ஆகியவற்றின் மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக கலந்து கொண்டார்.

**விருதுகளும் சிறப்புகளும்**
என்.ஜி. ரங்காவுக்கு 1991 ஆம் ஆண்டில் பத்ம விபூசண் விருது வழங்கப்பட்டது. 2001 இல் இவருடைய உருவம் பொறிக்கப்பட்ட அஞ்சல்தலை வெளியிடப்பட்டது. இவர் பெயரில் விவசாயத்துக்கான விருது ஒன்று புதியதாக நிறுவப்பட்டது. மேலும் குண்டூரில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட்டு கவுரவித்தார்கள்.







# ‘துரந்தர் 2’ல் PM Modi – படத்தில் இடம்பெற்ற பணமதிப்பிழப்பு காட்சிகள்!






இந்தியில் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங், மாதவன், அக்ஷய் கண்ணா, சாரா அர்ஜுன் உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த டிசம்பரில் வெளியான படம் ‘துரந்தர்’. இத்திரைப்படம் உலகம் முழுவதும் சுமார் ரூ.1350 கோடிக்கும் மேல் வசூலித்து மெகா ஹிட் ஆனது. ஆனால் இப்படம் முஸ்லிம்களை கெட்டவர்களாக சித்தரித்து எடுக்கப்பட்ட இந்துத்துவ பிரச்சார படம் என்று விமர்சனம் எழுந்தது.

இந்த நிலையில், துரந்தர் படத்தின் 2 ஆம் பாகமாக “துரந்தர்: தி ரிவெஞ்ச்” (Dhurandhar: The Revenge) திரைப்படம் வருகிற இன்று (மார்ச் 19) வெளியானது. இப்படத்தில் மோடி பிரதமராக பதவி ஏற்பது, பணமதிப்பிழப்பை அறிவிப்பது ஆகிய காட்சிகள் இடம்பெற்றுள்ளன.



நடிகை நயன்தாரா சமீபகாலமாக சமூக வலைத்தளங்களிலும் ஆக்டிவாக இருக்கிறார். தனது போட்டோக்களை தொடர்ந்து அவர் வெளியிட்டு வருகிறார். தற்போது வெளிநாட்டில் ரோட்டில் இருக்கும்போது எடுத்த கேசுவல் போட்டோக்களை ராசி கண்ணா வெளியிட்டு இருக்கிறார். அந்த ஸ்டில்கள் தற்போது அவரது ரசிகர்களை கவர்ந்து வருகின்றன.

## PEDDI படத்தின் படப்பிடிப்பு தளத்தில் திலக் வர்மாவை பாராட்டி Bat பரிசளித்த ராம் சரண்!




2026 டி20 உலகக் கோப்பையில் இந்தியா வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஹைதராபாத் திரும்பிய இந்திய கிரிக்கெட் வீரர் திலக் வர்மா தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இதையடுத்து PEDDI திரைப்படத்தின் படப்பிடிப்பு தளத்தில் நடிகர் ராம் சரணை சந்தித்து திலக் வர்மா வாழ்த்து பெற்றார். அப்போது திலக் வர்மாவுக்கு ராம் சரண் Bat ஒன்றை பரிசளித்தார்.

இயக்குநர் புச்சி பாபு இயக்கியுள்ள 'பெத்தி' படத்தில் ராம் சரணுக்கு ஜோடியாக ஜான்வி கபூர் நடித்துள்ளார். இப்படம் வரும் ஏப்ரல் 30ம் தேதி வெளியாகவுள்ளது.



சின்னத்திரையில் பிரபல நடிகைகளில் ஒருவர் ஜனனி அசோக்குமார். அவருக்கு அதிகம் ரசிகர்களும் இருக்கிறார்கள். இன்ஸ்டாக்ராமில் அவரை 1.2 மில்லியன் ரசிகர்கள் பின்தொடர்ந்து வருகின்றனர்.

ஹோம்லி லுக் மட்டுமின்றி கிளாமர் ஆகவும் புகைப்படங்கள் வெளியிட்டு அவர் ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

தற்போது ஜனனி சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்கள் வெளியாகி இருக்கிறது. எப்படி இருக்கிறார் என பாருங்க.

## தேர்தல் fever-இல் இணையும் கிளாசிக் திரைப்படம்... அமைதிப்படை ரீ-ரிலீஸ் அப்டேட்



சத்யராஜ், மணிவண்ணன் கூட்டணியில் 1994 ஆண்டு வெளியான படம் ‘அமைதிப்படை’. இப்படத்தை இயக்கிய மணிவண்ணன் அதில் முக்கிய வேடத்திலும் நடித்திருந்தார். மேலும், சத்யராஜ் இரட்டை வேடத்தில் நடித்திருந்த இப்படத்தில் ரஞ்சிதா, சுஜாதா, கஸ்தூரி, மலேசியா வாசுதேவன் உள்ளிட்டோர் நடித்திருந்தனர். இளையராஜா இப்படத்திற்கு இசையமைத்திருந்தார்.

இப்படத்தின் அரசியல் நையாண்டி வசனங்கள், மேடை பேச்சை கடந்து எதார்த்த அரசியல் களம் எப்படி இருக்கிறது என்பதை தோலுரித்து காட்டின. எந்த காலத்திற்கும் பொருந்தும் அமைதிப்படை கிளாசிக் அந்தஸ்து பெற்றது.

## சூர்யாவின் ‘கருப்பு’ ரிலீஸ் தேதி அறிவிப்பு!



ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில், சூர்யா நடித்துள்ளப் படம் கருப்பு. இதில் சூர்யாவுடன் இணைந்து த்ரிஷா கிருஷ்ணன், இந்திரன், நட்டி சுப்ரமணியம், ஸ்வாசிகா, ஷிவதா மற்றும் யோகி பாபு ஆகியோர் நடித்துள்ளனர். படத்திற்கு சாய் அபியங்கர் இசையமைத்துள்ளார். ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரித்துள்ளது. இப்படத்தின் டீசர் மற்றும் முதல் பாடல் வெளியாகி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே படத்தின் இரண்டாவது பாடலை நடிகர் சிம்பு பாடியுள்ளதாக கூறப்படுகிறது.

இப்படத்தின் OTT உரிமையை நெட்பிளிக்ஸ் நிறுவனம் சுமார் ரூ.35 கோடிக்கு வாங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில் இப்படம் மே.4ஆம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்



நடிகை ரித்திகா சிங் இறுதிச்சுற்று படம் மூலமாக தமிழ் ,மற்றும் ஹிந்தியில் பிரபலம் ஆனவர். அதன் தெலுங்கு ரீமேக்கிலும் அவரே நடித்திருந்தார்.
அந்த படம் ஹிட் ஆன நிலையில் ரித்திகா சிங் அதன் பிறகு பல படங்களில் நடித்தார். அந்த படங்கள் பெரிய வரவேற்பை பெறாததால் ரித்திகாவுக்கு பட வாய்ப்புகள் குறைந்துவிட்டது.
தற்போது ரித்திகா சிங் தாராள கிளாமர் உடையில் போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார்.
ஹாட் ஸ்டில்கள் இதோ.

# கேதார்நாத், பத்ரிநாத் கோவில்களுக்கு சாரா அலிகான் செல்ல தடை



பாலிவுட் திரை உலகில் பிரபல நடிகையாக இருப்பவர் சாரா அலிகான். ஆன்மீகத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட சாரா அலிகான் கேதார்நாத், பத்ரிநாத் கோவில்களுக்கு அடிக்கடி சென்று வருவார். ஆனால் தற்போது அவரால் கோவில்களுக்கு செல்ல முடியவில்லை.

பத்ரிநாத்-கேதார்நாத் கோவில் குழு பக்தர்களுக்கு புதிய ஒரு விதியை அமல்படுத்தி உள்ளது. இந்துக்கள் அல்லாதவர்கள் கோவிலுக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். கோவிலுக்கு செல்ல விரும்புவோர் கோவில் நிர்வாகத்திடம் இந்துமதத்தை நம்புவதாக பிரமாண பத்திரம் சமர்பித்த பின்னரே கோவிலுக்குள் நுழைய முடியும். கோவிலின் புனிதத்தை பாதுகாக்கும் நோக்கத்தில் இந்த விதிகள் உருவாக்கப்பட்டு உள்ளதாக கோவில் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தகவல் அளித்த குழுவின் தலைவர் ஹேமந்த் திவேதி, சாரா அலிகானை உதாரணமாகக் காட்டி, "சாரா அலிகான் கேதார்நாத் மற்றும் பத்ரிநாத் கோவில்களுக்குச் செல்ல முடியாது. அவர் செல்ல விரும்பினால், சனாதன தர்மத்தின் மீதான தனது நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும். பிரமாணப் பத்திரம் சமர்ப்பித்த பின்னரே அவர் கோவிலுக்குள் நுழைய முடியும்," என்று கூறினார்.

பாலிவுட் நடிகை சாரா அலி கான், பிரபல நடிகர் சயீப் அலி கானின் மகள் ஆவார். ஆனால், அவரது தாயார் அம்ரிதா சிங் ஒரு இந்து மதத்தைச் சேர்ந்தவர். சாரா அலிகான் கூறியுள்ளபடி, அவர் சிறுவயதில் இருந்தே இரு மதங்களையும் பின்பற்றி வருகிறார். அவர் தனது தாயாருடன் பல கோவில்களுக்குச் செல்கிறார். அவர் 'கேதார்நாத்' திரைப்படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமானார். அப்போது இங்கு படப்பிடிப்பில் இருந்த சாரா அலிகான், அப்போதிருந்து கேதார்நாத் மற்றும் பத்ரிநாத்தின் பக்தையாக இருந்து வருகிறார். அவர் வருடத்திற்கு ஒரு முறையாவது இந்தக் கோவில்களுக்குத் தொடர்ந்து சென்று வருகிறார். ஆனால், இனிமேல் அவர் கோவிலுக்குச் செல்வாரா, இல்லையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# திருமணத்திற்கு பிறகு மீண்டும் படப்பிடிப்பில் ராஷ்மிகா மந்தனா

நடிகர் விஜய் தேவரகொண்டா, ராஷ்மிகா காதல் திருமணம் சமீபத்தில் உதய்ப்பூரில் நடந்தது. திருமண வரவேற்பு ஐதராபாத்தில் பிரமாண்டமாக நடந்தது. விழாவில் திரை உலகமே திரண்டு வந்து வாழ்த்தினர்.

திருமணத்திகாக சினிமா படப்பிடிப்புக்கு சிறிது இடைவெளி விட்டு இருந்த நிலையில் தற்போது மீண்டும் படப்பிடிப்பில் பங்கேற்றுள்ளார் ராஷ்மிகா. அவரது நடிப்பில் உருவாகி வரும் ஆக்ஷன், திரில்லர் படமான 'மைசா' படப்பிடிப்பில் திருமணத்திற்கு பிறகு மீண்டும் பங்கேற்று நடித்தார்.

ராஷ்மிகா மீண்டும் படப்பிடிப்பில் பங்கேற்றதை மைசா படத்தின் இயக்குனர் ரவீந்திரபுல்லே தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

# 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' ரிலீஸ் தேதி அறிவிப்பு!





விக்னேஷ் சிவன் இயக்கத்தில், நடிகர் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ளப் படம் லவ் இன்சூரன்ஸ் கம்பெனி. இதில் பிரதீப் உடன் கீர்த்தி ஷெட்டி, எஸ்.ஜே. சூர்யா, யோகி பாபு, சீமான், கௌரி கிஷன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் மற்றும் நயன்தாராவின் ரவுடி பிக்சர்ஸ் தயாரித்துள்ளது. இப்படத்தின் டீசர் மற்றும் பாடல்கள் வெளியாகி வரவேற்பை பெற்றன.

இப்படத்தின் வெளியீட்டு தேதி அறிவிக்கப்பட்டு பலமுறை தள்ளிப்போன நிலையில், தற்போது ஏப்.3ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கவனம் ஈர்க்கும் யோகி பாபுவின் "அர்ஜுனன் பேர் பத்து" டீசர்



நடிகர் யோகி பாபு நடிப்பில் உருவாகி இருக்கும் 300-ஆவது திரைப்படம் "அர்ஜுனன் பேர் பத்து." இயக்குநர் ராஜ்மோகன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் இந்தப் படத்தில் யோகி பாபுவுடன் அனாமிகா மஹி, காளி வெங்கட் மற்றும் லெனின் பாரதி முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

டி இமான் இசையமைத்துள்ள இந்தப் படத்திற்கு பிரதீப் காலிராஜா ஒளிப்பதிவு பணிகளை கவனிக்க, காசி விஸ்வநாதன் படத்தொகுப்பு செய்துள்ளார். ஓம் பிரகாஷ் இந்தப் படத்திற்கு சண்டை காட்சிகளை வடிவமைத்துள்ளார்.

இந்தப் படத்தை தேவ் சினிமாஸ் சார்பில் கிருத்திகா தங்கப்பாண்டி மற்றும் தங்க பாண்டி தயாரித்துள்ளனர். இந்தப் படத்தின் பாடல் வரிகளை கார்த்திக் நேத்தா எழுதியுள்ளார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து, படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் "அர்ஜுனன் பேர் பத்து" படத்தின் டீசரை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் வெளியிட்டுள்ளார். டீசரின் படி ஒரே வண்டியை பலரிடம் ஏமாற்றி விற்ற நபர் பற்றிய இன்வெஸ்டிகேஷன் கதையம்சம் கொண்டு உருவாகி இருக்கிறது. இந்தப் படம் கோடை விடுமுறையை ஒட்டி ரிலீசாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



சன் டிவியில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சீரியல் சிங்கப்பெண்ணே. இந்த சீரியலில் ஆனந்தி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களின் மனதில் இடம்பிடித்துள்ளவர் நடிகை மனீஷா. இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் பிரபலம். அவ்வப்போது தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவு செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார். அந்த வகையில், சேலையில் எடுத்துக்கொண்ட தனது அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார். இதோ அந்த புகைப்படங்கள்:




### சமரசம்

சண்டையின் மிச்சம்
சந்தோஷத்தின் உச்சம்

ஊடலில் தொடங்கி
கூடலில் முடியும்

வார்த்தைகளால் உலா வந்து
மௌனத்தால் நிறைவாகும்

பேசிப் பெற்றதினும்
புரிதலில் கிடைத்த வெற்றி

மனங்களின் அழகு மொழி
குணத்தைக்காட்டும்கண்ணாடி

அன்பைப் பெருக்கி
அறத்தை உற்பத்தி
செய்யும்
பண்பின் சிகரமாக்கி
பாரில் உயர்த்தும்

சொற்போரில் சுதந்திரம்
தந்து
சுயநலம் தவிர்த்துச்சுகமாக்கும்

ஆயுதம் இல்லா யுத்தத்தின்
அமைதிப் பேராயுதம்
வெண்மையைத் தூதாக்கி
உண்மையைப் பேசும்

சண்டையில் வெல்வர் ஒருவர்
சமரசத்தில் வெல்வர் இருவர்

வீட்டில் சமரசம்
அன்பைக் காட்டும்

நாட்டில் சமரசம்
நட்பைக் கூட்டும்



சண்டையில் வெல்வது
போர்க் குணம்
சமரசத்தில் வெல்வது
இறைமனம்

சமரசக் குணம்
கொண்டு
சரித்திரம் செய்வோம்.

**தமிழ்நிலா**



### சாட்டிங் !

இப்போதெல்லாம் காதல்
தேவையற்றமெசேஜ்களை
டெலிட் செய்வதுபோல்
ஆகிவிட்டது...

டெலிட் செய்த
மறுநாள்...புது காண்டாக்ட்டில்
தொடர்கிறது காதல் சாட்டிங்...

இரண்டு சிம் கார்டில்
இருவரோடு தொடர்பு
கொள்வது
லேட்டஸ்ட் டிரெண்ட் !



இந்த ட்ரெண்டும்
ஒருவருக்கொருவர்
செல்ஃபோனை மாற்றிக்
கொள்ளும் வரை
மட்டுமே தொடர்கிறது... !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

### ஆறடி நிலமே சொந்தமடா.!

கூறடா! என் மானுடா!
யாருடையது இந்த நிலமடா?
யாரடா? வேலி யெழுப்பி
என் நிலம் என்கிறாயே நீ..
யாரடா.?

ஓரடி நிலத்திற்கு
சண்டையிட்டாய்...
ஒரு வயிற்றில் பிறந்தும்
மண்டை உடைத்தாய்!
நூறடிச் சாலையில்
வீடுகள் கட்டி.. தினம்
பார்யென வீதியில் வீர
நடை நடந்தாய்!
ஆறடி நிலமே சொந்தமென்று
நீ.. அறியாமலே கண்
மூடிவிட்டாய்!

நிலமடந்தை குடல்
கிழித்துக் குழியை வெட்டி..
அகழ்வாரைத் தாங்கும்
நிலம் என்றே கவிப்பாடி..
காடுவெட்டிப் போட்டு.. கடிய
நிலம்திருத்தி.. வீடுக்கட்டிக்
கொண்டிருந்தாய்! ஓடு..
பானை உடைக்கயிலே..
ஆறடி நிலமே சொந்தமென்று
அறியாமல் கண்மூடி
உறங்கிவிட்டாய்.!

இந்த நிலம் பிறந்தாய்..
அந்த நிலம் எனதென்று
பட்டயங்கள்
எழுதிவைத்தாய்!
சொந்த நிலம் சுற்றி
சுவர்யெழுப்பி
வேலியிட்டாய்.! அந்த
நிலத்தில் ஆழ்துளையிட்டு
அவளுடை உதிரம்
உறிஞ்சி விட்டாய்! இங்கே..
அல்லுற்றாய்.. அடடா..



ஆறடி நிலமே
சொந்தமென்று
ஏனோ மறந்து
விட்டாய்..!

**வே.கல்யாண் குமார்.**

### குறுக்கு வழி !

பெரும்பாலும் தினமும்
செல்லும் சாலையில் உள்ள
சிக்னலிலும், '

காவல்துறையினர் டிரங்கன்
டிரைவ் ' சோதனை நடத்தும்
இடங்களிலும்,...
அவ்விடத்தை கடக்க வேறு
ஒரு சிறிய குறுக்கு வழி
பாதையை கண்டுபிடித்து
விடுவதில் நம்மவர்கள்
ஒவ்வொருவரும்
வாஸ்கோடகாமாவை
மிஞ்சிவிடத்தான்
செய்கிறார்கள் !

**எம்.பி.தினேஷ்.** கோவை



### யார் அறிவார்

மனித இனமும்
தாவர இனமும்
ஒன்னுதான்,,,

மனிதர்கள் எல்லாம்
ஒன்னுப்போலதோன்றினாலும்
மனதின் எண்ணங்கள்
மாறுப்படுகிறது

தாவரங்கள் எல்லாம்
ஒன்னுப்போலதோன்றினாலும்
மலரின் வண்ணங்கள்
மாறுப்படுகிறது

மனது நினைப்பதையும்



மலர்கள்
மலர்வதையும்
யார்
அறிவார்,,,?

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

அந்த கண்களில்
ஏதோவொன்று இருக்கத் தான்
செய்கிறதுஅது என்னவென்று
முழுமையாய் சொல்லத் தான்
தெரிய வில்லை பதில்
தெரியவில்லையென்றாலும்
பாதை மாறாமல்
ஒரு வித போதையோடு
அந்த கண்களை
திரும்ப,திரும்ப
பார்த்து கொண்டிருக்கிறேன்
ஒரு தாயை காணும்
குழந்தையை போல!

மரிப்பதற்கு முன் இன்னும்
கொஞ்சம் தீர்ந்து போகாத
நிறைய தேவதை கதைகளை
சொல்லி விட்டு
செல்ல வேண்டும்!

இப்போதைக்கு உன்னை
காதல் செய்வதை விட
வேறெதுவும் வேலை இல்லை
உன்னை காதல் செய்வதே
வேலையாக இருந்தால்
வாழும் வாழ்க்கையும்
சொர்க்கமடி!

என்ன வேண்டுமென்கிறாய்?
இப்படியே சிரித்து கொண்டே
இரு என்றேன்.
அவளை அவளாய்



இருக்க வைப்பதும்
பேரன்பு காதல் தான்!

கண்டால் பாவம்
காதல் செய்தால் போச்சு!

அழ வைக்க மட்டும் தான்
உனக்கு தெரியும் அன்பு
செய்ய என்னை போல்
இந்த அகிலத்தில் வேறு
யாரடி?!

வலி தந்தாலும் திரும்ப,திரும்ப
நினைக்க வைக்கும் போதை
காதல் தான்!

உலகின் அதி சிறந்த போதை
காதலை தவிர
வேறெதுவுமில்லை!

உன் கண்கள் என்ன
கள்ளுக்கடையா?
கண்டதும் ஜிவ்வென
ஏறுகிறதே ஒரு காதல்
போதை!

**லி.நௌஷாத் கான்**

### நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு!

அறுசீர் மண்டிலம்.

நூல்கள் அறிவை வளர்க்கும்
நுவன்றேன்
அன்பாய்க்கேட்பீர்
கோலக் கருத்தே அமையும்
கொஞ்சும் செய்தி கமழும்!
சாலப் பரிந்தே கற்றால்
சரியாய் அறிவே மிகுமே
நாளும் நல்ல நூல்கள்
நன்மை புரிந்தே நிற்கும்!

படிக்க படிக்க கூடும்
பார்க்க பார்க்க சேரும்
இடுக்கண் எல்லாம் நீங்கும்
இனிமை யாவும் தேங்கும்!
உடும்புப் போல கல்வி
உன்னில் காணும் நலமாய்
எடுத்து நல்ல நூலை
ஏற்ற மாகப் படிப்பாய்!

### மறுசுழற்சி செய்வோம்!

நேரிசை வெண்பா!

மக்கிடும் குப்பைகளை
மண்ணில் புதைத்திடு
மக்காக்குப் பையை
மறுசுழற்சி ..தக்கவாறு
செய்திடு சீர்மை
அடைந்திடு
எந்நாளும் நெய்திடு
நன்மையே நேர்!
இயற்கை வளங்களை
இன்றே நலமாய்
நயன்மையுடன் கண்டிடு
நாளும்..வியப்பாய்க்
கழிவை மறுசுழற்சி



கண்டிடு பொலியும்
அழகான சந்ததிக்கே
ஆம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை

# நூல் விமர்சனம்

**திரும்பிப் பார்க்கிறேன்– கட்டுரைகள் – நூல் ஆசிரியர் இரா. இரவி – நூல் விமர்சனம் பொன். குமார். சேலம் .9003344742**
**வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017. பக்கங்கள் : 78, விலை : ரூ. 70 தொலைபேசி 044– 24342810/ 24310789**

இலக்கியத் துறையில் முப்பதாண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருபவர். சுற்றுலாத் துறையில் நாற்பதாண்டுகளாக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றவர். மதுரையே கவிஞர் இரா. இரவியின் வசிப்பிடம். வாழ்விடம். இலக்கியம் மற்றும சுற்றுலாத் துறை கவிஞர் இரா. இரவிக்கு ஏராளமான பல்வேறு துறை சார்ந்த மனிதர்களை சந்திக்க ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. கவிஞர் இரா. இரவி தான் சந்தித்த, நாற்பத்தாறு மனிதர்களுடன் ஏற்பட்ட அனுபவத்தை, அவர்கள் மூலம் தான் கற்றதை, தான் பெற்றதை கட்டுரைகள் மூலம் வாசகர்களுக்கு பகிர்ந்துள்ளார்.

சுற்றுலாத்துறை கவிஞர் பல பிரமுகர்களை சந்தித்து உரையாடுவதற்கு ஒரு நல்ல களமாக அமைந்துள்ளது. இலக்கிய ஈடுபாட்டின் காரணமாகவும் உடல்நிலை காரணமாகவும் விருப்ப ஓய்வு பெற விரும்பிய போது முனைவர் வெ. இறையன்பு அவர்களும் கலைமாமணி கு. ஞானசம்பந்தன் அவர்களும் விருப்ப ஓய்வு பெற வேண்டாம் என்று அறிவுறுத்தியும் விருப்ப ஓய்வு பெற்றதை வருத்தமுடன் தெரிவித்துள்ளார். மேலும் அவர்கள் பேச்சைக் கேட்காமல் நடந்து கொண்டது விருப்ப ஓய்வு பெற்றதுதான் என்றும் தெரிவித்துள்ளார்.

அணு விஞ்ஞானி அப்துல் கலாம் அவர்களுக்கும் கவிஞர் இரா. இரவிக்கும் ஒரு நல்ல தொடர்பு உண்டு. அவரைப்பற்றியும் எழுதியுள்ளார். அவருக்கும் எழுதியுள்ளார். அவருக்காகவும் பல வேலைகள் செய்துள்ளார். விமானம் புறப்படும் நேரத்தை அப்துல் கலாமுக்கு யாரோ தவறாக சொல்லியதால் தாமதமாக புறப்பட்டு வந்துள்ளார். இத்தகவல் தெரிவிக்கப்பட்டு இரவி விமான நிலைய மேலாளரிடம் பேசி விமானத்தை பத்து நிமிடங்கள் தாமதப்படுத்தி ஏற்றி அனுப்பியுள்ளார். அப்துல் கலாமும் தாமதமானதற்கு அனைவரிடமும் மன்னிப்பு கோரிய பண்பினையும் தெரிவித்துள்ளார். இச்சம்பவத்தின்போது அப்துல் கலாம் முன்னாள் குடியரசுத் தலைவர்.

கலைமாமணி பேராசிரியர் கு. ஞானசம்பந்தன் சென்னைக்கு செல்ல டிக்கெட் புக் செய்த விமானம் ரத்தான தகவல் அறிந்து மேலாளருக்கு தகவல் தெரிவித்து வேறு விமானத்தில் டிக்கெட் வாங்கி அனுப்பி வைத்த தகவலையும் தெரிவித்துள்ளார். கலைமாமணி கு. ஞானசம்பந்தன் கலைஞர் தொலைக்காட்சி பொறுப்பிலிருந்த ரமேஷ் பிரபா விமானத்திற்கு வந்து கொண்டிருப்பதாக தெரிவித்து போர்டிங்கக்கு ஏற்பாடு செய்யுமாறு கோரியதைத் தொடர்ந்து போர்டிங் பாஸை எடுத்து தயாராக வைத்திருந்து அவர் வந்ததும் தந்து வழியனுப்பியதாக கூறியுள்ளார்.

எழுத்தாளர் தொ. பரமசிவன் உடல்நிலை சரியில்லாமல் சக்கர நாற்காலியில் வந்ததால் விமானம் ஏற மருத்துவச் சான்றிதழ் தேவை என மறுத்ததை அறிந்து தானே முன் வந்து தன் பொறுப்பில் சென்னைக்கு மருத்துவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இவையெல்லாம் இரா. இரவி விமான நிலையத்தில் உதவி சுற்றுலா அலுவலராக இருந்ததால் சாத்தியமாயிற்று.

செல்வி ஜெ. ஜெயலலிதா பேசியதால் ஜெயா தொலைக்காட்சியிலும் திரு. ரமேஷ் பிரபா தொடர்பால் கலைஞர் தொலைக்காட்சியிலும் நேர்முகத்திற்கு வாய்ப்பு கிடைத்தது என்றார். அதே போல் கோகுல இந்திராவிற்கு செய்த உதவி இரவியின் பணிமாற்றத்தை நிறுத்தியது என்றும் தெரிவித்துள்ளார்.

கவிஞர் இரா. இரவி ஒரு நாத்திகர். நீதியரசர் கற்பக விநாயகம் திருக்குறள் பற்றி பேசியதில் கடவுளைப் பற்றிய கருத்தில் தனக்கு உடன்பாடில்லையென ஒரு கடிதம் எழுதியுள்ளார். நீதிபதி மதுரை வந்த போது நேரில் சந்திக்க அழைப்பு விடுத்து பாராட்டியதை நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார். அது முதல் நீதிபதியுடனான நட்பு




தொடர்கிறது என்கிறார். நீதிபதியே என்றாலும் தன் கருத்தைத் துணிந்து கூறியுள்ளார். நீதியரசி விமலா உரையாற்றியதைக் குறிப்பெடுத்து அவருக்கே அனுப்பி நினைவாற்றலுக்காக அவரிடம் பாராட்டுப் பெற்றதைக் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்தாளர் மா. அரங்கநாதன் அவர்களின் மகன் நீதியரசர் மகாதேவன் திருக்குறளை மாணவர்களின் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கினார் என்றும் இலக்கியங்கள் குறித்த அவரின் உரை ஓடும் நதி போல் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

முனைவர் வெ. இறையன்பு இ. ஆ. ப. அவர்களுக்கும் கவிஞர் இரா. இரவிக்கும் ஒரு நெருக்கமான உறவு உண்டு. இரவிக்கு அதிகாரியாகவும் இருந்துள்ளார். அன்பான வழிகாட்டியாகவும் இருந்துள்ளார். முனைவர் வெ. இறையன்பு மூலம் தான் பெற்ற நன்மைகளை நன்றியுடன் கூறியுள்ளார். தனக்காக மட்டுமல்லாமல் மதுரை மக்களுக்காகவும் பொது மக்களுக்காகவும் இறையன்பு இ. ஆ. ப. அவர்களிடம் பல நல்ல காரியங்களைச் செய்துள்ளார். இறையன்பு அவர்கள் ஓய்வு பெற்றாலும் அவருடன் நட்பிலேயே உள்ளார். அரசு நடத்தும் புத்தகக் கண்காட்சியில் பேசுவதற்கு இறையன்பு தொகை வாங்குவதில்லை என்பதுடன் இறையன்பு தனக்கு செய்த உதவிகளை நன்றியுடன் கூறுவார் என்றும் தான் செய்த உதவிகளை நினைவிலும் வைத்துக் கொள்வதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

புத்தகக் கண்காட்சிகளில் பேசுவதற்கு வெ. இறையன்பு போல பட்டிமன்ற பேச்சாளர் சாலமன் பாப்பையா தொகுப்புகளுக்கு எழுதும் அணிந்துரைகளுக்கு தொகை வாங்குவதில்லை என்கிறார்.

கவிஞர் இரா. இரவி தொகுப்புகளுக்கு மட்டும் விமர்சனங்கள் எழுதுவதில்லை. திரைப்படங்களுக்கும் எழுதி வருகிறார். பெரியார் திரைப்படத்திற்கு எழுதி நடிகர் சத்யராஜிடம் பாராட்டு பெற்றதாகவும் மாயாண்டி குடும்பத்தாருக்கு எழுதிய விமர்சனம் திரைப்படக் குழுவினரால் விளம்பரமாக செய்தித் தாள்களில் வந்ததாகவும் அதை வாசித்து விட்டு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அலைபேசியில் அழைத்து பாராட்டியதை பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் என்றும் முதல்வரான பின்னும் கடித போக்குவரத்து தொடர்ந்தது என்றும் தெரிவித்துள்ளார். இது உண்மை என்றும் எழுதியுள்ளார். இதே போல அப்போதைய சுற்றுலாத் துறை அமைச்சர் கோகுல இந்திராவிற்கும் போர்டிங் பாஸ் எடுத்து வழியனுப்பி வைத்ததையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

சேதுபதி மேல்நிலைப்பள்ளி குறித்து பல தகவல்கள். மகாகவி பாரதியார் அப்பள்ளியில் நூறு நாள்கள் தமிழாசிரியராக பணிபுரிந்த தகவலைத் தந்துள்ளார். தமிழ் பாட வேளையைக் குறைத்ததற்காக தமிழாசிரியராக பணிபுரிந்த அரசன் சண்முகனார் ராஜினாமா செய்த தகவலும் உண்டு. சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் சராசரி மாணவனாகவும் இல்லாமல் பத்தாம் வகுப்பிலும் தேர்ச்சி பெறவில்லை கவிஞர். ஆனால் கவிஞரான பிறகு இலக்கியவாதி என்று அறியப்பட்ட பின் சேதுபதி பள்ளியிலேயே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுள்ளார். படிப்பை விட படைப்பே ஒருவரின் வெற்றியைத் தீர்மானிக்கிறது என்பதை இந்நிகழ்வு உறுதிப்படுத்துகிறது. நடுவராகவும் கலந்து கொண்டுள்ளார். பாடத்திட்ட தேர்வுக் குழுவில் உறுப்பினராக இருந்துள்ளார். பல்கலைக் கழகங்களில் கவிஞரின் கவிதைகள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

எழுத்தாளர் இறையன்பு இ. ஆ. ப. குறிப்பிட்டது போல தாம் செய்த நன்றியை பிறரிடம் கூறாதது போல HCL சிவ்நாடார் செனாய்நகர் இளங்கோ மாதகராட்சி மேல்நிலைப்பள்ளியை மேம்படுத்த செய்த கோடிக்கணக்கிலான உதவியை எவரிடமும் தெரிவிக்கக் கூடாது என்று தெரிவித்ததாக தெரிவித்துள்ளார். உதவிகள் செய்வது செய்தவருக்கும் செய்யப்பட்டவருக்கும் மட்டுமே தெரிய வேண்டும்.

ஒரு கட்டாயத்தில் ஒரு மோசமான திரைப்பாடலை விரும்பி கேட்டதற்காக ஒரு வாசகர் விமர்சனம் செய்ய திரைப்படத்திற்கு பாடல் எழுதவே கூடாது என்று முடிவெடுத்ததாக கவிஞர் கூறியுள்ளார். ஆனால் மதுரை பற்றியும் அம்மா பற்றியும் எழுதிய கவிதைகளுக்கு கலாகேந்திர நாட்டியப்பள்ளியில் இசையமைத்து பாடியதை பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன், தமிழ்ச்சுடர் நிர்மலா மோகன், சொல்லின் செல்வி சங்கீத் ராதா, தமிழறிஞர் சுந்தர ஆவுடையப்பன், கவிமாமணி சி. வீரபாண்டியத் தென்னவன், ஏர்வாடியார் எஸ். ராமகிருஷ்ணன், கார்த்திகேயன் மணிமொழியன், கரிமேடு காமராசர் ஜான்மோசஸ், கலாம் கே. ஆர். சுப்பிரமணி, கவிக்குயில் இரா. கணேசன், கவிஞர் முனைவர் ஆ. மணிவண்ணன், திருநாவுக்கரசு இ. கா. ப., மதுரை உலா ரெ. கார்த்திகேயன் புகைப்படக் கலைஞர், சித்தரஞ்சன் மோகன் தாஸ் இ. ஆ. ப., பொறியாளர் ஐ. சுரேஷ், கவி பாரதி மு. வாசுகி, முனைவர் ச. சந்திரா, ஹலோ பண்பலை செல்வ கீதா ஆகியோர் குறித்தெல்லாம் சிறு குறிப்புகள் தந்துள்ளார். இலக்கியவாதிகள் பற்றியதான இத்தொகுப்பில் அம்மாவின் அப்பாவான தாத்தா அ. வ. செல்லையா பற்றியும் ஒரு சிறு கட்டுரை உள்ளது. தன் பகுத்தறிவு சிந்தனைக்கு அவரே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார். மானமிகு பி. வரதராசன் பெரியார் நெறியாளரும் பகுத்தறிவு சிந்தனைக்குக் காரணமானவர் என்கிறார்.

பார்வையற்றோருக்கு ஒரு விடுதியை நடத்தி வந்த பார்வையற்றவரான பழனியப்பன் மரணமடைய அவர் தம்பி கோபி அமெரிக்காவில் தன் பணியை விட்டு வந்து அண்ணன் செய்த பணியைத் தொடர்வது பாராட்டிற்குரியது. பழனியப்பன் குருதிக் கொடை வழங்கியதாகவும் தானும் அவருடன் இணைந்து குருதிக் கொடை வழங்கியதையும் தெரிவித்துள்ளார். மேலும் விடுதிக்கு நன்கொடை வழங்கி வருவதையும் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் இரா. இரவி இரத்தம் தானம் செய்வதுடன் புத்தகங்களையும் நூலகங்களுக்கு தானம் வழங்கி வருகிறார். மற்றவர்களையும் தூண்டி வருகிறார். தான் நூல்கள் வழங்கிய இறையன்பு நூலக நிறுவனர் நா. பார்த்தசாரதியையும் பாராட்டியுள்ளார். இறையன்பு அவர்கள் இரண்டு லட்ச ரூபாய் அளித்தும் நா. பார்த்தசாரதி அவர்கள் நூலகத்திற்கே பயன்படுத்தியதைக் குறிப்பிட்டுள்ளார். புத்தகங்கள் வாசிப்பதுடன், விமர்சிப்பதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும், சேமிப்பதை விட நூலகங்களுக்கு வழங்கி விடுவது நல்லது என்கிறார். வீட்டினர்க்கு விருப்பமில்லாத போது படைப்பாளிக்கு இக்கேள்வி எழுந்துவிடுகிறது. கவிஞர் இரா. இரவி சூழ்நிலை உணர்ந்து செயல்பட தொடங்கிவிட்டார்.

கவிஞர் இரா. இரவி தான் எழுதிய திரை விமர்சனங்களையும் தொகுத்து திரைச் சுவடுகள் என்னும் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பு வெளிவர அருட்தந்தை வெளியிட்ட திரைமொழி தொகுப்பே காரணம் என்கிறார்.

எழுத்து வேந்தர் இந்திரா சௌந்தர ராஜன் அவர்களையும் எழுத்தாளர் இறையன்பு இ. ஆ. ப. அவர்களையும் இணைத்து நண்பர்களாக்கியவர் கவிஞர் இரா. இரவி. எழுத்து வேந்தர் இந்திரா சௌந்தரராஜனுக்கு கடவு சீட்டுக்கு காவல் நிலையத்தில் ஆட்சேபனை இல்லை சான்று வழங்க இரவி உதவியுள்ளார் என்பதும் தெரியவருகிறது.

கவிஞர் இரா. இரவி திரும்பிப் பார்க்கிறேன் என்று பலரை, பல செய்திகளை நினைவுக்கூர்ந்துள்ளார். கவிஞர் இரா. இரவி மற்றவர் குறித்து எழுதி இருந்தாலும் இரவியின் நினைவுக் குறிப்புகளாகவும் உள்ளன. கவிஞர் தன் வரலாறு எழுதுவதற்கு ஒரு முன்னோட்டமாகவும் இருக்கிறது. இரவியுடன் பழகியவர்கள் இலக்கியவாதிகளாக மட்டுமல்லாமல் இந்திய ஆட்சி பணியாளர்களாக, இந்திய காவல்துறை பணியாளர்களாக, நீதிபதிகளாக, சுற்றுலா துறை அதிகாரிகளாக, முனைவர்களாக என பல்வேறு வகையினர் இடம்பெற்றுள்ளன. எழுத்தாளர் இறையன்பு இ. ஆ. ப. அதிகம் இடம்பெற்றுள்ளார். பேராசிரியர் இரா. மோகன் குறித்து கவிஞர் எழுதியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். கவிஞர் இரா. இரவி செய்த உதவிகள் அளப்பரியவை. ஒரு மனிதரை குறிப்பிட்ட நேரத்திற்கு குறிப்பிட்ட விமானத்தில் அனுப்பி வைப்பது என்பது பெரும்பணி. ஒரு சிலர் மீது விமர்சனம் இருந்தாலும் அவர்கள் பெயரைக் குறிப்பிடாதது நாகரிகமாக விட்டுள்ளார். கவிஞர் இரா. இரவியின் எழுத்து நடை இயல்பாக வாசகர்களிடையே உரையாடுவது போலுள்ளன. வாசகர்களிடையே பகிர்ந்தள்ளார் .கவிஞர் இரா. இரவி இன்னும் திரும்பிப் பார்க்க வேண்டும். நாம் வாசிக்க வேண்டும்.






## முருகன் வந்தான்..!


முருகன் வந்தான்.. மனதில்
முருகன் வந்தான்.. மனம்
உருக எழுது என்று பாடல்
தந்தான்..!
முருகன் வந்தான்...
முருகன் வந்தான்...

காலையிளம் பொழுதினிலே
முருகன் வந்தான்.. கவிதை
தந்த ஓசையிலே முருகன்
வந்தான்.... நாளை என்ற
நம்பிக்கையாய் முருகன்
வந்தான்.. நல்லவர்க்கு
நல்லவராய் முருகன் வந்தான்..
இனிய கவிதை எழுதும்
வேளை முருகன் வந்தான்..
இயல் இசை நாடகமாய்
முருகன் வந்தான்..
முருகன் வந்தான் தமிழ்
முருகன் வந்தான்..
முருகன் வந்தான்!

அருந்தமிழால் மெய் மறந்து
பாட வேண்டும்.. அவனருளால்
அவனடியைப் பரவவேண்டும்..
கருணைமிகு கந்தன் புகழைக்
கூற வேண்டும்
காலமெல்லாம் முருகன்
பெயரை பாட வேண்டும்!

குன்றுதோறாடும் வேலைப்
பாட வேண்டும்
என்றுமே கந்தவேலை
வணங்க வேண்டும்!
எப்பிறவி எடுத்தாலும்
முருகன் வேண்டும்.. எனது
குரல் முருகனுக்கே உருக
வேண்டும்.! முருகன்
வந்தான்.. தமிழ் முருகன்
வந்தான் முருகன் வந்தான்.!

**வே.கல்யாண்குமார்**



## கருவறை ஓலம்

தன்வீட்டு செவலைப்பசு
பசுங்கன்றை ஈன்றபோதும்
அடைவைத்த கோழி
பெட்டைக்குஞ்சுகளைப்
பொரித்த போதும்
இன்ப ஓடையில்
நனைந்தவர்கள்
தனக்குப்பிறந்தது
பெண்சிசு என்றதும்
கன்னத்தில் கைவைத்து
இடிந்து போகிறார்கள் !

ஆவதும் பெண்ணாலே
அழிவதும் பெண்ணாலே
உண்மைதான் கருவறையே
கல்லறையாகி விட்டால்
ஆவது தான் எது?

நீதி தேவதையே!
உன் சட்டவிலங்குகள்
மட்டும் மருத்துவ
யூதாசுகளுக்கு
பூட்டப்படவில்லை என்றால்
வெள்ளிக்காசுகளுக்காகப்
பெண்சிசுக்களை
முத்தமிடாமலேயே காட்டிக்
கொடுப்பார்கள்!

சமயத்தில் எட்டப்பனாய்
இயக்கப்படும் போது
கருவிலிருப்பது
கட்டபொம்மன்களாய்
இருந்துவிட்டால்
கவலையில்லை
கட்டபொம்மிகளாய்
இருந்துவிட்டால்
கருவறையே கயத்தாறு
ஆகிவிடுவதை எண்ணி
ஸ்கேன்கருவி
கண்ணீர் வடிக்கிறது!

அன்று அரக்கன்
கம்சனது ஏவலுக்காய்
பூதகி கண்ணனுக்கு
நச்சுப்பாலூட்டினாள்
இன்று பூலோகப்
பூதகிகளோ கமிசனுக்காகக்
கள்ளிப்பாலூட்டக்
காத்திருக்கிறார்கள்!



பாரதியே!
துறை தோறும்
முத்திரை
பதித்தால்
மட்டும்
போதாது
இனி மீசை
வைத்தால் தான்
இச்சமூகம் புதுமைப்
பெண்ணாய் ஏற்கும்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## மாமிசமெனும் தீவனம்...

மாமிசமெனும் தீவனம்
மாவிஷசமாக காரணம் !
இயற்கை முறையை
மறந்திங்கு
செயற்கையில் மாற்றம்
செய்ததனால்...
பலனை இன்று அனுபவித்து
பலவிதநோயால்
பறிதவித்தோம்!

உலகம் தோன்றிய காலமுதல்
ஒன்றில் ஒன்று ஒன்றுக்குள்
ஒன்று என்ற உண்மையை
நாம் மறந்தோம் ! இயற்கை
நமக்கு படைத்த உணவு
தேர்ந்து எடுத்த உண்டிட
பழகு!

புல்லும் பூண்டும், செடியும்
கொடி எல்லாம்
உயிர்கள் என்பதை உணரு. !
அவைகளின் உயிரை
பறிப்பதை தவிர்த்து
பலன்களை மட்டும்
புசித்திடபழகு! இயற்கை
உணவை உண்ட வரை
நோய்நொடிகள்
என்றும் தாக்கவில்லை!
செயற்கையாலே
படைக்கும் உணவால்
தொடரும் அழிவுக்கு
எல்லையில்லை!

கடல்தரும் உணவே
மருந்தாகும் அதுவே உனக்கு
விருந்தாகும்.! மாமிசமென்னும்
தீவனத்தால்... ஊன்உடல்
வளர்க்க எண்ணாதே!
மாண்டால் உயிரும் வாராதே!
ஒருமுறை பிறப்பு ஒருமுறை
இறப்பு என்பதை நீயும்
உணர்ந்திருந்தால்... !

## வஞ்சம் ஏனடி தஞ்சம் நீயடி

பிரமன் படைத்த அழகு
ரதியடி! பிடித்து பார்த்தேன்
பிடியிடை கொடியடி!
முறைத்து பார்த்தாய்
விழிந்தது தடியடி!
மறைமுகமாக கொடுத்த
பதிலடி! அஞ்சா விழியிலே
முறைத்த முறையடி!
பஞ்சு நெஞ்சிலே பிடித்த
தீயடி! வஞ்சம் ஏனடி தஞ்சம்
நீயடி! கொஞ்சும் தமிழிலே
கொஞ்சி பேசடி!
கருணை மழையினை
பொழிந்துபாரடி!
கடைசி வரையிலும்
துணையிருப்பேன்
நானடி...



**கவிஞர்
பொன். பனகல்
பொன்னையா.**



காத்திருந்த காலங்கள்
கரைந்து போனதே!

காட்டிய அன்பெல்லாம்
கலைந்துபோனதே!

பூத்திருந்த ஆசைகள்
உதிர்ந்துபோனதே!

புன்னகை என்னைப்
பிரிந்துபோனதே!

சேர்த்து வைத்த நினைவுகள்
சுமையாக..

சிதறிக் கிடக்கிறேன் இங்கு
உருக்குலைந்த சிலையாக!

நினைவுகள் சுகமானவை
என்று எல்லோருக்கும்
தெரியும்... ஆனால் அவை
கனமானவை என்றும்,

அவற்றைச் சுமப்பவர்களுக்கே
தெரியும் உன்னை மறக்கின்ற
எண்ணம் துளியும் இல்லை..



ஆனால் நீ
இல்லை
என்பது
ஏற்றுக்கொள்ள
பழகி
கொண்டேன்..
அவ்வளவுதான்

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்



வருவதும் போவதும்

கனவில் போலவே காலடி
வைத்து காதல் வருகிறது

அவள் புறப்பட்டுப்
போகையில் கதவு
'கிறீச்'சிட்டது

நான் அவளை மீண்டும்
அழைக்க விசையுடன்
பாய்ந்தேன்




அந்தக் கனவு
வடிவற்று
மறைந்தது

அந்தகாரத்தில்
மினுக்கியது
மெழுகுவர்த்தி
எங்கோ
வெகுதொலைவில் இரத்தம்
போல் ஒரு மாயச்சிவப்பில்.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

விதையைப் போன்றதே
வெற்றியும் என்னதான்
வீரியமுள்ள விதையாக
இருந்தாலும் வளமில்லா
மண்ணில் விழுந்தால்
முளைப்பதில்லை
நல்ல சூழல் உருவாகி
நீர் பாய்ச்சி உரமிட்டுக்
களை நீக்கினால்தான்
கனி கிடைக்கும்

மனிதனுக்குக் கிடைக்கும்
வெற்றியும்



கனி
போன்றதுதான்
அதில்
உதிக்கும்
விதை
போன்றதுதான்.

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை

## உலகதூக்கதினம் இன்று

தூக்கம் என்பது மனிதனாய்ப்
பிறந்த ஒவ்வொருவருக்கும்
தேவையான ஒரு விஷயம்.

தினமும் சராசரியாக 6
லிருந்து 8 மணி வரை
தூக்கம் போதுமானது.
தூக்கத்தை ஒத்திப் போடும்
ஒரே பாலூட்டி நாம்தான்.

தூக்கமின்மை பசியைத்
தூண்டும். தூங்கும்போது
வராத ஒன்றே ஒன்று தும்மல்
மட்டுமே.

நல்ல தூக்கத்தில் கனவு
வராது கனவில் ஏற்கனவே
பார்த்த முகங்கள் மட்டுமே
வரும் இறந்தவர்கள் கூட
நிஜம் போல் இருப்பார்.
விடிந்தால் அத்தனையும்
பொய்.

11 நாட்களுக்கு மேல்
தூங்காமல் இருந்தால் உயிர்
வாழ முடியாதாம்

தூக்கம் அவரவரின்
பழக்கத்தைப் பொறுத்தே
அமைகிறது. நீண்ட நேரம்
இரவு கண்விழித்துக்
காலையில் நேரம் கழித்து
எழுபவரும் உண்டு.
நேரத்தோடு தூங்கி
நேரத்தோடு எழுபவரும்
உண்டு. எந்த நேரம்
தூங்கினாலும் விடியலில்
எழுபவரும் உண்டு.

எத்தகைய உணர்ச்சிகளையும்
கட்டுப்படுத்த இயற்கையாகப்
படைக்கப்பட்ட ஒரு செயலே
தூக்கம்.

பூனைகள் தங்கள் வாழ்நாளில்
70% தூங்குகின்றன.
நத்தைகள் 3 ஆண்டுகள்
வரை கூடத் தூங்குமாம்.

அளவுக்கு மீறிய தூக்கம்
கெடுகின்ற இயல்புடையவர்,
விரும்பி ஏற்கும் மரக்கலம்
என்பது வள்ளுவம்.

இறப்பு என்பது ஒருவனுக்கு
உறக்கம் வருதல் போலவும்
பிறப்பு என்பது உறக்கம்
நீங்கி விழித்துக் கொள்வது
போலவும் என்பார்.

தூக்கம் கடிந்து செயல்

திரைப்படப் பாடல்களிலும்
தூக்கம் பற்றிய செய்திகள்
உண்டு.

இன்று மட்டும் உறங்க
வைத்தால் வணங்குவேன்
தாயே என்றும்,

மெத்தையை வாங்கினேன்
தூக்கத்தை வாங்கல என்றும்
பாடுவர்

பணத்துக்காகத் தூக்கத்தைத்
தொலைத்த வர்களும்
உண்டு பணம் வந்த பின்பு
உறக்கமின்றி தவிப்பவர்களும்
உண்டு

நன்றாகத் தூங்குபவர்களை
வரம் வாங்கி வந்தவன்
என்பர். கும்பகர்ணன் உட்பட.

தூங்காத விழிகள் ரெண்டு
என்றும் தூக்கமும்
கண்களைத் தழுவட்டுமே என
ஏங்குவதும் உண்டு.

பிரிவு நிலையால் தூக்கம்
வராது. யாராவது நன்றாகக்
குறட்டை விட்டுத் தூங்கிக்
கொண்டிருந்தால் சில
நேரங்களில் பெருமூச்சும்
வரும்.

சங்கப்பாடல்களில்
தலைவியைப் பிரிந்த
தலைவனை நினைத்து
உறக்கத்தைத்
தொலைத்ததைக் காணலாம்.

நள்ளிரவில் தன் துயரை
அறியாது யாவரும்
இனிது உறங்குகின்றனர்
என்ற பாடலில் தன்னை
எப்பொழுதும் வைது
கொண்டிருக்கும் தாயாரும்
தூங்கினாள்; தன்னுயிர்
தோழியும் தூங்கினாள்;
நனைந்தலை உலகமும்
துஞ்சும் என்பாள்

யாருக்கெல்லாம் தூக்கம்
வராது என்பதை
நான்மணிக்கடிகை இவ்வாறு
சொல்லும்.

கள்ளம் என்பார்க்கும் துயில்
இல்லை காதலி மாட்டு
உள்ளம் வைப்பார்க்கும் துயில்
இல்லை
ஒண்பொருள் செல்வம்
என்பார்க்கும் துயில் இல்லை
அப்பொருள் காப்பார்க்கும்
துயில் இல்லை

"அறுப்பு காலத்தில் தூக்கம்
கோடை காலத்தில் ஏக்கம்"
என்பது பழமொழி

"வாழ்வு வருங்கால் வாராது
கண் தூக்கம்!" என்றும்
உண்டு.)

கவிஞர் பெண்களின்
தூக்கத்தை அவரது தாய்
குழந்தைக்குத் தாலாட்டுவது
போல் கூறிய பாடல் இது

பெண்ணாகப் பிறந்தவர்க்குக்
கண்ணுறக்கம் இரண்டு முறை
பிறப்பில் ஒரு தூக்கம்
இறப்பில் மறுதூக்கம்

இப்போது விட்டு விட்டால்
எப்போதும் தூக்கமில்லை
என்னரிய கண்மணியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு

காலம் அது காலமிது
கண்ணுறங்கு மகளே
காலமிதைத் தவறவிட்டால்
தூக்கமில்லை மகளே

நாலு வயதான பின்னே பள்ளி
விளையாடல் நாள் முழுதும்
பாடச் சொல்லும் தெள்ளு
தமிழ்ப் பாடல்
எண்ணிரண்டு வயது வந்தால்
கண்ணுறக்கம் இல்லையடி
ஈரேழு மொழிகளுடன்
போராடச் சொல்லுமடி தீராத
தொல்லையடி


மாறும் கன்னி மனம் மாறும்
கண்ணன் முகம் தேடும்
ஏக்கம் வரும்போது தூக்கம்
என்பதேது தான் நினைத்த
காதலனைத் தேடி வரும்போது
தந்தை அதை மறுத்து
விட்டால் கண்ணுறக்கம் ஏது

மாலையிட்ட தலைவன் வந்து
சேலை தொடும் போது
மங்கையரின் தேன் நிலவில்
கண்ணுறக்கம் ஏது
ஐயிரண்டு திங்களிலும்
பிள்ளை பெறும் போதும்
அன்னை என்று வந்தபின்னும்
கண்ணுறக்கம் ஏது கை
நடுங்கிக் கண் மறைந்து
காலம் வந்து தேடும்
காணாத தூக்கம் எல்லாம்
தானாக சேரும் தானாக
சேரும்.....

**Bhanumati Nachiyar**



வானவில் குருவிகள்
வண்ணங்கள் வேறாக
இருந்தாலும் எண்ணங்கள்
ஒன்றே !!
ஒரே கிளையில்
ஒன்றாக அமர்ந்து கூடி
குலாவி மகிழ்வோம் !!
தாய் குருவியின்
சொல்லக்கேட்டு
சிறகுகள் பலம் பெரும்
வரை தன்னிச்சையாக
செயல் பட்டு பிரிந்திட
மாட்டோம்!!
ஒரு மர கூட்டில் தாயின்
அரவணைப்பில் சின்னஞ்சிறு
குஞ்சுகளாய் கீச் மூச்சென்று
ஒன்றாய் குரல் தந்து
ஒரே கிளையில் தாவி தாவி
விளையாடுவோம் !!
இன்று மாலை நெருங்கும்
வேளை வந்துவிட்டது
தாய் குருவியின்
குரல் காணோமே என
காரணம்புரியாமல்



அனைத்து குஞ்சுகளின்
முகபாவம் ஒன்றாய்
பார்த்தபடி
வெகுதூரத்தில் தெரிந்த
தாய் குருவியை கண்ட
மகிழ்ச்சியே !!

**செல்லம் சேகர்**



## புனித ரமலானே வருக!

இறைத்தீர்ப்பை நாம்
உணர்ந்து..!
முதல்பிறைப்பார்த்த நாள்
முதலாய்...முப்பது நாட்கள்
நோன்பிருந்தோம்..!

அகந்தையைக்களைந்து
ஆசையை துறந்து...
வைகறைப்
பொழுதில் இருந்து
அந்தி சாயும் வரை...
உனை வணங்கியே
தவமிருந்தோம்!

ரமலானின்
மகத்துவத்தை
திருமறையில் அறிந்து...
தினமும் இந்நாளில்
நித்திரையைப்போக்கி...
உன் கட்டளையை
நாங்கள் முழுமையாக
கடைப்பிடித்தோம்!
திரை மறைவில்லா
உந்தன் ரகசியம் புரிந்து...
உன் நற்கூலி ஒன்றையே
குறிக்கோளாய்கருதி...
எங்களின்
குறைகளைச்சொல்லி
அழுது முறையிட்டோம்!

இறைவா!
எங்கள் பாவக்கறையை
போக்கு...
நீ ஈந்துவக்கும்
இந்த சங்கை மிகு
புனித ரமலானில்...




இறைவா...
உன் அருள் மழையை...
எங்கள்மீது
பொழிவாயாக!!

**ஏ.எம்.ஷெரீஃப்,**
புதுக்கோட்டை.

## அழகு

மழைக்காலத்தில்
தூக்கி செல்லும்
குடை முகத்தை
மறைக்கும் போது
காற்றுகுடையை தள்ளும்
போது
மழை தன்
நீர் துளிகளை
முத்துக்களாக
அணிவித்து
அழகுபார்க்கிறது.

**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி



## துலுக்க நாச்சியார்.!

ரெங்கா.. ரெங்கா.. ரெங்கா என்று

ரெங்கனின் மீது காதல் கொண்டு..
சிங்காசனத்தில் இருந்த சுல்த்தான்
மகளாய் பிறந்து.. ரெங்கனின் நினைவில்
உயிரைத் துறந்தாள் துலுக்க நாச்சியரை
நினைப்போம்! துதிகள் அவளுக்குப்
படைப்போம்!

பாண்டி நாட்டை வென்ற சுல்தானின்
படைத்தலைவனாம் மாலிக் காஃபூர்.. பக்தி
நெறி அறியாது.. படையெடுத்தான்..
தேடி திருவரங்கன் ஆலயம் புகுந்து ரெங்கனின் ஐம்பொன்
சிலையுடன்.. தில்லிக்கு சென்றான்!

சுல்தானுக்கு மாலிக் கஃபூர் அரங்கனின்
சிலையை அள்ளிக் கொடுத்தான்.!

சுல்தானுக்கு ஆசை மகள் பெயர்.. சுரதானி.. தில்லிக்கு
இளவரசி.. அரங்கனின் சிலையை அள்ளி அணைத்தாள்!

சிலையின் அழகில்.. ரெங்கனின் அருளில்.. மெய்மறந்தாளே
துலுக்க அரசி சுரதானி தேவி.! தனியே வைத்து.. நீராட்டி..
புதிய பூக்களால் அலங்கரித்தாள்! ஐம்பொன் சிலையில்
அரங்கனைப் பார்த்தாள்! ஆருயிராக காதலித்தாள்!

அரங்கனின் சிலையை மீட்க.. தலைமைப் பட்டர் தில்லிக்கு
விரைந்தார்.. சுல்தான் முன்னே.. ஆடிப்பாடி.. அரங்கனின்
பெருமை எடுத்துச் சொல்லி.. அரங்கனின் சிலையை..
சுல்தான் மகளும் உறங்கிபொழுதில்.. அவளறியாமலே
அரங்கத்திற்கு திருப்பிக் கொடுத்தான்!

மகளோ அழுதாள்.. அரங்கன் எங்கே..?அப்பாவை கேட்டாள்..
அரங்கன் மீது உயிரை வைத்தேன்..! அந்தச்சிலைமேல் காதல்
கொண்டேன்..! அரங்கன் வேண்டும்.! அடம் பிடித்தாளே!

மகளின் அழுகை.. மன்னனை மாற்ற.. மீண்டும் சிலையை
அபகரிக்க.. தில்லி சுல்தான் தன் மகளுடனே.. திருவரங்கம்
விரைகின்றான்..!சுல்தான் வருகிற செய்தி அறிந்து பட்டர்கள்
ரங்கன் சிலையுடன் தலைமறைவாயினர்.!

தேடினாள்.. தேடினாள்.. தேம்பியே அழுதாள்.. ஓடினாள்..
ஓடினாள்.. உயிரினைத் துறந்தாள்! அரங்கனின் வாயிலில்
அவள் உயிர் பிரிந்தது..! அரங்கனுடன் கலந்தது!

அந்த நாள்முதல்.. இந்தநாள் வரை.. அவளின் அன்பினை
நினைத்து வணங்குவர் ஜீயர் வந்து கசிந்து போற்றுவர்.
சிலைவணக்கம் துலுக்கருக்கு இல்லை!
தூயவள் உருவை ஓவியமாக்கி அரங்கத்தில் வைத்தார்..

மார்கழி மாதம் ஏகாதசியில்..பகல் பத்து நாட்களில்..
அதிகாலையில் ரெங்கனின் சிலைக்கு லுங்கியைச் சாற்றி..
ரொட்டியும் வெண்ணையும் படையலாய் வைத்து அவள்
நினைவாக அதனைச் செய்தனர்..!

ஓவியப் பாவை.. ஒப்பற்ற அன்பினள்.. தில்லியின் அரசி..
துலுக்க நாச்சிக்கு.. படைத்துப் பின்பு அரங்கனுக்கு முன்னே
அன்புடன் வைத்தனர்!

அரங்கனை நினைத்த ஆண்டாள் போலவே..சூடிக் கொடுத்த



சுடர்க்கொடி போல.. தன் ஆவியைக் கொடுத்த
தில்லி இளவரசி.. துலுக்க நாச்சியரை வணங்கி
மகிழ்ந்தாரே..

அரங்கம் செல்வோம்.. ரெங்கனைப் பணிவோம்..
துலுக்க நாச்சியார் ஓவியம் முன்னே பணிந்து
வணங்குவோமே.!

**வே.கல்யாண்குமார்.**




























தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE






## ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்

ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்

CONTACT US 9597887308, 6380453463

EXPERT IN VEDIC ASTROLOGY

- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

## ARG CONSTRUCTIONS

We Build Your DREAM HOME

Recently We Have Completed Over 50+ Big Projects

SERVICES WE OFFER
- Residential Construction
- Commercial Construction
- Customer Satisfaction

Contact Us 9710348377

## VINAYGA ENTERPRISES

WANTED

COMPUTER OPERATOR (FEMALE)

ONIDA AUTHORISED SERVICE CENTRE

CONTACT: 9962116238

ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!

Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!

Contact: CT. Guruji

Phone: 90031 32847

LIMITED PLOTS - BOOK NOW!

## PREMA ENTERPRISES

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME

DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?

+91 9884417843

## Get Free Jobs Alert on Your WhatsApp

Register Yourself on our 8122664699

WhatsApp Your Name, Age & Address on Above Number

Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

## ST COURIER

The People's Choice

ISO 9001:2008 Certifed

DOMESTRIC- INTERNATIONAL

Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.

Cell: 9176130601

## Launch Your Own Secure Crypto MLM Software Today!

@4999/- onwards

CALL: 98537 19337, 74369 14247

www.mlmperfect.com

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

## ADVERTISE WITH US

CONTACT US 9438610756

## S.R Call Drivers Travels

24 Hours

Man Power & All Vehicle Available

Prop. S.SRIRAM

Contact: 95513 81576 / 86086 22056

True Work is Our Capital

No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

## WANTED

## JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

## Just499

JOB WEBSITE SOFTWARE

We Provide Complete Job Portal Software Solution

ONLY Rs. 499

Website: just499.com

Phone: 7789951009

WhatsApp: 7789951009

Email: orderjust499@gmail.com

## Euro Kids

Pre-School

Right Start, Flying Start!

Tondiarpet

9940661625

Introducing

HEUREKA

THE VISIBLE THINKING CURRICULUM

based on Harvard's Project Zero

Admissions Open for AY 25-26

EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior

23+ Years of Experience

TUV Nord Safety Certified

1,600+ Pre-schools

No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

## just499®

MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com

Phone/WhatsApp: 7789951009

Email: orderjust499@gmail.com

























## Special Invitation

to retired seniors **house** **wives businessmen bankers**
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate


To restart your **second Innings with a career business opportunity**

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided
For successful business.


**Contact Mr. Irudaya Raj**
**Ph.9486634780**





# பல்சுவை களஞ்சியம்




# சுதந்திர போராட்டம் பற்றிய அரிய தகவல்

51.பாபா சாகேப் அம்பேத்கர், 1942 முதல் 1946 வரை, பிரிட்டிஷ் வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில் எந்தத் துறைக்கு பொறுப்பு வகித்தார்?
தொழிலாளர் நலத்துறை

52.இந்திய அரசியல் சாசனத்தின் அதன் மைய கருத்துக்களைப் பிரதிபலிக்கும் பகுதி யாது?
முகவுரை

53.இந்தியக் குடியரசுத் தலைவருக்காக டெல்லிக்கு வெளியே, அலுவலக மாளிகைகள் அமைந்துள்ள இரு நகரங்கள் யாவை? ஐதராபாத், சிம்லா

54.நாட்டின் வரி வருவாயை மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்துகொள்வதற்கான பரிந்துரை வழங்கும் அமைப்பு யாது? நிதி குழு

55.வேலூர் புரட்சி நிகழ்ந்த ஆண்டு எது? 1806

56.இந்தியாவில் முதன் முதலாக நாடுமுழுவதும் செல்லத்தக்க அஞ்சல் தலை அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு எது? 1854

57.வந்தே மாதரம் பாடல் எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது?
அனந்த மடம்

58.ஜன கண மன பாடலை தேசிய கீதமாக அறிவிக்கும் தீர்மானம், அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட நாள் எது?
24.01.1950

59.விடுதலைப் போராட்டத்தின் போது, காங்கிரஸ் மாநாட்டில், 'ஜன கண மன' பாடலை முதலில் பாடப்பட்ட நாள் எது? 27.12.1911

60.ஜன கண மன பாடல், முதலில் எந்த இதழில் வெளியானது?
தத்வபோதினி பத்ரிகா

61.தமிழகத்தில் இயங்குகின்ற, யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள்



பட்டியலில் இடம் பெற்றுள்ள ரயில் சேவை எது? நீலகிரி மலை ரயில்

62.சுதந்திர இந்தியாவின் முதலாவது துணை பிரதமர் யார்?
சர்தார் வல்லபாய் படேல்.

63.இந்தியக் கடற்படை அப்பெயர் பெற்ற நாள் எது? 26.01.1950

64.குஜராத்தில் புகழ்மிக்க பர்தொலி வரிகொடா இயக்கத்திற்கு தலைமை வகித்தவர் யார்?
சர்தார் வல்லபாய் படேல்.

65.ஹோம் ரூல் இயக்கத்தை தொடங்கியவர் யார்?
அன்னிபெசண்ட் அம்மையார், லோக்மான்ய திலகர்

66.இந்தியக் கொடியை வெளிநாட்டில் முதன் முதலாக 1907 ஆம் ஆண்டு ஏற்றிய வீராங்கனை யார்?
பைகாஜி காமா அம்மையார்.

67.பெண் கல்வியை ஊக்குவிக்க அரிய மகிளா சமாஜத்தை தோற்றுவித்தவர் யார்? பண்டித ரமாபாய்.

68.இந்தியாவில் முதலாவது பெண் ஆசிரியரும் பெண்களுக்கான பல பள்ளிகளை தோற்றுவித்தவருமானவர் யார்?
சாவித்ரிபாய் பூலே

69.சமூக சேவகர்" மகாத்மா ஜொதிராவ் புலே நிறுவிய சமூக சீர்திருத்த அமைப்பின் பெயர் என்ன?
சத்யஷோதக் சமாஜம்.

70.1885 ல் நடைபெற்ற முதல் காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்தது யார்?
W.C.பானர்ஜி

71.சர்தார் வல்லபாய் படேல் மேற்கொண்ட "ஆபரேஷன் போலோ" நடவடிக்கை மூலம் 1948ல் இந்தியாவுடன் இணைந்த சமஸ்தானம் எது? ஹைதராபாத்.

72.பாதுகாப்பு படைகளுக்கான மிக உயரிய தீரச்செயல் விருதாகிய பரம் வீர் சக்ரா விருது பெற்ற முதல் வீரர் யார்? மேஜர் சோம்நாத் ஷர்மா.

73.இந்திய தேசிய கொடியின் நீளம் மற்றும் அகிலத்தின் விகிதாசாரம் என்ன? 3:2

74.இந்திய கடற்படையின் முதல் இந்திய தளபதி யார்?
வைஸ் அட்மிரல் R.D.கட்டாரி.

75.மகாத்மா காந்தியின் அரசியல் குருவாக போற்றப்படுபவர் யார்?
கோபால கிருஷ்ண கோகலே

76.நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், இந்திய தேசிய காங்கிரஸின் அங்கமாக, ஃபார்வர்ட் பிளாக் அமைப்பை உருவாக்கிய நாள் எது?
03.05.1939

77.விடுதலை போராட்டத்தின்போது டெல்லி செல்வோம் என்ற பொருள்படும் 'டெல்லி சலோ' முழக்கத்தை முன்வைத்த தலைவர் யார்?
நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்.

78.நாட்டின் இடைக்கால பிரதமராக இரண்டு முறை பதவி வகித்த விடுதலை போராட்ட வீரர் யார்?
குல்சாரிலால் நந்தா

79.தேசபந்து என போற்றப்படுபவரும் சுயராஜ்ய கட்சியை நிறுவியவருமான சுதந்திர போராட்ட தலைவர் யார்?
சித்தரஞ்சன் தாஸ்.

80.விடுதலை போராட்ட வீரர் பகத்சிங் எழுப்பிய இரு வார்த்தையில் அடங்கிய புகழ்மிக்க முழக்கம் யாது?
"இன்குலாப் ஜிந்தாபாத்"

# மீம்ஸ்









# விவசாயி அடைந்த வருத்தம்

கிராமத்திலிருந்து ஒரு விவசாயி நகரத்துக்கு வந்தான். பசி எடுத்தது அவனுக்கு ஒரு சிற்றுண்டி விடுதிக்குச் சென்று, ஒரு தோசை கொண்டு வரச் சொல்லி, சாப்பிட்டான், பசி அடங்கவில்லை. மேலும், ஒரு தோசை கொண்டுவரச் சொல்லி, அதையும் சாப்பிட்டான் அப்பொழுதும் அவன் வயிறு நிறையவில்லை. மூன்றாவது தடவை, ஒரு தோசை வரவழைத்து அதையும் சாப்பிட்டான்.



பசி அடங்கவில்லை. பிறகு ஒரு மசால் வடையைக் கொண்டு வரச் சொல்லி, அதைச் சாப்பிட்டதும் பசி அடங்கியது.


அப்பொழுது அந்த விவசாயி தன் தலையில் அடித்துக் கொண்டு, “என்னைப் போல் மூடன் எங்கேயாவது இருப்பானா? மூன்று தோசைகளையும் வாங்கிச் சாப்பிட்டு, காசை வீணாக்கிவிட்டேனே! முதலிலேயே ஒரு மசால் வடையை வாங்கித் தின்றிருந்தால், பசி அடங்கியிருக்குமே” என்று மனம் வருந்தினான்.





# விடுகதை

| | |
|---|---|
| அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன? | தண்ணீர் |
| நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? | கைகாட்டி |
| தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? | அன்னாசிப்பழம் |
| ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன? | காட்ஸ் |
| கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? | பஞ்சு |



# ஜோக்ஸ்

நீதிபதி : ” அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?”

திருடன்: “என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க”

==========================================

தொண்டர் 1 : “தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?”

தொண்டர் 2 : ” சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, ‘எந்த வட்டத்தின் சார்பில போடுறே’ன்னு கேட்கிறாரு”

==========================================

“வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?”

“ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க”

“ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்”

“ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்”

“அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க”



==========================================

“இந்த ஆசிரியர் வித்தியாசமானவரா, எப்படி?”

“பதிலை சொல்லிட்டு, இதனோட கேள்வி என்னனு கேட்பார்”

==========================================

“டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை”

“அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?”

“காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர்!”

==========================================

தொண்டர் 1: “தேர்தல்ல தோல்வி அடையாமல் இருக்க என்ன வழி?”

தொண்டர் 2: “போட்டி போடாமல் இருந்திடறதுதான் ஒரே வழி!”

==========================================

“சுவரில் எழுதாதே’ன்னு இருந்தது. நான் போயி...”

“என்ன செய்தே?”

” ‘சரி எழுதலை’ன்னு எழுதிட்டு வந்திட்டேன்”

==========================================

ஆசிரியை : “ஒரு ரூபாய்க்கு ஒரு ஆப்பிள், அப்படின்னா பத்து ரூபாய்க்கு எத்தனை ஆப்பிள்?”

மாணவன்: “ஒரு ரூபாய்க்கு எந்த கடையில ஆப்பிள் விற்குதுன்னு சொல்லுங்க, நான் போய் வாங்கி வறேன்”

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## பழனி முருகன் கோவிலில் VIP தரிசன டிக்கெட் கிடையாது - கோவில் நிர்வாகம் திடீர் அறிவிப்பு



அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் வருடம் முழுவதும் பல்வேறு ஊர்களில் இருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகை தருகின்றனர். திருவிழா காலங்களில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்படும்.

பக்தர்கள் தரிசனம் செய்ய ஏதுவாக பொது கட்டணம், வி.ஐ.பி. தரிசன வழிகள் உள்ளன. இதில் சிறப்பு தரிசன வழியில் செல்ல வி.ஐ.பி. டிக்கெட் வழங்கப்பட்டு வருகிறது. அமைச்சர்கள், எம்.எல்.ஏ., எம்.பி., திரைப்பட பிரபலங்கள், விளையாட்டு உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், அரசுத்துறை அதிகாரிகள் இந்த தரிசன வழியில் செல்வது வழக்கம்.

அரசு துறை அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில் இந்த டிக்கெட் வழங்கப்படுவது வழக்கம். இந்நிலையில் தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23-ந்தேதி நடைபெற உள்ளது. இதனால் நடத்தை விதிமுறைகள் பின்பற்றப்பட்டு வரும் நிலையில் தேர்தல் முடியும் வரை எந்தவித பரிந்துரை கடிதங்களுக்கும் வி.ஐ.பி. சிறப்பு தரிசனத்துக்கான "வி" டிக்கெட் கோவில் அலுவலகத்தில் வழங்கப்படாது. இதே போல் ரோப்கார் மற்றும் மின் இழுவை ரெயில் நிலையத்திலும் மலைக்கோவிலுக்கு செல்ல முன்னுரிமை அளிக்கப்படாது என்று கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழனி கோவிலில் வருகிற 26-ந் தேதி பங்குனி உத்திரத்துக்கான கொடியேற்றம் தொடங்கி 10 நாட்கள் நடைபெற உள்ளது. இதனால் தற்போதே பல்வேறு ஊர்களில் இருந்து காவடி, தீர்த்தம் எடுத்து வந்து முருகப்பெருமானை தரிசனம் செய்து வருகின்றனர். வி.ஐ.பி. டிக்கெட் ரத்து செய்யப்பட்டுள்ளதால் அனைவரும் பொது தரிசன வழியில் சுவாமி தரிசனம் செய்ய அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

## உலக புகழ்பெற்ற கூவாகம் கூத்தாண்டவர் கோவில் சித்திரை பெருவிழா ஏப். 14-ந்தேதி தொடங்குகிறது



தொடர்ந்து 27-ந் தேதி (திங்கட்கிழமை) மாலை கம்பம் நிறுத்துதலுடன் உள்ளூர் திருநங்கைகள் தாலி கட்டிக்கொள்வார்கள். 28-ந் தேதி (செவ்வாய்க் கிழமை) சுவாமி திருக்கண் திறத்தலுடன் வெளியூர், வெளி மாநிலத்தில் இருந்து வரும் திருநங்கைகள் தாலி கட்டிக்கொண்டு இரவு கும்மி அடித்து, ஆடிப்பாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள்.

அதனைத்தொடர்ந்து 29-ந் தேதி (புதன்கிழமை) காலை திருத்தேர் வடம் பிடித்து இழுத்து பொது மக்கள் நேர்த்திக்கடன் செலுத்துவார்கள். பின்னர் அங்கிருந்து தேர் புறப்பட்டு தெய்வநாயக செட்டியார் பந்தலடையை அடைந்த பின்னர் அங்கு புளிசாதம் படைத்து திருநங்கைகள் கணவரை நினைத்து ஒப்பாரி வைத்து அழுது பூசாரி கையால் வளையல் போட்டு தாலி அனைத்தையும் அறுத்து விட்டு அருகில் உள்ள கிணறு, குளம் ஆகிய இடங்களில் குளித்துவிட்டு வெள்ளை புடவை அணிந்து கொண்டு அவரவர் வீட்டிற்கு செல்வார்கள்.

அதனைத்தொடர்ந்து மே மாதம் 1-ந் தேதி தர்மர் பட்டாபிஷேகம், மஞ்சள் நீராடுதல் நடைபெற்று திருவிழா நிறைவு பெறுகிறது.

## தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையானிடம் ஆண்டு வரவு, செலவு கணக்கு ஒப்படைப்பு

தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று ஆழ்வார் திருமஞ்சனம் நடந்தது. தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு மற்றும் கோவில் ஊழியர்கள் வளாகம் முழுவதும் தூய்மைப்படுத்தி பல்வேறு வாசனை திரவியங்களை தெளித்தனர்.

கோவில் வளாகம் மற்றும் வெளிப்புறங்களில் பல்வேறு வகையான மலர்கள் மற்றும் வண்ண மின்விளக்குகள் அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. இன்று அதிகாலை 3 மணிக்கு சுப்ரபாத சேவையுடன் பூஜைகள் தொடங்கியது.

காலை 8 மணிக்கு வேத பண்டிதர்கள் கடந்த ஆண்டு வரவு-செலவு கணக்குகளை ஏழுமலையானிடம் சமர்ப்பிக்கும் ஐதீகம் நடந்தது. பின்னர் இந்த ஆண்டுக்கான புது பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டது.

திருப்பதியில் நேற்று 72,332 பேர் தரிசனம் செய்தனர். 21,852 பேர் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.3.53 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 12 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.



## ஆறு விரல்கள் கொண்ட சுந்தர மகாலட்சுமி

செங்கல்பட்டு மாவட்டம் பாலாற்றங்கரையில் அரசர் கோவில் எனுமிடத்தில் அமைந்துள்ளது, சுந்தர மகாலட்சுமி சமேத கமல வரதராஜப் பெருமாள் கோவில். இங்கு அருள்பாலிக்கும் சுந்தர மகாலட்சுமி தாயாரின் வலது காலில் ஆறு விரல்கள் இருப்பது அபூர்வ காட்சியாகும்.



### தல வரலாறு

ஒரு சமயம் நான்முகனான பிரம்மன், தனக்கு ஏற்பட்டிருந்த சாபம் நீங்க முனிவர்களிடம் ஆலோசனைக் கேட்டார். அதற்கு 'விண்ணாளும் விஷ்ணுவும், மண்ணாளும் வேந்தனும்' சேர்ந்து எந்த இடத்தில் காட்சி தருகிறார்களோ, அங்கு சாபவிமோசனம் கிடைக்கும் என்றனர். பிரம்மனுக்கு சாபவிமோசனம் அளிக்க விரும்பிய விஷ்ணு பகவான் இத்தலத்தில் எழுந்தருளினார். அதேசமயம் புனித யாத்திரையாக பயணித்துக் கொண்டிருந்த ஜனக மகாராஜாவும் இத்தலம் வழியாக வந்தார்.

இதை அறிந்த பிரம்மன், இத்தலம் வந்து பெருமாளை நோக்கி தவம் இயற்றி, இருவரையும் ஒருசேர தரிசித்து சாபவிமோசனம் பெற்றார்.

ஜனகர், பெருமாளுக்கு தினமும் பூஜை செய்து வந்தார். ஒரு நாள் ஜனகர் வேலை காரணமாக வெளியே சென்றதால் பூஜை செய்யமுடியவில்லை. அப்போது பெருமாளே, மன்னன் பூஜை செய்வது போன்று சிம்மாசனத்தில் அமர்ந்து பூஜை செய்தார். மன்னன் திரும்பி வந்து பார்த்தபோது, பூஜை செய்ததற்கான தடயங்கள் இருந்தன. தான் செய்யவேண்டிய பூஜையை பெருமாளே செய்தது அறிந்து மெய்சிலிர்த்தார்.

ஆனால் பக்தனான மன்னனின் இருப்பிடம் சென்று பெருமாள் பூஜை செய்ததை அறிந்து மகாலட்சுமி கோபம் கொண்டார். அப்போது மகாவிஷ்ணு, 'இங்கு எழும் ஆலயத்தில் உனக்கே முதல் மரியாதை. உன்னை வழிபடுபவர்களுக்கு சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும்' என அருள்புரிந்து மகாலட்சுமியை சமாதானம் செய்தார். இதனால் மனம் மகிழ்ந்த மகாலட்சுமி, "தாமரையில் வசிக்கும் என் சார்பாக, தாங்கள் தங்கள் திருக்கரத்தில் தாமரை மொட்டு ஏந்தி அருள்பாலிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அதன்படியே இத்தலத்தில் அருளும் பெருமாள் திருக்கரத்தில் தாமரை மொட்டு காணப்படுகிறது. இதனால் இறைவன் 'கமல வரதராஜப் பெருமாள்' என்று அழைக்கப்படுகிறார்.

### கோவில் அமைப்பு

கோவிலுக்குள் நுழைந்ததும் முதலில் பலி பீடம், கருடாழ்வார் சன்னிதி காணப்படுகிறது. அடுத்ததாக, இருபத்திநான்கு தூண்கள் கொண்ட கலைநயமிக்க ஒரு மண்டபம் உள்ளது. அதைத் தொடர்ந்து சென்றால் அர்த்தமண்டபமும், கருவறையும் அமைந்துள்ளது. கருவறையில் கமல வரதராஜப் பெருமாள், ஸ்ரீதேவி - பூதேவி சமேதராக நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இவரின் வலது கரத்தில் தாமரை மொட்டு காணப்படுகிறது. தாயார் சுந்தர மகாலட்சுமி கிழக்கு நோக்கிய தனிச் சன்னிதியில் அருள்பாலிக்கிறார். இவர் மேல் இரு கரங்களில் தாமரை மலர் ஏந்தியும், கீழ் இரு கரங்களில் அபய வரத ஹஸ்த முத்திரை காட்டியும் தாமரைப் பீடத்தில் பத்மாசன கோலத்தில் காட்சி தருகிறார்.

### சுந்தர மகாலட்சுமி

தாயாரின் வலது பாதத்தில் சுண்டு விரலை அடுத்து ஆறாவதாக ஒரு விரல் அமைந்துள்ளது சிறப்பாகும். இந்த அன்னையை வழிபட்டால் வாழ்வில் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. இத்தலத்தில் தாயாரை வணங்கிய பின்னரே, பெருமாளை வணங்க வேண்டும் என்பது மரபாக உள்ளது.

தாயாரின் கருவறை கோஷ்டத்தில் யோகநரசிம்மர், குபேரன், காளிங்க நர்த்தன கண்ணன், பரமபதநாதர், திரிவிக்ரமர் ஆகியோர் காட்சி அளிக்கின்றனர். தாயாரின் சன்னிதிக்கு வெளியில் இடதுபுறமாக பலாப்பழம் ஏந்திய 'பலாப்பழ சித்தர்" ஒருவரின் சிற்பம் உள்ளது.

அந்த சித்தர், தினமும் அன்னைக்கு பலாப்பழம் படைத்து வழிபட்டுள்ளார். எனவே அபிஷேகத்தின்போது, அன்னைக்கு பலாச் சுளைகளால் அபிஷேகம் செய்து, பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது. இங்கு ஆண்டாளுக்கு தனிச் சன்னிதியும் காணப்படுகிறது. கோவில் தல விருட்சமாக அரச மரம் உள்ளது.

### அமைவிடம்

செங்கல்பட்டு - மதுராந்தகம் சாலையில் படாளம் கூட்டு ரோட்டில் இருந்து இடது பக்கம் செல்லும் சாலையில் சுமார் 6 கி.மீ. தொலைவில் இக்கோவில் அமைந்துள்ளது. படாளம் ரெயில் நிலையத்தில் இருந்து 3.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

## சிதம்பரத்தில் பிரசித்தி பெற்ற ஆருத்ரா தரிசனம்

சைவ சமயஆச்சாரியர்களான அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரால் போற்றப் பெற்றதும், ஐம்பூதங்களில் ஆகாய தலமாக விளங்குவதும் சிதம்பரம் நடராஜர் கோவில் ஆகும். இந்த கோவிலை தரிசித்தால் முக்தியளிக்கும் தலமாக விளங்குகிறது.

பிரசித்திப்பெற்ற நடராஜர் கோவிலில் ஆண்டுக்கு 2 திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஒன்று ஆனித்திருமஞ்சன தரிசன திருவிழா, மற்றொன்று மார்கழி திருவாதிரை ஆருத்ரா தரிசன திருவிழா ஆகிய இரு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இந்த திருவிழாக்கள் கொடியேற்றம் தொடங்கி 10 நாட்கள் நடைபெறும். தினமும் காலை, மாலை இருவேளையும் பஞ்சமூர்த்தி வீதிஉலா நிகழ்ச்சி நடைபெறும். 9-ம் நாள் தேர்திருவிழாவும், 10 நாள் சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்திக்கு மகாபிஷேகமும், தரிசனமும் நடைபெறும்.

நடராஜர் கோவில் திருவிழாக்களில் முக்கியமானது என்னவென்றால் சித்சபையில் வீற்றிருக்கும் சிவகாமசுந்தரி அம்பாளும், நடராஜமூர்த்தியும் தேர்த்திருவிழாவின் போது கோவிலில் இருந்து வெளியே வருகின்றனர். 2 திருவிழாவின் போதும் தேரில் வீதிஉலா வந்த பின்னர் ராஜ்யசபை என்கிற ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளி, அங்கு மகாபிஷேகமும், லட்சார்ச்சனையும், திருவாபரண அலங்கார காட்சியும் நடைபெறும்.

பின்னர் தரிசனத்தன்று ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளிய சிவகாமசுந்தரி அம்பாளும், நடராஜமூர்த்தியும் நடனமாடி பக்தர்களுக்கு தரிசன காட்சியளித்து மீண்டும் சித்சபையில் எழுந்தருளுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மார்கழி ஆருத்ரா தரிசனத்தின் போது திருவிழா முதல்நாள் முதல் 10-ம் நாள் வரை மாலை 6 மணிக்கு சாயரட்சை பூஜையில் சித்சபையில் மாணிக்கவாசகர் உற்சவம் நடைபெறும்.

ஸ்ரீநடராஜர் கோவிலில் சித்சபையில் உள்ள மூலவரான ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமந்நடராஜமூர்த்திக்கு சித்திரை, ஆனி, ஆவணி, மார்கழி, மாசி, புரட்டாசி மாதங்களில் ஆண்டுக்கு 6 முறை மகாபிஷேகம் நடைபெறுவது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும்.

ஆனித்திருமஞ்சனம், மார்கழி திருவாதிரை தரிசனம் ஆகிய இரு திருவிழாக்களின் போது ஆயிரங்கால் மண்டபத்தின் முகப்பில் அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்பும், மற்ற மாதங்களில் மாலை வேளையில் சித்சபையின் வெளியே உள்ள கனகசபையிலும் மகாபிஷேகம் நடைபெறுவது வழக்கம்.



இத்தலத்தில் நடராஜர் கோவிலில் சிவகங்கை தீர்த்தமும், சிவசக்தி வடிவமாக கருதப்படும் கிணறும் உள்ளது. உடற்பிணியால் வருந்திய சிங்கவர்மன் என்ற வேந்தன் இச்சிவகங்கை குளத்தில் நீராடியதால் உடற்பிணி நீங்கி பொன்னிறம் பெற்றதாக வரலாறு கூறுகிறது. இவை அல்லாமல் மற்றைய தீர்த்தங்களான வியாக்பாரதர் தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகசேரி தீர்த்தம், புலிமேடு தீர்த்தம், சிவப்பிரியை தீர்த்தம், திருப்பாற்கடல் தீர்த்தம், ஓமக்குளம் தீர்த்தம், ஞானப்பிரகாச தீர்த்தம், ஆயிக்குளம் தீர்த்தம், பிரம்மதீர்த்தம் ஆகிய தீர்த்தங்கள் நகரில் பல்வேறு பகுதிகளில் உள்ளன.

சுமார் 51 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இக்கோவிலின் 4 கோபுரங்களும் 4 ராஜகோபுரங்களாக அமைந்துள்ளது. கிழக்கு, தெற்கு, மேற்கு கோபுரங்கள் 135 அடி உயரம் கொண்டவை, வடக்கு கோபுரம் மட்டும் 140 அடி உயரம் கொண்டவை. இக்கோவிலில் நெடுங்காலமாக போற்றப்படும் ஆடல்கலை சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

சிவபெருமான் ஆடிய 108 கரணங்களும், சுலோகங்களும் மேலகோபுரத்தில் உள்வாயிலில் அழகாக பொறிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று தெற்கு, வடக்கு, கிழக்கு கோபுரங்களிலும் இக்கரணங்களின் செயல்முறைகள் சிற்ப அமைப்பில் உள்ளது.

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## ரமலான் நோன்பு திறப்பு இஃப்தார் நிகழ்ச்சி



சென்னை குரோம்பேட்டை ST.MARK'S மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளியில் நேற்று ரமலான் நோன்பு திறப்பு இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் பள்ளியின் குழந்தைகள் பெற்றோர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். இஃப்தார் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக முதல்முறை நடைபெற்றது.அனைவரின் பாராட்டுக்கள் பெற்றது.

### 2026 பொது தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு

## 100 சதவீதம் வாக்களிப்பு அவசியம் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம்




**திருவண்ணாமலை மார்ச் 20:** மாநகராட்சி அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்- 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதின் அவசியம் குறித்து விழிப்புணர்வு பிரச்சார பேரணியை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு சர்க்கிள் தலைவர் சக்தி D.நாகேந்திரன் உணவு வழங்கினார்



**சென்னை,மார்ச் 20:** வடசென்னை கிழக்கு மாவட்டம் ராயபுரம் 52வது வட்டம், ஆடுதொட்டி பகுதியில் தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு சர்க்கிள் தலைவர் சக்தி D நாகேந்திரன், கூடுதல் பொறுப்பாளர் B.T.ராஜாசங்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் கலந்து கொண்டு அனைவருக்கும் யுகாதி வாழ்த்துக்கள் தெரிவித்ததோடு பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கினார். உடன் மாவட்ட அமைப்பு செயலாளர் I.முகமது பாரூக், மாவட்ட பொருளாளர் B.கார்த்திகேயன், தலைமை நிலைய செயலாளர் T.V.முருகன், சர்க்கிள் தலைவர் S.K.வீராரெட்டி, செய்தி தொடர்பாளர் D.B.பாஸ்கர் மற்றும் திருபால், கோபால், மொய்தீன் அக்பர், விஜயலட்சுமி உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.






## ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு அலங்காரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## தெலுங்கு வருடப்பிறப்பு (யுகாதி) வாசவி அம்மன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு



**புதுக்கோட்டை,மார்ச்20:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் யுகாதி பண்டிகையை முன்னிட்டு காலை 7 மணி அளவில் ஸ்ரீவாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள்ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாபாராதனையும் நடைபெற்றது.

வாசவி மாதர் சங்கத்தினர் ஸ்ரீ வாசவி அம்மன் காயத்ரி மற்றும் ம்ருத்யுஞ்சய மந்திரம்,யுகாதி மந்திரம், பாராயணம் செய்தார்கள். ஆலய அர்ச்சகர் திரு.சந்தோஷ் ஐயர் அவர்களால் 2026 ஸ்ரீபராபவ வருடத்திய பஞ்சாங்க ச்ரவனம் வாசித்தார்.


70 வயது பூர்த்தியான புதுகை வாழ் வைசிய பெருமக்களுக்கும், தம்பதிகளுக்கும் வாசவி இளைஞர் சங்கத்தினரால் துண்டு அணிவித்தும், தாம்பூலம் வழங்கியும், மலர் மாலை மற்றும் பரிசுப் பொருட்கள் வைஸ்ய நண்பர்கள் வழங்கினார்கள்.

அனைவருக்கும் மரியாதை செய்யப்பட்டது. வைஸ்ய மாதர் சங்கத்தினரால் சுமங்கலிகளுக்கு ஒடிவாலு கட்டப்பட்டது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜைகள் கலந்துகொண்டுவாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதம்,காலை உணவும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு 48 -ஆம் நாள் மண்டல பூஜை விழா சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை , மார்ச்20:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் ஆண்டியாபாளையம் கிராமம் அருள்மிகு ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு ஆலய 48-ஆம் நாள் மண்டல பூர்த்தி திருவிழா அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், கும்பபடையல், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. வெகு விமர்சையாகநடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் 48- ஆம் நாள் மண்டல பூஜை விழாவில் கலந்துகொண்டு அம்பிகையின் பேரருளை பெற்றுக்கொண்டார்கள் .ஊர் பொதுமக்கள்,ஸ்ரீமோகன் சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப் பட்டது. தமிழ்நாடு இ பேப்பர்

செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## சின்னப்பாலத்தில் தீவிர மாணவர் சேர்க்கை பேரணி




**ராமநாதபுரம், மார்ச் 20:** மார்ச் 1 முதல் 2026-2027 கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைநடைபெற்று வருகிறது.

மாணவர் சேர்க்கை மற்றும் அரசின் கல்வி நலத்திட்டங்களை பெற்றோர்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், சின்னப்பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தீவிர மாணவர் சேர்க்கை பேரணி நடைபெற்றது.

பள்ளியின் தலைமையாசிரியை செல்லம்மாள் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார்.

முன்னாள் வார்டு உறுப்பினர் பாண்டியம்மாள், சமூக ஆர்வலர்கள் கிருபா, பாரதி, ராமு, தன்ராஜ் போன்றோர் முன்னிலை வகித்தனர்.

ஆசிரியை நிஷா வரவேற்றுப் பேசினார். பேரணி சின்னப்பாலம் பள்ளியிலிருந்து தொடங்கி, சின்னப்பாலம் வீதி வழியாக கடற்கரை சென்று அடைந்தது.ஆசிரியர் ஜெ.ஜே. லியோன் சேர்க்கைக்கான வாசகங்களை கோஷங்களாக எழுப்பி, மாணவர்களை வழிநடத்தினார்.

அரசின் கல்வி நலத்திட்டங்களான விலையில்லா பாடப் புத்தகம், நோட்டு, பயிற்சி புத்தகம், கிரேயான்ஸ், வண்ணப்பென்சில், வடிவியல் பெட்டி, அட்லஸ், காலணி, புத்தகப் பை, சீருடை, காலை உணவு, சத்துணவுடன் கூடிய முட்டை, பாசிப்பயறு 3 முதல் 8 வகுப்பு பயிலும் MBC மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை, SC மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, பெற்றோரை இழந்தோருக்கு கல்வி உதவி தொகை, தேசிய திறனறிவுத் தேர்வு, கலைத் திருவிழா, ஸ்மார்ட் வகுப்பறை, வைபை இணைப்பு, வகுப்பு தோறும் மின்விசிறி, வகுப்பிற்கு ஒரு ஆசிரியர், சுகாதாரமான கழிப்பறை, காற்றோட்டமான சுற்றுச் சூழல், கலையரங்கம் போன்ற வசதிகளை குறிப்பிட்டு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. ஆசிரியர்கள் சேர்க்கைக்கான துண்டு பிரசுரங்களை பெற்றோர்களிடம் வழங்கினர்.

நிறைவாக, ஆசிரியை சந்திரமதி நன்றி கூறினார். பேரணியில் பங்கு பெற்ற மாணவர்களுக்கு பிஸ்கட் வழங்கப்பட்டது. பேரணிக்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் மிக்கேல் ராணி, ஞான சௌந்தரி, லாரன்ஸ் எமல்டா, அமுதவள்ளி, பிரிஸ்கிலா, நான்சி, சிலோக்சனா, நாகேஸ்வரி போன்றோர் செய்திருந்தனர்.

## தருமபுரி மாவட்டத் தமிழ்க்கவிஞர் மன்றத்தின் செயற்குழுக் கூட்டம்



**தருமபுரி, மார்ச் 20:** தருமபுரி மாவட்டத் தமிழ்க்கவிஞர் மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் தருமபுரியில் தலைவர் பாவலர் கோ. மலர்வண்ணன் தலைமையில் நடைபெற்றது.

செயலர் தமிழ்மகன் ப. இளங்கோ வரவேற்புரை நிகழ்த்தினார். மன்றத்தின் செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வு செய்யப்பட்டது.

இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஞானப்பீட விருது பெற்ற கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தல் அகவை முதிர்ந்த தமிழறிஞர்க்கான உதவித்தொகை ஆணையைப் பெற்றுள்ள எழுத்தாளர்கள் கு. உதயசூரியன், தகடூர் மணிவண்ணன் ஆகிய இருவருக்கும் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தல் புதிய உறுப்பினர் சேர்க்கையை விரைவுபடுத்தவும் அதிகரிக்கவும் செய்தல் மன்றத்தின் தேர்தல் 24-05-2026 இல் நடத்துதல், திங்களொரு கவியரங்கம், தொடர்நூல் திறனாய்வு அரங்கம் தொடர்ச்சியாக நடத்துதல், புரவலர் நிதியாகப் பெற்றுள்ள ரூபாய் ஒரு லட்சம் ரூபாயை வைப்பு நிதிக் கணக்கில் இட்டு வைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கவிஞர் கூத்தப்பாடி மா. பழனி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இறுதியில் மன்றப் பொருளாளர் பாவலர் இரா. மதனகோபாலன் நன்றி நவில கூட்டம் நிறைவுற்றது.

## புஷ்ப பள்ளக்கு புறப்பாடு.



புஷ்கர் ஸ்ரீ ராம வைகுந்தநாத சன்னதி பிரம்மோற்சவம் 10 ம்நாள் புஷ்ப பள்ளக்கு புறப்பாடு.

## ஸ்ரீ வரதன் ஸ்ரீ பெருமாள் திருமலையிலிருந்து இறங்குதல்



காஞ்சி ஸ்ரீ வரதன் ஸ்ரீ பெருமாள் திருமலையிலிருந்து இறங்குதல் உடையார்பாளையம் உற்சவம்

## ஸ்ரீ கோதண்டராமர் பிரமோற்சவம்



திருப்பதி ஸ்ரீ கோதண்டராமர் பிரமோற்சவம் மூன்றாம் திருநாள் காலை சிம்ம வாகனம் புறப்பாடு.

## தொடக்கப் பள்ளியில் உலக நீர் தினவிழா..!



**வந்தவாசி, மார்ச் 20:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சி.ம.புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உலக நீர் தினவிழா பள்ளி தலைமை ஆசிரியர் ஆர்.நம்பெருமாள் மேற்பார்வையில் நடைபெற்றது. இதில் மாணவர்கள் நீரின் முக்கியத்துவம் மற்றும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு தகவல்களை பகிர்ந்தனர். சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளி ஆசிரியை பாரதி உள்ளிட்ட அனைத்து மாணவர்களும் பங்கேற்றனர்.

**பா. சீனிவாசன் வந்தவாசி.**

# சுற்றுலா: கேரளாவில் என்னவெல்லாம் செய்யலாம், பார்க்கலாம்: இது ஒரு வழிகாட்டி!

கேரளாவுக்கு சுற்றுலா செல்லும் சுற்றுலா பயணிகளே, கேரளாவில் என்னவெல்லாம் செய்யலாம், என்னவெல்லாம் செய்யக்கூடாது என்பன பற்றிய தகவல்களை இங்கு தெரிந்து கொள்ளுங்கள்.

தமிழகம் மற்றும் தென் கர்நாடகத்தில் இருக்கும் மக்களுக்கு மிகவும் சுற்றுலா என்றவுடன் எத்தனை இடங்கள் மனதுக்கு வந்தாலும், கேரளா என்றவுடன் நினைவுக்கு வருவது அங்குள்ள மலை வாழிடங்களும், கடற்கரை மற்றும் உப்பங்கழி காயல்களும்தான்.



கடவுளின் சொந்த தேசம் என்று அழைக்கப்படும் அழகிய கேரள தேசத்துக்கு பயணம் செய்பவர்கள் சில முக்கிய விசயங்களை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். அவற்றை தெரிந்து கொண்ட பின்னரே கேரளத்துக்கு பயணிப்பதை பற்றி சிந்திக்கவேண்டும் என்கிறது கேரள மாநிலத்தின் சுற்றுலா இணைய தளம். அட அப்படி என்னதான் சொல்றாங்கன்னு போயி பாத்தா, கேரளத்துக்கு பயணம் செய்பவர்கள் மனதில் கொள்ள வேண்டிய விசயங்கள்னு சில குறிப்புகளையும் எழுதி வச்சிருக்காங்க.. அவை என்னல்லாம்னுதான் இந்த பதிவுல நாம பாக்கப்போறோம்.

1 வானிலை

கேரளத்தின் வானிலையை நிச்சயம் மனதில் கொள்ள வேண்டும். வருடத்தின் குறிப்பிட்ட நான்கு மாதங்கள் மிக பலத்த மழை பெய்யும். இதனால் சுற்றுலா பயணிகள் கவனத்தில் கொள்ள வேண்டியது மழைக் காலத்தைப் பற்றி...



கேரளத்தின் மொத்த பகுதிகளும் மழையால் குளிரும் காலம் ஜூனில் தொடங்கும்.

ஜூன் ஜூலை

ஆகஸ்ட் செப்டம்பர்

இந்த நான்கு மாதங்களும் அளவுக்கு சற்று அதிகமாகவே மழை பெய்யுமாம். இதனால் மழைக்காலத்தை கவனத்தில் கொண்டு சுற்றுலாவுக்கு வரவேண்டும்.

2 பாதுகாப்பு உபகரணங்கள்

மழைக் காலம் என்றாலும் ஜூன் தொடங்கும் போது சுற்றுலா வருபவர்கள் மிக பாதுகாப்பாக இருக்கவேண்டும். குடை, கம்பளி ஆடைகள், குளிர் போக்கும் ஆடைகள் உள்ளிட்டவற்றை சுற்றுலாப் பயணிகள் மறவாது எடுத்து வருவது சிறந்தது. அப்படி ஒரு வேளை மறந்தாலும் நீங்கள் சுற்றுலாவின் போது நிச்சயமாக வாங்கி வைத்துக் கொள்வது சிறந்ததாகும்.

3 பணம். பரிவர்த்தனைகள்

கேரளத்துக்கு சுற்றுலாவுக்கு வரும் பயணிகள் கொண்டு வரும் பணத்துக்கு எந்த வரம்பும் இல்லை.

வங்கிகள் மற்ற இந்திய நகரங்களைப் போலவே காலை 10 மணி முதல் மாலை 3.30 மணி வரை செயல்படும். முதல் மற்றும் மூன்றாவது சனிக்கிழமைகளிலும் வங்கி செயல்படும்.

4 வருகை தருவதற்கான சிறந்த நேரம்

முன்னரே கூறியவாறு கேரளத்துக்கு செல்லும்போது மழைக் காலத்தைப் பற்றி தெரிந்து கொண்டு செல்லவேண்டும்.

ஜூன் ஜூலை ஆகஸ்ட்

ஆகியமாதங்களில் அதிக அளவு மழை இருக்கும். தமிழகத்தில் இந்த சமயத்தில் வெய்யில் வெளுத்து வாங்கும். இதனால் பல தமிழக சுற்றுலா பயணிகள் கேரளத்துக்கு சுற்றுலா செல்வது வாடிக்கை.

5 டிராவல் கிட்

நீங்கள் பயணத்தைத் தொடங்கும்போது முன்னரே பல விசயங்களைத் திட்டமிட்டு உங்களுக்குத் தேவையானவற்றை உடன் எடுத்துச் செல்லவேண்டும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### வங்கியில் வேலை வேண்டுமா..? உடனே விண்ணப்பிக்கவும்!

सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
1911 से आपके लिए ''केंद्रित'' "CENTRAL" TO YOU SINCE 1911

4500-க்கும் மேற்பட்ட கிளைகள், ரூ.7,74,000 கோடிக்கும் அதிகமான மொத்த வணிககள், 34000-க்கும் மேற்பட்ட திறமையான பணியாளர்களால் இயக்கப்படும் முன்னணி பொதுத்துறை வங்கியான சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில்(சிபிஐ) நிரப்பப்பட உள்ள 275 சிறப்பு அலுவலர் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் 23 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்கப்படுகின்றன.

மொத்த காலியிடங்கள்: 275

பணி: சிறப்பு அலுவலர்

தகுதி: பொறியியல் துறையில் பி.இ., பி.டெக்., எம்.சி.ஏ. முடித்திருப்பதுடன் 2 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விரிவான விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பை பார்த்து தெரிந்துகொள்ளவும்.

வயது வரம்பு: 31.1.2026 தேதியின்படி 30, 35, 45 வயதிற்குள் இருக்க வேண்டும். பதவியின் தன்மைக்கேற்ப வயதுவரம்பு மாறுபடுகிறது. அரசு விதிமுறைகளின்படி 3 முதல் 5 ஆண்டுகள் தளர்வு வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் தளர்வு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: ஆன்லைன் எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

தேர்வு மையம் (தமிழ்நாடு): சென்னை, மதுரை, திருச்சி, கோவை, வேலூர்.

விண்ணப்பிக்கும் முறை: https://www.centralbankofindia.co.in/en/recruitments என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 23.3.2026

## வீடுகளில் உயிரிழப்பு நிகழ்ந்தாலும் இறப்புக்கான காரணத்தை மருத்துவர் மூலம் உறுதி செய்து சான்றிதழ்

**சென்னை, மார்ச் 20:**

வீடுகளில் உயிரிழப்பு நிகழ்ந்தாலும், இறப்புக்கான காரணத்தை மருத்துவர் மூலம் உறுதி செய்து சான்றிதழ் வழங்குவதை செயல்படுத்த தமிழக பொது சுகாதாரத் துறை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 6.96 லட்சம் உயிரிழப்புகள் நிகழ்கின்றன. அதில், 23 சதவீதம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போதும், 73 சதவீதம் வீடுகளிலும் நடக்கிறது. 4 சதவீதம் எதிர்பாராத விபத்துகள் காரணமாக உள்ளது.

இந்நிலையில், இறப்புக்கான முழுமையான காரணங்களை கண்டறிந்து, அப்பகுதியில் முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகள் செய்யும் ஆய்வை தமிழக பொது சுகாதாரத்துறை மேற்கொண்டு வருகிறது.

இறப்புக்கான காரணங்கள் பதிவு: முதல்கட்டமாக, கரூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 2023-ம் ஆண்டுகளில் இறந்தவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. அதில், எவ்வித காரணமும் இன்றி, வயது மூப்பு காரணமாக இறந்தனர் என குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் படி, இறந்தவர்களின் வீடுகளுக்கு சென்று, இறப்புக்கான நோய் உள்ளிட்ட காரணங்கள் பதிவு செய்யப்படுகிறது.

விழிப்புணர்வு நடவடிக்கை

வரும் காலங்களில் வீடுகளில் இறந்தாலும், இறப்புக்கான காரணத்தை மருத்துவர் மூலமாக உறுதி செய்து சான்றிதழ் வழங்குவது கட்டாயமாக்கப்படும். இறந்தவர்களின் இறப்புகளை முறையாக பதிவு செய்யுமாறு அனைத்து சுகாதார அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த புள்ளி விபரங்கள் மூலம் ஒரு பகுதியில் அதிகப்படியாக இறப்புக்கான காரணத்தை கண்டறிந்து, அங்கு விழிப்புணர்வு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றனர்.

## வேளாண் பொருட்களுக்கு ஊக்கத் தொகை: மத்திய அரசின் உத்தரவுக்கு விவசாயிகள் சங்கம் கண்டனம்

**சென்னை, மார்ச் 20:**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலா மணி வெளியிட்ட அறிக்கை: கேரள மாநில எம்.பி. ஜான் பிரிட்டாஸ் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு, பதிலளித்த மத்திய நிதித் துறை அமைச்சகம், விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலைக்கு மேல் மாநில அரசுகள் எவ்வித கூடுதல் தொகையையும் வழங்கக் கூடாது என்று, அனைத்து மாநில தலைமை செயலர்களுக்கும் ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், கேரளா போன்ற மாநிலங்கள் தற்போது வழங்கி வரும் ஊக்கத் தொகையை நிறுத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டும். நாடு முழுவதும் 22 விளைபொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் எவ்வித தொகையையும் அரசு ஆதரிக்கவில்லை என்றும் மத்திய அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது. வேளாண் விளைபொருட்களுக்கான உற்பத்தி செலவு என்பது நாடு முழுவதும் ஒரே சீராக இருப்பதில்லை. மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும் நிலையில், முதலீட்டுக்கான வட்டி, குடும்ப உழைப்பு உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் கணக்கில் கொள்ளாமல், ஒரு பகுதியை மட்டும் கணக்கிட்டு அறிவிக்கப்படும் விலையால் விவசாயிகள் பெரும் இழப்பைச் சந்தித்து வருகின்றனர். இந்த இழப்பை ஈடுகட்டவே, அந்தந்த மாநில அரசுகள் தங்களின் நிதி நிலைமைக்கு ஏற்ப ஊக்கத் தொகைகளை வழங்குகின்றன. எனவே, விவசாயிகளைப் பாதிக்கும் இந்த உத்தரவை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## பொதுத் துறை வங்கிகளில் பணி: 'கிரெடிட் ஸ்கோர்' சிறப்பாக இருக்க வேண்டும் - மத்திய அரசு

**சென்னை, மார்ச் 20:**

பொதுத் துறை வங்கிகளில் பணியில் சேர விரும்புவோரின் கிரெடிட் ஸ்கோர் சிறப்பாக இருக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌதரி செவ்வாய்க்கிழமை எழுத்துபூர்வமாக அளித்த பதில்:

பொதுத் துறை வங்கிகளில் பல்வேறு பணியிடங்களுக்கு வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (ஐபிபிஎஸ்) நடத்தும் பொது ஆள்தேர்வுக்கு (சிஆர்பி) விண்ணப்பிக்கும் தேர்வர்கள், வங்கிகளிடம் கடன் பெறுவதற்கான தகுதியையும், அவ்வாறு கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனையும் சுட்டிக்காட்டும் கடன் புள்ளிகளை (கிரெடிட் ஸ்கோர்) சிறப்பாகப் பராமரிக்க வேண்டும்.

அவர்கள் குறைந்தபட்சம் எவ்வளவு கடன் புள்ளிகளை வைத்திருக்க வேண்டும் என்பது அந்த வங்கிகளின் கொள்கைக்கு ஏற்ப இருக்கும். இதில் அவ்வப்போது மாற்றம் செய்யப்படும். பணப் பரிவர்த்தனைகள், கடன் அளிப்பு நடைமுறை, வாடிக்கையாளர் கணக்குகளை கையாளுதல் போன்ற பணிகளில் ஈடுபடும் திறமைவாய்ந்த பணியாளர்கள், மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் பணத்தை கையாள வேண்டும் என்பதை உறுதி செய்யும் நோக்கில் இந்த நிபந்தனை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணத்தை கையாளும் பணியாளர்கள் கடன் விஷயத்தில் பொறுப்பானவர்களாக இருக்க வேண்டும் என்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம்.

கடந்த 3 ஆண்டுகளில் பொதுத் துறை வங்கிகளில் நியமிக்கப்பட்ட 20 பேரின் கடன் சார்ந்த விவரங்கள் திருப்தி அளிக்காத காரணத்தால், அவர்களின் பணி நியமனம் ரத்து செய்யப்பட்டது அல்லது பணி ஆணை திரும்பப் பெறப்பட்டது.

எனினும் கடன் புள்ளிகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பது வங்கிக் கணக்கு இல்லாத, வங்கியில் கடனே பெறாத தேர்வர்களுக்குப் பொருந்தாது என்று தெரிவித்தார்.

## அயோத்தி ராமர் கோவிலுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு வருகை

**அயோத்தி, மார்ச் 20:**

அயோத்தியில் வேத கணிதத்தின் அடிப்படையிலும், நேர்மறை ஆன்மீக ஆற்றலை உருவாக்கும் வகையிலும், பகவான் ராமரின் தெய்வீக இருப்பை உணர்த்தும் வகையிலும் யந்திரம் ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது. 150 கிலோ எடையுள்ள, தங்க முலாம் பூசப்பட்ட இந்தச் சதுர வடிவ உலோகத் தகட்டில், வேத மந்திரங்களும் 'பீஜ' மந்திரங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த யந்திரத்தை ஜனாதிபதி திரவுபதி முர்மு, ராமர் கோவிலில் பிரதிஷ்டை செய்ய உள்ளார். இதற்காக அவர் அயோத்தியில் உள்ள ராமர் கோவிலுக்கு இன்று வருகை தந்தார். அவரை முதல் மந்திரி யோகி ஆதித்யநாத், கவர்னர், துணை முதல் மந்திரி ஆகியோர் வரவேற்றனர். ஜனாதிபதியின் வருகையையொட்டி அயோத்தி நகரம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கோவில் வளாகத்திலும் நகரம் முழுவதும் 7,000-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், பதற்றமான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கூடுதல் படைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஓய்வுபெற்ற நீதிபதி வீட்டில் கியாஸ் சிலிண்டர்களை திருடிய கும்பல் - வைரல் வீடியோ



**போபால், மார்ச் 20:**

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றத்தால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. கியாஸ் சிலிண்டர் பதிவு செய்பவர்களுக்கு காலதாமதமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதேவேளை, தட்டுப்பாடு காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் கியாஸ் சிலிண்டர்களை பதுக்கி வைத்தல், திருடுதல் போன்ற சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், மத்தியபிரதேச மாநிலம் போபால் மாவட்ட கோர்ட்டு நீதிபதியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர் விமல் குமார். இவர் போபாலில் வசித்து வரும் நிலையில் அவரது வீட்டு பயன்பாட்டிற்காக 4 கியாஸ் சிலிண்டர்களை வீட்டு வாசலில் வைத்துள்ளார். கடந்த 14ம் தேதி இரவு விமல் குமார் வீடு அமைந்துள்ள பகுதியில் பைக்கில் வந்த 3 பேர் கொண்ட கும்பல் அவரின் வீட்டு வாசலில் வைத்திருந்த 4 கியாஸ் சிலிண்டர்களை திருடி சென்றனர். 4 கியாஸ் சிலிண்டர்களையும் அந்த கும்பல் பைக்கில் கடத்திச்சென்றது. இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது. இதையடுத்து, முன்னாள் நீதிபதி வீட்டில் கியாஸ் சிலிண்டர்களை திருடிச்சென்ற கும்பல் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# பங்குச்சந்தைகள் கடும் வீழ்ச்சி! சென்செக்ஸ் 2,500 புள்ளிகள் சரிவு! ரூ.13 லட்சம் கோடி இழப்பு!

**மும்பை, மார்ச் 20:**
இந்த வாரத்தில் 3 நாள் உயர்வுக்குப் பிறகு பங்குச்சந்தைகள் இன்று(மார்ச் 19, வியாழக்கிழமை) கடும் சரிவுடன் நிறைவடைந்துள்ளன.

மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் இன்று காலை 74,750.92 என்ற புள்ளிகளில் தொடங்கிய நிலையில் காலை அதிகபட்சமாக 2,000 புள்ளிகள் வரை சரிந்தது.

வர்த்தக நேர முடிவில் சென்செக்ஸ் 2,496.89 புள்ளிகள் குறைந்து 74,207.24 புள்ளிகளில் நிலை பெற்றது.

அதேபோல தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 775.65 புள்ளிகள் குறைந்து 23,002.15 புள்ளிகளில் வர்த்தகம் நிறைவு பெற்றது.

துறைரீதியாக நிஃப்டி ஆட்டோ பங்குகள் இன்று மோசமான சரிவைச் சந்தித்தன. அடுத்ததாக நிதி சேவைகள் மற்றும் ஐடி பங்குகளும் வீழ்ச்சி அடைந்தன.

கச்சா எண்ணெய் விலை உயர்வினாலும் இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு காரணமாகவும் பங்குச்சந்தைகள் இதுவரை இல்லாத அளவுக்கு இன்று கடும் வீழ்ச்சியடைந்தன.

வர்த்தக நேரத்தில் கச்சா எண்ணெய்விலை அதிகபட்சமாக 11 சதவீதம் உயர்ந்து 119.5 டாலராக இருந்தது. கத்தார், சௌதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட 9 நாடுகளின் எரிபொருள் உற்பத்தி மையங்களை குறிவைத்து ஈரான் நேற்றிரவு மிகப்பெரிய தாக்குதலை நடத்தியதால் வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றுமதி மேலும் பாதிக்கப்பட்டுள்ளதால் விலை உயர்ந்துள்ளது.



இன்றைய சரிவினால் முதலீட்டாளர்களுக்கு ரூ.13 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2024 ஜூன் மாதத்திற்குப் பிறகு நிஃப்டி கடும் சரிவைச் சந்தித்துள்ளது. அதேபோல பங்குச்சந்தைகளுக்கு இந்த ஆண்டின் மிக மோசமான சரிவு நாள் என்று கூறப்படுகிறது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இன்று வர்த்தக நேர இடையே மேலும் 49 பைசா சரிந்து 92.89 ஆக கடும் வீழ்ச்சியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## க்ரைம் கார்னர்

### பணம் இல்லாததால் பூண்டு மூட்டையை தூக்கிச் சென்றார்: கொள்ளையன் கைது

**சென்னை, மார்ச் 20:**
மளிகைக் கடைக்குள் புகுந்த கொள்ளையன், எதிர்பார்த்த பணம் இல்லாததால் அங்கிருந்த பூண்டு மூட்டையை திருடிச் சென்றார். மயிலாப்பூர், நடுத்தெருவில் உள்ள ஒரு வீட்டின் முதல் தளத்தில் பாஸ்கர் (52) என்பவர் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். அவர் அந்த வீட்டின் தரைத் தளத்தில் மளிகைக் கடை வைத்துள்ளார். கடந்த 16-ம் தேதி மதியம் மளிகைக் கடையை மூடி, வீட்டுக்குச் சாப்பிட்டுவிட்டு, கடைக்கு வந்து பார்த்தபோது, உள்ளே இருந்த மளிகைப் பொருட்கள் சிதறி 25 கிலோ பூண்டு மூட்டை திருடப்பட்டிருந்தது. இது தொடர்பாக, பாஸ்கர் அளித்த புகாரின் பேரில் மயிலாப்பூர் போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்து, கொள்ளையில் ஈடுபட்ட திருவல்லிக்கேணி, கபாலி நகரைச் சேர்ந்த முத்து (50) என்ற கொள்ளையனை கைது செய்தனர்.

மளிகைக் கடை கல்லாப்பெட்டியில் குறைந்த அளவு பணம் இருந்ததால் விரக்தியில் எதையாவது திருட வேண்டும் என்பதற்காக 25 கிலோ பூண்டு மூட்டையை திருடி, அதை ஆட்டோவில் கடத்திச் சென்றதாக போலீஸார் தெரிவித்தனர். இதையடுத்து, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய ஆட்டோவும் பறிமுதல் செய்யப்பட்டது. இவர் மீது ஏற்கனவே 10 திருட்டு வழக்குகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

### பிஹார் சிறுமி பாலியல் வன்கொடுமை: அசாம் மாநில இளைஞர் கைது

சென்னை: பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி 6 மாதங்களுக்கு முன்பு வேலை தேடி சென்னை வந்துள்ளார். அவர், சென்னை நீலாங்கரையில் தங்கியிருந்து, அங்குள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார்.

அப்போது, அங்கு பணியாற்றி வந்த அசாம் மாநிலத்தைச் சேர்ந்த ரூபன் (19) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில், கொட்டிவாக்கத்தில் உள்ள தனது வீட்டுக்கு சிறுமியை அழைத்துச் சென்ற ரூபன், அவரை பாலியல் வன்கொடுமை செய் ததாக கூறப்படுகிறது.இந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு அதே நிறுவனத்தில் பணிபுரியும் ரூபனின் நண்பரான நாகாலாந்தைச் சேர்ந்த ஆலன் உசேன் (19) என்பவரும் சிறுமியை வன்கொடுமை செய்துள்ளார். அது தொடர்பான வீடியோவை சமூக வலைதளங்களில் வெளியிடப்போவதாக இருவரும் சிறுமியை மிரட்டியுள்ளனர். இதில் பயந்துபோன சிறுமி, நீலாங்கரை மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன் அடிப்படையில் போக்சோ சட்டத்தின்கீழ் போலீஸார் வழக்கு பதிவு செய்து, ரூபனை கைது செய்தனர். தலைமறைவான ஆலன் உசேனை தேடி வருகின்றனர்.

### நடுக்கடலில் சிக்கிய 255 கிலோ போதைப் பொருள்: 6 பேர் கைது

**ராமேசுவரம், மார்ச் 20**
இந்தியப் பெருங்கடல் பகுதியில் 255 கிலோ போதைப் பொருள் கடத்திய 6 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

இலங்கையின் மேற்குப் பகுதியிலுள்ள பெருவேளையிலிருந்து 60 கடல் மைல் தொலைவில் இந்தியப் பெருங்கடலில் சந்தேகத்துக்கிடமாகச் சென்ற ஆழ்கடல் மீன்பிடிப் படகை இலங்கை கடற்படையினர் கண்டறிந்து ரோந்து கப்பல் மூலம் சுற்றி வளைத்தனர். சோதனையில் படகில் 255 கிலோ போதைப்பொருள் சிக்கியது. மேலும் படகிலிருந்த இலங்கையைச் சேர்ந்த 6 பேரை கடற்படையினர் கைது செய்தனர். பறிமுதல் செய்த போதைப் பொருளும், படகும் திக்கோவிட்ட கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டது. மேலும் இந்தப் போதைப் பொருள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டது, கடத்தலில் தொடர்புடையோர் குறித்து இலங்கை கடற்படையினர் விசாரித்து வருகின்றனர்.

இதுகுறித்து கடற்படையின் மேற்குப் பகுதி தளபதிரியர் அட்மிரல் ஜகத் குமார செய்தியாளர்களிடம் கூறியதாவது: இலங்கை கடற்படை தனது கடல்சார் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இதன் விளைவாக கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 7 முக்கிய கடத்தல் படகுகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

## விளையாட்டு செய்திகள்

### உலகக் கோப்பை ஹாக்கி அட்டவணை வெளியீடு: இந்தியா - பாகிஸ்தான் ஆக.19-ல் மோதல்



**புதுடெல்லி, மார்ச் 20:**
எப்ஐஹெச் ஹாக்கி உலகக் கோப்பை தொடர் வரும் ஆகஸ்ட் 14 முதல் 30-ம் தேதி வரை பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தில் நடைபெறுகிறது. இதில் ஆடவர் பிரிவில் 16 அணிகளும், மகளிர் பிரிவில் 16 அணிகளும் கலந்து கொண்டு பட்டம் வெல்ல மோதுகின்றன. இந்நிலையில் இந்த தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. தொடரில் கலந்து கொள்ளும் 16 அணிகளும் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம் பெற்றுள்ளன. ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா ‘டி’ பிரிவில் இடம் பெற்றுள்ளது. ஆடவருக்கான போட்டியில் ‘ஏ’ பிரிவில் நெதர்லாந்து, அர்ஜெண்டினா, நியூஸிலாந்து, ஜப்பான் அணிகளும் ‘பி’ பிரிவில் பெல்ஜியம், ஜெர்மனி, பிரான்ஸ், மலேசியா அணிகளும் இடம் பெற்றுள்ளன.

‘சி’ பிரிவில் ஆஸ்திரேலியா, ஸ்பெயின் அயர்லாந்து, தென் ஆப்பிரிக்கா அணிகளும், ‘டி’ பிரிவில் இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், வேல்ஸ் அணிகளும் இடம் பெற்றுள்ளன. மகளிருக்கான போட்டியில் ‘ஏ’ பிரிவில் நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, சிலி, ஜப்பான் அணிகளும் ‘பி’ பிரிவில் அர்ஜெண்டினா, ஜெர்மனி, அமெரிக்கா, ஸ்காட்லாந்து அணிகளும் ‘சி’ பிரிவில் பெல்ஜியம், ஸ்பெயின், நியூஸிலாந்து, அயர்லாந்து அணிகளும் ‘டி’ பிரிவில் சீனா, இங்கிலாந்து, இந்தியா, தென் ஆப்பிரிக்கா அணிகளும் இடம் பிடித்துள்ளன.

போட்டிகள் லீக் மற்றும் நாக் அவுட் முறையில் நடத்தப்படுகின்றன. லீக் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் இடம் பிடித்துள்ள அணி தனது பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். புள்ளிகள் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் 2-வது சுற்றுக்கு முன்னேறும். இந்த 8 அணிகளும் இ, எஃப் என 2 பிரிவுகளாக பிரிக்கப்படும்.

‘இ’ பிரிவில் லீக் சுற்றில் ஏ மற்றும் டி பிரிவில் முதல் 2 இடங்களை தலா 2 அணிகள் என மொத்தம் 4 அணிகள் இடம் பெறும். இதேபோன்று எஃப் பிரிவில் பி மற்றும் சி பிரிவில் முதல் 2 இடங்களை பிடித்த தலா 2 அணிகள் என 4 அணிகள் இடம் பெறும். ‘இ’ மற்றும் எஃப் பிரிவில் இடம் பெற்றுள்ள அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோதும். இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதி சுற்றுக்கு முன்னேறும். ஆடவருக்கான போட்டியில் ‘டி’ பிரிவில் உள்ள இந்திய அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் ஆகஸ்ட் 15-ம் தேதி வேல்ஸ் அணியுடன் மோதுகிறது. தொடர்ந்து 17-ம் தேதி இங்கிலாந்துடனும், 19-ம் தேதி பாகிஸ்தானுடனும் இந்திய அணி விளையாடுகிறது. மகளிருக்கான போட்டியில் இந்திய அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் 16-ம் தேதி சீனாவை எதிர்கொள்கிறது.

## தூத்துக்குடி மாணவி கொலை: கைதானவர் குறித்து முக்கிய தகவல்

**தூத்துக்குடி, மார்ச் 20:**
12-ம் வகுப்பு மாணவி கடந்த வாரம் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். மாணவி கொலைக்கு நீதி கேட்டு உடலை பெற மறுத்து உறவினர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தநிலையில்,

தூத்துக்குடி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சாயல்குடியை சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்பவரை கைது செய்துள்ளது காவல்துறை.

இந்த நிலையில், விளாத்திக்குளம் பிளஸ் 2 மாணவி கொலை வழக்கில் கைதானவர் குறித்து பகீர் தகவல் வெளியாகி உள்ளது. 2020-ல் எட்டயபுரம் கீழஈராலில் 60 வயது மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்து கொன்றவர் முனீஸ்வரன் என்பதும், மூதாட்டியை கொன்ற வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று பிணையில் வந்தபோது மற்றொரு கொலையும் செய்துள்ளார்.

வழக்கில் 2 ஆண்டுகள் கழித்து தர்ம முனீஸ்வரனை கைது செய்திருந்தது காவல் துறை. தர்ம முனீஸ்வரன், காவல் நிலையத்தில் கையெழுத்திடுவதற்காக வந்தபோது வேடநத்ததில் மாணவியை கொலை செய்துள்ளார் என்று போலீசார் தரப்பில் கூறப்படுகிறது.

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் போலீசாரின் கைது நடவடிக்கையைத் தொடர்ந்து மாணவியின் உடலைப் பெற குடும்பத்தினர் சம்மதம் என தகவல் வெளியாகி உள்ளது..

## தமிழகத்தில் 1 முதல் 9-ம் வகுப்பு வரை ஆண்டு இறுதித் தேர்வு எப்போது?

**சென்னை, மார்ச் 20:**
தமிழகத்தில் பிளஸ்-2 பொதுத் தேர்வு மார்ச் 2-ந் தேதியும், எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு மார்ச் 11-ந் தேதியும் தொடங்கி நடந்து வருகின்றன. இடையே, பிளஸ்-1 ஆண்டு இறுதித் தேர்வும் மார்ச் 3-ந் தேதி முதல் நடந்து வருகிறது.



இந்த நிலையில், 1 முதல் 9-ம் வகுப்பு வரையில் ஆண்டு இறுதித் தேர்வு எப்போது? என்ற எதிர்பார்ப்பு மாணவர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் இருந்து வந்தது. ஏற்கனவே, பள்ளி கல்வித் துறை வெளியிட்டுள்ள வருடாந்திர நாள்காட்டியில், 1 முதல் 9-ம் வகுப்பு வரை இறுதி பருவத் தேர்வுகள் ஏப்ரல் 10-ந் தேதி முதல் ஏப்ரல் 24-ந் தேதி வரை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால், தமிழ்நாட்டில் ஏப்ரல் 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதால், அதற்கு முன்னதாக பள்ளி தேர்வுகளை நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயம் பள்ளி கல்வித் துறைக்கு ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால், பெரும்பாலான பள்ளிகளில் வாக்குச்சாவடி மையங்கள் செயல்படும். அதனால், முன்கூட்டியே வகுப்பறைகளை தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்க வேண்டியது இருக்கும் என்பதால், முக்கூட்டியே 1 முதல் 9-ம் வகுப்பு வரையிலான ஆண்டு இறுதித் தேர்வை நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அனேகமாக, ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்வுகள் தொடங்கி, ஏப்ரல் 17-ந் தேதிக்குள் முடிக்க பள்ளி கல்வித்துறை முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. இது தொடர்பான, தேர்வுக்கால அட்டவணை தயாரிக்கப்பட்டு பள்ளி கல்வித் துறை செயலாளர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஓரிரு நாட்களில் 1 முதல் 9-ம் வகுப்பு வரையிலான ஆண்டு இறுதித் தேர்வு தேதி தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என்று துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தூத்துக்குடியில் ஏ.டி.எம். மையத்திற்கு கொண்டு சென்ற ரூ.30 லட்சம்: பறக்கும் படை சோதனையில் விடுவிப்பு

**சென்னை, மார்ச் 20:**
தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளன. அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்குப் பணம் அல்லது பரிசுப் பொருட்கள் கொண்டு செல்கிறார்களா? என்பது குறித்துத் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் ரொக்கப் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

நேற்று காலை தேர்தல் அதிகாரி ஜேனட் தலைமையிலான பறக்கும் படை குழுவினர், பண்டுகரை சாலையில் தீவிர வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு காரை மறித்துச் சோதனை செய்தபோது, அதில் ரூ.30 லட்சம் ரொக்கப் பணம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாகக் காரில் இருந்தவர்களிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். விசாரணையில், அவர்கள் தனியார் வங்கி ஊழியர்கள் என்பதும், புதுக்கோட்டையில் உள்ள தனியார் ஏ.டி.எம். மையத்தில் பணம் நிரப்புவதற்காக அந்தப் பணத்தைக் கொண்டு செல்வதும் தெரியவந்தது.

இதற்கான உரிய ஆவணங்கள் உள்ளதா? என்று அதிகாரிகள் கேட்டபோது, வங்கி ஊழியர்கள் டிஜிட்டல் முறையில் உரிய ஆவணங்களைக் காண்பித்தனர்.

அவற்றை அதிகாரிகள் முழுமையாகச் சரிபார்த்த பின்னர், ரூ.30 லட்சம் பணத்தை விடுவித்து வங்கி ஊழியர்களை அனுப்பி வைத்தனர்.

## வணிகச் செய்திகள்

### தங்கம் ஒரேநாளில் இருமுறை விலை குறைவு

**சென்னை, மார்ச் 20:**
சென்னையில் நேற்று (வியாழக்கிழமை) காலை கிராமுக்கு ரூ.270 குறைந்து ஒரு கிராம் ரூ.14,300-க்கு விற்பனை செய்யப்பட்டது. பின்னர், மாலை வேளையில் கிராமுக்கு மேலும் ரூ.400 குறைந்து ஒரு கிராம் ரூ.13,900-க்கு விற்பனையாகிறது. இன்று ஒரே நாளில் மட்டும் கிராமுக்கு ரூ.670 குறைந்துள்ளது. அதேபோல் ஒரே நாளில் பவுனுக்கு ரூ.5,360 குறைந்து ஒரு பவுன் ரூ.1,11,200-க்கு விற்பனையாகிறது.

இந்த விலை சரிவு நகை வாங்குவோர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தமிழகம் போன்ற மாநிலங்களில் இனி திருமண சீசன் என்பதால் இப்போதே நகையை வாங்கி வைத்துக் கொள்ள ஆர்வம் காட்டப்படுகிறது. தங்கம் விலை சரிவதைப் போல் வெள்ளி விலையும் குறைந்துள்ளது. வெள்ளியின் விலை இன்று ஒரு கிலோவுக்கு ரூ. 10,000 குறைந்துள்ளது. ஒரு கிராம் ரூ. 265-க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ. 2,65,000-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அதனால் இவை அவசரகால நடவடிக்கைகளை அமல்படுத்தியுள்ளன. தென் கொரியா கடந்த 30 ஆண்டுகளில் முதல் முறையாக பெட்ரோல், டீசலுக்கு அதிகபட்ச விலையை நிர்ணயித்துள்ளது.

## அதிகரிக்கும் வெப்பம்: பகலில் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் - சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

**சென்னை, மார்ச் 20:**
தமிழகத்தில் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் பகல் நேரங்களில் மக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. இது தொடர்பாக சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது;




* பகல் நேரங்களில் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்.

* முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வீட்டை விட்டு வெளியே வருவதை தவிர்த்துக் கொள்ளவும்

* கட்டட வேலை செய்வோர், புலம்பெயர் தொழிலாளர்கள் வெயிலில் பணியாற்ற வேண்டாம்.

* நீர்ச்சத்து குறைபாட்டால் வாந்தி, மயக்கம், உடல்சோர்வு ஆகியவற்றால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

* கட்டாய தேவைக்காக வெளியே செல்ல நேர்ந்தால், குடை எடுத்து செல்லவும்.

* வெளியே செல்ல நேரிட்டால், தளர்வான, வெளிர் நிற பருத்தி ஆடைகளை அணியவும். குடை, தொப்பி மற்றும் சன்கிளாஸ் பயன்படுத்தவும்.

* மது அருந்துதல், காபி, தேநீர் மற்றும் செயற்கை குளிர்பானங்களை உட்கொள்வதைத் தவிர்க்கவும்.

* வெயில் பாதிப்புகளில் இருந்து தப்பிக்க இளநீர், பழச்சாறு, நுங்கு அருந்தவும்.”

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதிய கல்விக் கொள்கையின்படி அறிமுகம்: சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு 2-வது பொதுத் தேர்வுக்கு விண்ணப்பம் தொடக்கம்



**புதுடெல்லி, மார்ச் 20:**

மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ளது. அதன்படி, இந்த ஆண்டு முதல், மத்திய இடைநிலைக் கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில், 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு, 2 முறை வாரியத் தேர்வுகளை எழுத வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு 2-வது பொதுத் தேர்வுகள் வரும் மே மாதம் நடைபெற உள்ளது.

இதில், அதிகபட்சமாக 3 பாடங்களுக்கு தேர்வு எழுதி, தங்களின் மதிப்பெண்களை உயர்த்திக் கொள்ளலாம்.

அதற்கு, வரும் 31-ந் தேதி வரை கட்டணம் செலுத்தி, முதல் கட்டமாக விண்ணப்பிக்கலாம்.

அல்லது 10-ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானதில் இருந்து, 5 நாட்களுக்குள் 2-ம் கட்டமாக விண்ணப்பிக்கலாம். அடுத்த 2 நாட்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்தி, 3-ம் கட்டமாகவும் விண்ணப்பிக்கலாம்.

அதே சமயம், முதல் கட்ட பொதுத் தேர்வில் பங்கேற்காத மாணவர்கள், 2-ம் கட்ட பொதுத் தேர்வில் பங்கேற்க அனுமதிக்கமாட்டார்கள் என்று சி.பி.எஸ்.இ. தெரிவித்துள்ளது.

## அசாம் சட்டசபை தேர்தல்; ஏப்ரல் 1,3 மற்றும் 6 ஆகிய 3 நாட்கள் பிரதமர் மோடி பிரசாரம்



**புதுடெல்லி, மார்ச் 20:**

அசாமில் முதல்-மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடந்து வருகிறது. மே 20-ந்தேதியுடன் அசாம் மாநில பதவி காலம் முடிவடையும். இந்நிலையில், 126 தொகுதிகளை கொண்ட அசாம் மாநிலத்திற்கு, ஏப்ரல் 9-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, ஏப்ரல் 1,3 மற்றும் 6 ஆகிய நாட்களில் அசாமில் தேர்தல் கூட்டங்களில் கலந்து கொண்டு மக்களிடம் உரையாற்றுவது என பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார்.

அசாமில் 3-வது முறையாக வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைக்கும் முனைப்பில் பா.ஜ.க. தேர்தல் பணியாற்றி வருகிறது. எனினும், பா.ஜ.க.வை வீழ்த்தி இந்த தேர்தலில் வெற்றி பெற காங்கிரஸ் கட்சியும் திட்டம் தீட்டி வருகிறது. இந்நிலையில், அசாமின் நகாவன் தொகுதியில் 2 முறை காங்கிரஸ் எம்.பி.யாக பதவி வகித்த பிரத்யுத் போர்டோலாய் தனது பதவியை நேற்று ராஜினாமா செய்து விட்டு, அசாம் முதல்-மந்திரி ஹிமந்தா பிஸ்வா சர்மா மற்றும் மாநில பா.ஜ.க. தலைவர் திலீப் சாய்கியா ஆகியோர் முன்னிலையில் பா.ஜ.க.வில் இணைந்துள்ளார். இது காங்கிரசில் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

## நள்ளிரவில் சுவர் ஏறி குதித்து பெண் வீட்டுக்குள் புகுந்த இன்ஸ்பெக்டர் பணி இடைநீக்கம்

**பெங்களூரு, மார்ச் 20:**


நள்ளிரவு மைசூரு அருகே உள்ள பகுதியில் இன்ஸ்பெக்டர் சந்தேஷ் ஒரு பெண்ணின் வீட்டின் சுவர் ஏறி குதித்து உள்ளே நுழைகிறார். இந்த காட்சி அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது. அந்த பெண்ணுடன் அவர் கள்ளத்தொடர்பில் இருந்ததாகக் கூறப்படுகிறது. தற்போது இந்த வீடியோ காட்சி சமூக வலைதளத்தில் வைரலானது. வழக்கு தொடர்பாக தன்னை பார்க்க வந்த பெண்ணை தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி இன்ஸ்பெக்டர் சந்தேஷ் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக தெரிகிறது. இதுமட்டுமன்றி, பாதிக்கப்பட்ட அந்த பெண்ணின் மகள் மீதும் தவறான எண்ணத்துடன் குறிவைத்ததாக கூறப்படும் ஆடியோ உரையாடல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இச்சம்பவம் குறித்து மங்களூரு போலீஸ் கமிஷனர் சுதீர்குமார் ரெட்டி தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டார். மேலும் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் யாராவது இருந்தால், எந்தவித அச்சமும் இன்றி துணிச்சலுடன் முன்வந்து புகார் அளிக்கலாம். அவர்களின் அடையாளம் காக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இதைதொடர்ந்து இன்ஸ்பெக்டரின் பாலியல் லீலை வீடியோ சமூக வலைதளத்தில் வைரலானதை தொடர்ந்து சந்தேஷை பணி இடைநீக்கம் செய்து கமிஷனர் உத்தரவிட்டார். மேலும் இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பான் கார்டுக்கு விண்ணப்பிக்க இனி ஆதார் மட்டும் போதாது - மத்திய அரசு அதிரடி

**புதுடெல்லி, மார்ச் 20:**




பான் கார்டு வருமான வரித்துறையால் வழங்கப்படும் முக்கிய அடையாள ஆவணமாகும். நிதி பரிவர்த்தனைகள், வருமான வரி செலுத்துதல் உள்ளிட்டவற்றுக்கு பான் கார்டு கட்டாயமாகும். 10 இலக்கங்கள் கொண்ட இந்த பான் கார்டை வருமான வரித்துறையின் கீழ் செயல்படும் இணையதளத்தில் விண்ணப்பித்து பெற முடியும். தற்போது வரை ஆதார் கார்டு மட்டும் இருந்தால் போதும். அதை வைத்து உடனடியாக பான் எண் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், இந்த விதிகளில் வரும் 1ஆம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இனி பான் கார்டு விண்ணப்பத்தின் போது பிறந்த தேதியை உறுதி செய்ய ஆவணமும் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தொடர்பாக மத்திய அரசின் பொது சேவை அமைப்பு கூறியிருப்பதாவது: "பான் கார்டுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை மேம்படுத்தப்பட்டுள்ளது. புதிய நடைமுறையின்படி ஆதார் அட்டையுடன் பிறந்த தேதியை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவசியம். மார்ச் 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்கும் நபர்களுக்கு ஆதார் மட்டுமே போதுமானது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறப்பு சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், பத்தாம் வகுப்பு கல்வி சான்றிதழ் உள்ளிட்ட ஏதேனும் ஒன்றை பிறந்த தேதிக்கான ஆவணமாக சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமையல் கியாஸ் சிலிண்டர் தீர்ந்து விடவில்லை; காத்திருங்கள்: மத்திய அரசு அறிவுறுத்தல்



**புதுடெல்லி, மார்ச் 20:**

பெட்ரோலிய அமைச்சக இணை செயலாளர் சுஜாதா சர்மா செய்தியாளர்களிடம் கூறியதாவது:- சமையல் கியாஸ்வினியோகம்தடைபட்டு இருக்கும்நிலையில், இயற்கை எரிவாயு வினியோகம் தடையின்றி நடந்து வருகிறது. எனவே சமையல் கியாஸ் பயன்பாட்டாளர்கள் தங்கள் அருகில்நகரஎரிவாயுவினியோக நெட்வொர்க் இருக்கும் இடங்களில், இயற்கை எரிவாயு இணைப்புக்கு மாற வேண்டும்.

அனைத்து பழைய விண்ணப்பங்களுக்கும் அனுமான அனுமதிகளை வழங்கினால் 10 சதவீதம் கூடுதல் வணிக கியாஸ் சிலிண்டர் வழங்குதல் உள்ளிட்ட சீர்திருத்தங்கள் தொடர்பாக மாநிலங்களுக்கு கடிதம் எழுதி இருக்கிறோம். இந்த சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் செல்வதும், ஒப்புதல்களை விரைவுபடுத்துவதும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பொறுப்பாகும். நாட்டின் எந்த பகுதியிலும் சமையல் கியாஸ் தீர்ந்து விடவில்லை. அதே நேரம் நிலைமை தொடர்ந்து மோசமாகிக்கொண்டே தான் இருக்கிறது. இறக்குமதி தடைபட்டிருப்பதே இதற்கு காரணம். சிலிண்டர்களுக்கான ஆன்லைன் முன்பதிவு 93 சதவீதமாக அதிகரித்து இருக்கிறது. ஆனால் சமையல் கியாஸ் நிறுவனங்களிடம் நுகர்வோர் வரிசை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்த வாடிக்கையாளர்கள் காத்திருக்க வேண்டும். உங்கள் வீட்டிலேயே சிலிண்டர் வினியோகிக்கப்படும். பதற்றத்துடன் முன்பதிவு செய்யவோ அல்லது வினியோகஸ்தர்களிடம் செல்லவோ தேவையில்லை. கியாஸ் சிலிண்டர்கள் மீதான அழுத்தத்தை தணிக்க, இயற்கை எரிவாயு இணைப்பை பயன்படுத்துமாறு வணிக நிறுவனங்கள் மற்றும் வீட்டு நுகர்வோரை அரசு ஊக்குவிக்கிறது.

இதற்காக நகர கியாஸ் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் வேகமாக இணைப்புகளையும் வழங்குகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.4 கோடியை தாண்டிய மருத்துவ கட்டணம் - கோமாவில் மகனை மீட்க 27 மாதமாக போராடும் பெற்றோர்!- கை விரித்த காப்பீடு நிறுவனம்

**மும்பை, மார்ச் 20:**



வாழ்க்கைக்கும் மரணத்துக்கும் இடையிலான நூலிழையில் ஊசலாடும் கோமா நோயாளிகளின் நிலை குறித்து ஹரிஷ் ரானா வழக்கு நாடு தழுவிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

தற்போது அதே போன்றதொரு உருக்கமான சூழலில், மும்பையைச் சேர்ந்த ஆனந்த் தீக்சித் (35) என்ற இளைஞர், கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக 'கோமா' எனப்படும் சுயநினைவற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். கடந்த 2013ல் மாடியில் இருந்து விழுந்து மூளை பாதிப்படைந்து, நீண்ட போராட்டத்துக்குப் பிறகு உச்ச நீதிமன்ற அனுமதியுடன் கருணைக் கொலை செய்யப்பட்ட ஹரிஷ் ரானாவின் நிழலாக தற்போது ஆனந்தின் வாழ்க்கையும் மாறியுள்ளது.

உயிருள்ள சடலமாக முடங்கிக் கிடக்கும் ஆனந்தின் துயரம் 2023ம் ஆண்டு டிசம்பர் 29ம் தேதி தொடங்கியது. கோரக்பூரில் தான் புதிதாக வாங்கிய ஸ்கூட்டரில் சென்ற போது ஏற்பட்ட விபத்து, அவரது வாழ்க்கையை புரட்டிப் போட்டது. அன்று முதல் உயிர்காக்கும் உபகரணங்களின் உதவியுடனும், குழாய் வழியாகச் செலுத்தப்படும் உணவுடனும் அவர் காலம் தள்ளி வருகிறார். கடந்த 27 மாதங்களாக ஆனந்தின் ஒரு சிறு அசைவுக்காக அவரது பெற்றோர், உறவினர்கள் காத்திருக்கின்றனர். இதுவரை மருத்துவக் கட்டணமாக மட்டும் ரூ. 4 கோடியை அவர்கள் செலவிட்டுள்ளனர். இந்தத் துயரத்துக்கு மத்தியிலும், மும்பை மாநகராட்சி அவர்கள் குடியிருந்த வீட்டை இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளது. கட்டிடத்தின் சட்டப்பூர்வ சிக்கல்கள் காரணமாக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையால், ஐசியூ-வில் மகனுக்காகப் போராடிக் கொண்டிருந்த பெற்றோர் தற்போது வாடகை வீட்டுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

காப்பீடு மற்றும் மருத்துவச் சட்டங்களில் மாற்றம் ஏற்படாத வரை இதுபோன்ற கோமா நோயாளிகளின் நிலை அந்த முழுக் குடும்பத்துக்குமான மரண தண்டனை என்பதற்கு ஆனந்தின் நிலையே தற்போது சாட்சியாக மாறி நிற்கிறது.

கைவிரித்த காப்பீட்டு நிறுவனம்: இது குறித்து ஆனந்தின் தந்தை கண்ணீருடன் கூறியதாவது: என் மகன் மீண்டும் ஒருமுறை 'அப்பா' என்று கூப்பிட மாட்டானா என்ற ஏக்கத்தில் என்னிடம் இருந்த அனைத்தையும் விற்றுவிட்டேன். மருத்துவமனை கட்டணங்கள் ஒருபுறம் எங்களைச் சூறையாட, மறுபுறம் 'கேர் ஹெல்த் இன்சூரன்ஸ்' நிறுவனம் எங்களது கோரிக்கையை நிராகரித்து எங்களைக் கடனாளியாக்கி விட்டது. நாங்கள் ஐசியூ-வில் மகனின் உயிருக்காகப் போராடிய போது, மாநகராட்சி கொஞ்சமும் மனசாட்சி இன்றி எங்களது வீட்டையும் இடித்து விட்டது.

நாங்கள் இப்போது நடுத்தெருவில் நிற்கிறோம். மகன் என்றாவது ஒரு நாள் கண் விழிப்பான் என்ற நம்பிக்கையில், அவனது கைக்கடிகாரத்தையும் அலைபேசியையும் இன்னும் அவரது தாயார் கையில் பத்திரமாக வைத்துள்ளார். அவர்கள் எங்களது வீட்டையும், பணத்தையும் பறித்திருக்கலாம். ஆனால், என் மகன் மீண்டும் வருவான் என்ற எங்களது நம்பிக்கையை மட்டும் யாராலும் பறிக்க முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 5 மாநில தேர்தல் பணியில் 25 லட்சம் அதிகாரிகள்; இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 20:**

நாட்டில் தமிழகம், கேரளா, புதுச்சேரி, அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் நடப்பு ஆண்டில் நடைபெற உள்ளது. இந்த நிலையில், தேர்தலுக்கான தேதி, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை தேர்தல் ஆணையம் கடந்த 15-ந்தேதி அறிவித்தது.

இதில், மே மாதம் 10-ந் தேதியுடன் தமிழக அரசின் பதவிக்காலம் நிறைவடைகிறது. இதேபோன்று, ஜூன் 15-ந்தேதி புதுச்சேரி, மே 7-ந்தேதி மேற்கு வங்காளம் மே 20-ந்தேதி அசாம், மே 23-ந்தேதி கேரள சட்டசபைக்கான பதவிக்காலம் முடிவடைகிறது. மேற்கு வங்காளம் தவிர பிற 4 மாநிலங்களுக்கும் ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்படும். இதேபோன்று, அனைத்து 5 மாநிலங்களுக்கான வாக்கு எண்ணிக்கை ஒரே நாளில் (மே 4-ந்தேதி) நடைபெற உள்ளது. 5 மாநிலங்களில் நடைபெற உள்ள தேர்தலில் மொத்தம் 17.4 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றவர்களாக உள்ளனர். வன்முறை, கலவரம் இன்றி சுமுகத்துடன் தேர்தல் நடைபெறுவதற்காக, 70 வாக்காளர்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் தேர்தல் அதிகாரி பணியமர்த்தப்படுவார்.

வாக்காளர்கள் அச்சமின்றி தங்கள் கடமையை நிறைவேற்ற, முற்றிலும் பாரபட்சமின்றி செயல்படும்படி தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது என தலைமை தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமார் குறிப்பிட்டு உள்ளார். 5 மாநில தேர்தல் பணியில் ஒட்டுமொத்தத்தில் 25 லட்சம் அதிகாரிகள் ஈடுபட உள்ளனர். அவர்களில் 15 லட்சம் பேர் தேர்தல் அதிகாரிகள் ஆவர். 8.5 லட்சம் பாதுகாப்பு படையினரும், 40 ஆயிரம் வாக்கு எண்ணிக்கை அதிகாரிகளும் பணியாற்றுவார்கள். 49 ஆயிரம் பேர் தேர்தல் கண்காணிப்பாளராகவும், 21 ஆயிரம் பேர் தேர்தல் பிரிவு அதிகாரிகளாகவும் , 15 ஆயிரம் பேர் வாக்கு எண்ணிக்கை கண்காணிப்பாளராகவும் மற்றும் பிற அதிகாரிகளும் பணியில் ஈடுபடுவார்கள்.

## 3,142 டெலிகிராம் சேனல்கள், 800 வலைதளங்கள் முடக்கம் - மத்திய அரசு

**புதுடெல்லி, மார்ச் 20:**

திருடப்பட்ட பொருளடக்கங்களை வெளியிட்ட 3,142 டெலிகிராம் சேனல்கள், 800 வலைதளங்கள் முடக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் புதன்கிழமை அளித்த பதில்: திரைப்படங்கள் திருட்டுத்தனமாகப் படம் பிடிக்கப்படுவதைத் தடுப்பதற்கான சட்ட வழிமுறைகள், ஒளிப்பதிவு திருத்தச் சட்டம் 2023-இன் 6ஏஏ, 6ஏபி ஆகிய பிரிவுகளின் கீழ் வலுப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பிரிவுகள் திரைப்படங்களை அனுமதியின்றி படம் பிடித்து பகிரப்படுவதைத் தடை செய்கிறது. இந்தப் பிரிவுகளை யாராவது மீறினால், அவருக்கு அந்தச் சட்டத்தின் 7(1ஏ) பிரிவின் கீழ், குறைந்தபட்சம் 3 மாதங்கள் சிறைத் தண்டனையுடன் ரூ.3 லட்சம் அபராதமும் விதிக்கப்படும். இந்தச் சிறைத் தண்டனையை 3 ஆண்டுகள் வரை நீட்டித்து, திரைப்பட தயாரிப்பின் மொத்த செலவில் 5 சதவீதத்தை அபராதமாக விதிக்க முடியும். இந்நிலையில், ஓடிடி தளங்கள், தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோருக்குச் சொந்தமான அல்லது உரிமம் பெற்ற பொருளடக்கங்களை, அவர்களின் அனுமதியின்றி பதிப்புரிமை சட்டம் 1957-ஐ மீறி வெளியிட்ட 3,142 சேனல்களை முடக்குமாறு தகவல் தொழில்நுட்பச் சட்டப் பிரிவு 79(3)(பி)-இன் கீழ் டெலிகிராம் நிறுவனத்துக்கு கடந்த மார்ச் 11-ஆம் தேதி தெரியப்படுத்தப்பட்டது. இதே காரணத்துக்காக சுமார் 800 வலைதளங்கள் இணையதள சேவை நிறுவனங்கள் மூலம் முடக்கப்பட்டன. தனியார் தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்படும் அனைத்து விளம்பரங்களும் கேபிள் தொலைக்காட்சி நெட்வர்க் ஒழுங்காற்றுச் சட்டம் 1995-இன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள விளம்பர விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். நிகழ்ச்சி விதிமுறை மற்றும் விளம்பர விதிமுறை மீறப்பட்டதாக எழும் புகார்களை விசாரிக்க, துறைகளுக்கு இடையிலான குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது என்று தெரிவித்தார்.

## இந்தியாவில் 40% பட்டதாரி இளைஞர்களுக்கு வேலையில்லை!

**புதுடெல்லி, மார்ச் 20:**

'இந்தியாவின் வேலைவாய்ப்பு நிலை' குறித்து கர்நாடகத்தின் பெங்களூரைச் சேர்ந்த அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு முடிவில் இந்த அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, நாட்டில் 20 முதல் 29 வயதுக்குள்பட்ட 6.3 கோடி பட்டதாரிகளில், சுமார் 1.1 கோடி பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர். குறிப்பாக, 15 முதல் 25 வயது வரையிலான இளம் பட்டதாரிகளிடையே வேலைவாய்ப்பின்மை விகிதம் 40 சதவீதமாகவும், 25 முதல் 29 வயது பிரிவினரிடையே 20 சதவீதமாகவும் உள்ளது. உயர்கல்வி பயிலுவோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்தாலும், அவர்களுக்குத் தேவையான அளவுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை என்பதே இந்நிலைக்கு முக்கியக் காரணமாகும். கடந்த 2004-05 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில், ஆண்டுதோறும் சராசரியாக 50 லட்சம் இளைஞர்கள் பட்டதாரிகளாக உருவான நிலையில், அவர்களில் வெறும் 28 லட்சம் பேருக்கு மட்டுமே வேலை கிடைத்ததாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. குடும்பச் சூழல் காரணமாகப் படிப்பைப் பாதியிலேயே கைவிடும் இளைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 2017-ஆம் ஆண்டில் 58 சதவீதமாக இருந்த இந்தப் போக்கு, 2023-இல் 72 சதவீதமாக உயர்ந்துள்ளது. குடும்ப வருமானத்தைப் பெருக்க இளைஞர்கள் உயர்கல்வியைத் தவிர்த்துவிட்டு, குறைவான ஊதியத்தில் முறைசாரா பணிகளுக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஊதிய நிலை, மாற்றங்கள்: ஊதிய விகிதத்தைப் பொருத்தவரை, கல்வி கற்காதவர்களைவிட பட்டதாரிகளின் தொடக்க கால ஊதியம் இருமடங்கு அதிகமாகவே உள்ளது. இருப்பினும், அண்மைக்காலமாக இளம் ஆண் பட்டதாரிகளுக்கான ஊதிய உயர்வு வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது.

## ஓராண்டில் 11,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்த டெல் நிறுவனம்!

**வாஷிங்டன், மார்ச் 20:**

கடந்த ஓராண்டில் மட்டும் 11,000 ஊழியர்களை டெல் நிறுவனம் பணிநீக்கம் செய்துள்ளது.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பல்வேறு காரணங்களைக் காட்டி அதிகளவில் பணி நீக்கங்களைச் செய்துகொண்டுவருகின்றது. இந்தநிலையில், நிறுவனத்தின் செயல்பாடுகளை நவீனமயமாக்குதல், செலவுகளைக் குறைத்தல், செய்யறிவு மேம்பாடு (ஏஐ) போன்ற காரணங்ளைக் காட்டி பிரபல தொழில்நுட்ப நிறுவனமான டெல் டெக்னாலஜிஸ் 2025 -26 ஆம் நிதியாண்டில் மட்டும் 11,000 ஊழியர்களைப் பணியிலிருந்து விடுவித்துள்ளது.

இந்தத் தகவல் நிறுவனத்தின் சமீபத்திய '10 - கே' அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த பணிநீக்கங்கள், நிறுவனத்தின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில்சுமார் 10சதவிகிதத்தைக்குறைத்துள்ளதாக அந்த அறிக்கையின் மூலம் தெரிய வந்துள்ளது.

இருப்பினும், இதுகுறித்து நிறுவனம் சார்பில் அதிகாரப்பூர்வமாக எந்த அறிவிப்பையும் வெளியிடாமல் அமைதியான முறையில் இந்த பணிநீக்க நிகழ்வு நடந்தேறியுள்ளது. மேலும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கும் வேளையில் இதுபோன்று ஆயிரக்கணக்கில் பணிநீக்கங்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஒவ்வொரு துளி ரத்தத்துக்கும் பழி தீர்க்கப்படும்: ஈரான் எச்சரிக்கை

**தெஹ்ரான், மார்ச் 20:**

ஈரானில் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டதற்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் ஒன்றிணைந்து தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரான் மீதான முதல் தாக்குதலிலேயே (பிப். 28) அந்நாட்டு தலைமை மதகுருவான அயதுல்லா கமேனி கொல்லப்பட்டார். தொடர்ந்து, நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஈரானின் முக்கிய தலைவர்களும் பலியாகினர். இந்த நிலையில், இஸ்ரேலின் தாக்குதலில் ஈரான் தேசிய பாதுகாப்புத் தலைவர் அலி லாரிஜானியும் (67) கொல்லப்பட்டார். ஈரானில் கமேனிக்கு அடுத்ததாக மிகவும் சக்திவாய்ந்த தலைவராக லாரிஜானி இருந்து வந்துள்ளார்.

லாரிஜானி கொல்லப்பட்டதையடுத்து, சிந்திய ஒவ்வொரு துளி ரத்தத்துக்கு உரிய முறையில் பழி தீர்க்கப்படும். இந்தத் தியாகிகளைக் கொலை செய்ததற்காக கொலையாளிகள் விரைவில் அதற்கான விலை கொடுக்க நேரிடும் என்று ஈரானின் தற்போதைய தலைமை மதகுருவான மோஜ்தபா கமேனி எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனிடையே, வளைகுடா நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருவதால், தாக்குதல் நிறுத்தப்படாவிட்டால், உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று சௌதி அரேபியா எச்சரித்துள்ளது.

## ஈரான் போர்: குடிநீர் பாட்டில் விலை உயர்வு!

ஈரான் போர் காரணமாக, பிளாஸ்டிக் மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு, பிளாஸ்டிக் பாட்டில்கள் விலையும் உயர்ந்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து போர் நடத்தி வரும்நிலையில், பிளாஸ்டிக் மூலப்பொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், பிளாஸ்டிக் பாட்டில்கள் விலை உயர்ந்துள்ளது. இதனால், குடிநீர் பாட்டில்களின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்த வாரம் வரையில் ரூ. 8-க்கு விற்கப்பட்ட 200 மி.லி. குடிநீர் பாட்டில் இன்று ரூ. 10-க்கும், ரூ.10-க்கு விற்கப்பட்ட 300 மி.லி. குடிநீர் பாட்டில் ரூ. 12-க்கும், ரூ.12-க்கு விற்கப்பட்ட 500 மி.லி. குடிநீர் பாட்டில் ரூ.16-க்கும், ரூ. 20-க்கு விற்கப்பட்ட ஒரு லிட்டர் பாட்டில் ரூ. 25-க்கும், ரூ. 30-க்கு விற்கப்பட்ட 2 லிட்டர் பாட்டில் ரூ. 35-க்கும், ரூ. 50-க்கு விற்கப்பட்ட 5 லிட்டர் பாட்டில் ரூ. 70 என்ற அளவிலும் உயர்ந்துள்ளது. மேலும், மீண்டும் பயன்படுத்தக்கூடிய கேன்களில் அடைக்கப்பட்ட 20 லிட்டர் குடிநீர் ரூ. 45-ல் இருந்து ரூ. 55-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. பொதுவாக, கச்சா எண்ணெய்யில் இருந்து தயாரிக்கப்படும் பெட்ரோ ரசாயன பொருள்கள் மூலமாகவே பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. ஈரான் போர் காரணமாக, பாலி எத்திலீன், பிவிசி, பாலி புரோப்பிலீன், பாலிஸ்டிரீன் போன்றவற்றின் விலை சுமார் 40 சதவிகிதம் உயர்ந்ததையடுத்து, பிளாஸ்டிக் பொருளிகள் விலையும் அதிகரித்துள்ளது.

## "கத்தாரின் எல்என்ஜி எரிவாயு மையம் மீண்டும் தாக்கப்படுமானால்..." - ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், மார்ச் 20:**



"கத்தாரின் எல்என்ஜி எரிவாயு மையம் மீண்டும் தாக்கப்படுமானால், ஈரானின் சவுத் பார்ஸ் எரிவாயு வயல் (*South Pars Gas Field*) முழுமையாக அழிக்கப்படும்," என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்ரூத் சோசியல் சமூக ஊடகப் பதிவில், "மத்திய கிழக்கில் நிகழ்ந்த சம்பவங்களால் ஏற்பட்ட கோபம் காரணமாக இஸ்ரேல் ஈரானில் உள்ள சவுத் பார்ஸ் எரிவாயு வயல் என்ற முக்கிய மையத்தின் மீது வன்முறைத் தாக்குதலை நடத்தியுள்ளது. சவுத் பார்ஸ் எரிவாயு வயல் எனப்படும் அமைப்பில் மிகச் சிறிய பகுதி மட்டுமே இத்தாக்குதலுக்கு உள்ளானது.

இந்த தாக்குதல் குறித்து அமெரிக்காவுக்கு முன்னரே எதுவும் தெரிந்திருக்கவில்லை. மேலும், கத்தார் நாடு இத்தாக்குதலில் எந்த வகையிலும் எந்த வடிவிலும் சம்பந்தப்படவில்லை. அத்தாக்குதல் நிகழப்போகிறது என்பது குறித்தும் அந்நாட்டுக்கு சிறிதும் தெரிந்திருக்கவில்லை. துரதிருஷ்டவசமாக, ஈரானுக்கு இந்த உண்மைகளோ அல்லது சவுத் பார்ஸ் தாக்குதல் தொடர்பான வேறு எந்த முக்கிய விவரங்களோ தெரிந்திருக்கவில்லை.

இதன் காரணமாக எவ்வித நியாயமும் இன்றி, அநீதியான முறையில் கத்தாரின் எல்என்ஜி எரிவாயு மையத்தின் ஒரு பகுதியை ஈரான் தாக்கியுள்ளது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் மதிப்புமிக்கதுமான இந்த சவுத் பார்ஸ் எரிவாயு வயல் மீது இஸ்ரேல் இனிமேல் எவ்விதத் தாக்குதலையும் நடத்தாது. ஒருவேளை ஈரான் அறிவீனமாகச் செயல்பட்டு முற்றிலும் நிரபராதியான கத்தார் நாட்டை மீண்டும் தாக்கத் துணிந்தால் நிலைமை மாறும்.

கத்தார் மீது ஈரான் தாக்குதல் நடத்த துணிந்தால், இஸ்ரேலின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ அமெரிக்கா, சவுத் பார்ஸ் எரிவாயு வயல் மீது ஈரான் இதுவரை கண்டிராத அளவில் தீவிர சக்தியுடனும் வல்லமையுடனும் தாக்கி முழுமையாக அழிக்கும். ஈரானின் எதிர்காலத்தின் மீது இது ஏற்படுத்தக்கூடிய நீண்ட காலத் தாக்கங்களைக் கருத்தில் கொண்டு இத்தகைய தீவிர வன்முறை மற்றும் அழிவை நான் அங்கீகரிக்க விரும்பவில்லை. எனினும், கத்தாரின் எல்என்ஜி மையம் மீண்டும் தாக்கப்படுமானால், அதைச் செய்ய நான் சிறிதும் தயங்க மாட்டேன்" என தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது தாக்குதலைத் தொடங்கின. ஈரானின் எண்ணெய் வள இலக்குகள் குறிவைக்கப்பட்டு தாக்கப்படுகின்றனர். இதற்கு பதிலடியாக ஈரான், வளைகுடா நாடுகள் உட்பட பிராந்தியம் முழுவதும் ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியதால், சர்வதேச அளவில் எரிசக்தி சந்தைகள் அதிர்ச்சியில் உள்ளன.

## அமெரிக்க ஆதரவாளர்கள்..! ஈரானில் மேலும் 3 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்!

**தெஹ்ரான், மார்ச் 20:**

ஈரானில், குற்றவழக்குகளில் கைதான மேலும் 3 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில், கடந்த ஜனவரி மாதம் அரசுக்கு எதிராக நடைபெற்ற மாபெரும் மக்கள் போராட்டத்தில் வெடித்த வன்முறைகளில், ஏராளமான போராட்டக்காரர்கள் மற்றும் அரசுப் படையினர் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயல்பட்டதாகவும், காவல் துறை அதிகாரிகளைக் கொலை செய்த குற்றத்திற்காகவும் கைது செய்யப்பட்ட 3 பேருக்கு வியாழக்கிழமை (மார்ச் 19) மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுபற்றி, ஈரான் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயல்பட்டது மற்றும் காவல் துறை அதிகாரிகளைக் கொலை செய்தது ஆகிய குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட 3 பேர் தூக்கிலடப்பட்டனர்" எனக் கூறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, ஈரானின் ராணுவக் கட்டமைப்புகள் குறித்து தகவல்களைச் சேகரித்து இஸ்ரேலின் உளவாளிப் பிரிவான மொசாத் அமைப்பிற்கு வழங்கிய குற்றத்திற்காக, கௌரௌஷ் கெய்வானி என்பவருக்கு புதன்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது

## இஸ்ரேல் முதல் கத்தார் வரை...! 9 நாடுகளை தாக்கிய ஈரான்!

**தெஹ்ரான், மார்ச் 20:**

இஸ்ரேல், கத்தார், சௌதி அரேபியா உள்பட 9 நாடுகள் மீது டிரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை ஈரான் புதன்கிழமை நடத்தியுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையே போர் தொடங்கிய 19 நாள்களில் மிகப் பெரிய தாக்குதலை ஈரான் நடத்தியுள்ளது.

ஈரானுடனான போரில் முக்கிய திருப்பமாக அந்நாட்டின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி முனையமான கார்க் தீவின் மீது கடந்த வாரம் மிகப்பெரிய தாக்குதல் நடத்திய அமெரிக்கா, அங்கிருந்த ராணுவ நிலைகளை முற்றிலுமாக அழித்தது.

இதனிடையே, கடந்த 2 நாள்களில் ஈரானின் முக்கிய தலைவர்களான தேசிய பாதுகாப்புச் செயலாளர் அலி லார்ஜானி உள்பட மூவர் அமெரிக்காவால் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், புதன்கிழமை ஒரே நாளில் வளைகுடாவின் 9 நாடுகள் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில், உலகின் மிகப்பெரிய எரிசக்தி உற்பத்தி மையமான ராஸ் லஃபான் எரிசக்தி மையத்தின் மீது 14 பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி ஈரான் நடத்திய தாக்குதலில் மிகப்பெரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மத்திய இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மூவருக்கு லேசான காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தை குறிவைத்து 6 பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் 21 ட்ரோன்கள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. இவை அனைத்தையும் இடைமறித்ததாக அந்நாட்டு அரசு அறிவித்தாலும், எரிசக்தி ஆலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்படலாம் என அச்சுறுத்தல் நிலவுவதால் பணிகளை நிறுத்தியுள்ளனர்.

இதேபோல், சௌதி அரேபியாவில் நடத்தப்பட்ட தாக்குதலை தொடர்ந்து எண்ணெய் சுத்தகரிப்பு ஆலைகள் மற்றும் பெட்ரோலிய ரசாயன ஆலைகளில் இருந்து பணியாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மேலும், பஹ்ரைன், ஜோர்டான், குவைத் நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களை குறிவைத்து பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஈரான் ஏவியுள்ளது.

ஓமனின் தொழிற்சாலை மீது ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலில் தொழிலாளர்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, ஈரானின் தெற்கு பார்ஸின் உள்ள உலகின் மிகப்பெரிய எரிவாயு நிலையத்தை இஸ்ரேல் தாக்கியதில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கடந்த 19 நாள்களில் 500-க்கும் மேற்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணைகள், 2,000 ட்ரோன்கள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

## இந்தியா - பாகிஸ்தான் இடையே அணு ஆயுத மோதல் அபாயம்: அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை

**வாஷிங்டன், மார்ச் 20:**

இந்தியா - பாகிஸ்தான் இடையே அணு ஆயுத மோதல் அபாயம் இருப்பதாக அமெரிக்க உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெற்காசியாவில் நிலவி வரும் அச்சுறுத்தல் குறித்த அறிக்கையில் அமெரிக்க செனட் சபையில் அந்நாட்டு உளவுத் துறை சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையில், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான மோதல், அச்சுறுத்தல் குறித்தும் 34 பக்க ஆவணங்களும் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்க உளவுத் துறை அறிக்கையின்படி, "கடந்த காலங்களில் இந்த இரு (இந்தியா - பாகிஸ்தான்) நாடுகளும் நேருக்குநேர் மோதிக் கொண்டதால், பதற்றம் அதிகரித்து, அணு ஆயுத மோதல் உருவாகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலும், இரு நாடுகளுக்கிடையேயான பகைமையை எடுத்துக்காட்டும் உதாரணம்.

இந்தப் போரில் அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் தலையீட்டால், இரு நாடுகளுக்கிடையேயான அணு ஆயுத மோதல் பதற்றம் முடிவுக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து, இரு நாடுகளும் போரை முடிவுக்குக் கொண்டு வந்தன.

இருப்பினும், பயங்கரவாத அமைப்பினரால் புதிய நெருக்கடிகள் ஏற்படும் அபாயமும் உள்ளது.

இரு நாடுகளும் வெளிப்படையான போரைத் தீவிரமாக முன்னெடுக்காத நிலையிலும், கடந்த காலத்தின் பகைமைகள், பயங்கரவாதம், வளர்ந்து வரும் ராணுவத் திறன்கள் ஆகியவை நெருக்கடிகளைத் தூண்டுவதாய் உள்ளன. பாகிஸ்தான் தனது ஏவுகணைத் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அதிக தொலைவு செல்லக்கூடிய மற்றும் அதிநவீன அமைப்புகளையும் பாகிஸ்தான் உருவாக்கி வருகிறது.

தெற்காசியாவுக்கு அப்பால் உள்ள இலக்குகளைத் தாக்கும் அளவுக்கு திறன்கொண்ட ஏவுகணைகளை உருவாக்கும் போக்கு தொடர்ந்தால், அமெரிக்காவை தாக்கக்கூடிய அளவுக்கு கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் அச்சுறுத்தலும் ஏற்படும்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

## இந்தியாவின் தொடர் முயற்சிகளால் குழந்தை இறப்பு விகிதம் குறைவு: ஐ.நா.

**வாஷிங்டன், மார்ச் 20:**

இந்தியாவின் தொடர் முயற்சிகளால் உலக அளவில் குழந்தை இறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளதாக ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

குழந்தை இறப்பை கணக்கிடும் ஐ.நா. குழு (யுஎன்ஐஜிஎம்இ) அறிக்கை-2025 அண்மையில் வெளியானது.

அதில், பச்சிளம் குழந்தைகள் மற்றும் 5 வயதுக்குள்பட்ட குழந்தைகளின் இறப்பைக் கட்டுப்படுத்த இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட விரிவான-நிலையான நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டன.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: தெற்காசிய பிராந்தியத்தில் குழந்தை இறப்பு விகிதத்தை குறைப்பதில் இந்தியா முக்கியப் பங்காற்றுகிறது.

இந்தப் பிராந்தியத்தில் 1990-களில் இருந்து 5 வயதுக்குள்பட்ட குழந்தை இறப்பு 76 சதவீதம் குறைந்துள்ளது. 2000-இல் இருந்து 68 சதவீதம் சரிவடைந்துள்ளது.

2000-ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 92 இறப்புகள் பதிவான நிலையில் 2024-இல் 32 இறப்புகளாக குறைந்துள்ளது. இது மருத்துவமனை உள்கட்டமைப்பு, மருத்துவமனைகளில் முறையான பிரசவ சிகிச்சைகளை அதிகரிப்பதற்கான திட்டங்கள், குழந்தைகளுக்கான தடுப்பூசி முகாம்கள் விரிவாக்கம் என குழந்தைகள் சுகாதார நலனில் இந்தியா மற்றும் தெற்காசிய பிராந்தியம் மேற்கொண்ட முன்னெடுப்புகளை வெளிக்காட்டுகிறது.

இந்தியாவின் பிரத்யேக திட்டங்கள்: ஜனனி சுரக்ஷா திட்டம், ஜனனி சிசு சுரக்ஷா கார்யகரம், பச்சிளம் குழந்தைகளுக்கான சிறப்புப் பிரிவுகள் (எஸ்என்சியு), டெலி எஸ்என்சியு போன்ற எண்ம முன்னெடுப்புகளை இந்தியா சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. இதனால் இந்தியாவில் 5 வயதுக்குள்பட்ட குழந்தை இறப்பு விகிதம் 1990-இல் 127-ஆக இருந்த நிலையில், 2024-இல் 26.6-ஆக குறைந்துள்ளது. 2024-இல் குழந்தை இறப்பு விகிதம் (ஐஎம்ஆர்) இந்தியாவில் 23.3-ஆக குறைந்துள்ளது.

1990-இல் இந்தியாவில் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (என்எம்ஆர்) 57-ஆக இருந்த நிலையில் 2024-இல் 17-ஆக குறைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது,

## அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியுள்ளோர் சொந்த நாடு திரும்ப இலவச விமான டிக்கெட், ரூ.2.41 லட்சம் போனஸ்

**வாஷிங்டன், மார்ச் 20:**



அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிப்பவர்களை அந்நாட்டு அரசு அவர்களது சொந்த நாடுகளுக்கு நாடு கடத்தி வருகிறது. இந்நிலையில் நேற்று ஒரு புதிய திட்டத்தை அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

ஆவணங்கள் இல்லாத இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசித்து வருவோர் இலவசமாக தங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதற்காக இந்த திட்டத்தை அமெரிக்காவின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் தாஜ்மஹாலின் புகைப்படத்தை அந்தத் துறை பயன்படுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை சமூக வலைதளத்தில், "நீங்கள் ஒரு புதிய தொடக்கத்துடன் உங்கள் தாய் நாட்டுக்கு செல்லலாம்.

சிபிபி ஹோம் என்ற செல்போன் செயலியைப் பயன்படுத்தி நீங்களாகவே உங்கள் நாட்டுக்கு செல்ல முன்வரும் போது இலவச விமான டிக்கெட் மற்றும் வெளியேறுவதற்கான 2,600 அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ.2.41 லட்சம்) போனஸ் தொகையைப் பெற்றிடுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளது. இந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு வருவோருக்கு எந்தவித சட்டச் சிக்கலும் இல்லாமல் அவர்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஆவணமின்றி சட்டவிரோதமாகத் தங்கியிருப்போரை கண்காணிப்பதற்கான செலவுகளைக் குறைக்கவும், காவல், நீதித்துறை அமைப்புகளின் மீதான அழுத்தத்தைக் குறைக்கவும், அதே நேரத்தில் முறைசார்ந்த நாடு கடத்தலுடன் தொடர்புடைய சட்டரீதியான தண்டனைகளைத் தனி நபர்கள் தவிர்க்கவும் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் இந்தியாவிலுள்ள தாஜ்மஹால் புகைப்படத்தை அச்சடித்துள்ளனர். இந்தத் திட்டத்தை வரவேற்கும் சிலர், தாஜ்மஹால் புகைப்படத்தை இந்தத் திட்டத்துக்கான அறிவிப்பில் அச்சிட்டது ஏன் என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும், சுய நாடு கடத்தல் திட்டத்தின் மூலம் பணம் வழங்குதல் மற்றும் இலவசப் பயணத்துக்கான சலுகைகள் இக்கட்டான சூழலில் இருப்பவர்களை ஈர்க்கக் கூடும் என்று குறிப்பிட்டாலும், இத்தகைய திட்டங்கள் நீண்ட கால விளைவுகளை மறைக்கக்கூடும் என்று குடியேற்றப் பிரிவு வழக்கறிஞர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



# இந்தியாவின் மின்சார துறையில் முதலீடு செய்ய சர்வதேச முதலீட்டாளர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு

# யார் என்ன அவதூறு பரப்பினாலும் நம்பாதீர்கள்



# அதிகரிக்கும் வெப்பம்: பகலில் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்

# பான் கார்டுக்கு விண்ணப்பிக்க இனி ஆதார் மட்டும் போதாது - மத்திய அரசு அதிரடி

# திமுகவில் இணைந்தார் ரஞ்சனா நாச்சியார்!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 20.03.2026 வெள்ளிக்கிழமை | இலவச இ-பேப்பர்